
கல்கி
KALKI நவம்பர் 28, 1954
4



# கலிபோர்னியன் பாப்பி

*பெர்ப்யூம்*

இராஸ்மிக் கம். லிட்., லண்டனுக்காக இந்தியாவில் தயாரித்தது. CPP. 5-50 TM

# கல்கி பொருளடக்கம்

மலர் 14
இதழ் 18

1954 நவம்பர் 28

ஜய ஆண்டு
கார்த்திகை 13

| | | | |
|---|---|---|---|
| நாகபுரியில் கூடுகிறார்கள் | (தலையங்கம்) | ... | 3 |
| கார்ட்டூன் கதம்பம் | ரகு | ... | 4 |
| கலை வளர்க்கிறார்கள்! | ... | ... | 6 |
| சினிமாவில் செய்திப் படங்கள் | ... | ... | 7 |
| ஒன்றுக்கு இரண்டு ஒப்பந்தம்! | ... | ... | 8 |
| பனித் துளி | ... | ... | 9 |
| நமது இலங்கைக் கடிதம் | ரஜனி | ... | 10 |
| அமரதாரா | கல்கி | ... | 12 |
| புது மாப்பிள்ளை | ஜெயலக்ஷ்மி | ... | 27 |
| தங்க மாம்பழம் (பாப்பா மலர்) | ராஜி | ... | 35 |
| ஹாஸ்யக் களஞ்சியம் | சாமா | ... | 42 |
| சக்கரவர்த்தித் திருமகன் | ராஜாஜி | ... | 44 |
| படித்துப் பாருங்கள்! | ... | ... | 53 |
| வஸந்தாவின் விவாகம் | பி. எஸ். மணி | ... | 55 |
| கோகிலா | ரமண்லால் தேசாய் - ரா. வீ. | ... | 61 |
| மழையும் மணமும் | கோமதி சுவாமிநாதன் | ... | 70 |
| எங்களூர்ப் பஞ்சாயத்து | ... | ... | 75 |
| நல்ல வழி | இல்லைவாசி | ... | 80 |
| பையைத் திறந்தான்! | காக்கா | ... | 88 |

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

கல்கி

மலர் 14

தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார்

இதழ் 18

# நாகபுரியில் கூடுகிறார்கள்

பாரத நாட்டின் சமுதாய வாழ்வு சோஷலிஸக் கொள்கையின் அடிப்படையில் அமைய வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். பண்டித ஜவாஹர்லால் நேருவும் அவ்விதமே ஆசைப்படுகிறார். அதை வெளியிட்டுச் சொல்லவும் செய்கிறார். பொது மக்களில் பெரும் பாலோரும் அந்த இலட்சியத்தையே ஆதரிக்கிறார்கள்.

ஆனாலும் அந்த இலட்சியம் இன்னும் வெகு தூரத்திலேயே இருந்து வருகிறது. நெருங்கி வருவதாகத் தெரியவில்லை. இலட்சியம் கைகூடுவதற்குத் தடைகளும் இடையூறுகளும் எவ்வளவோ இருக்கின்றன.

சோஷலிஸத்தை உடனடியான இலட்சியமாகக் கொண்ட கட்சி ஒன்றும் நம் நாட்டில் இருக்கிறது. தற்போது பிரஜா-சோஷலிஸ்ட் கட்சி என்ற பெயர் பூண்டிருக்கிறது. இந்தக் கட்சி வலுப்பெற்று வளர்ந்து சந்தர்ப்பம் வாய்க்கும்போது அரசாங்கத்தை ஏற்று நடத்தும் ஆற்றல் உள்ளதாக வேண்டுமென்று பலரும் விரும்புகிறார்கள். இந்த விருப்பம் நிறைவேறும் என்பதற்கு அறிகுறி சில காலத்துக்கு முன்பு அதிகமிருந்தது; சமீபத்தில் அந்த நம்பிக்கை குறைந்து வருகிறது என்பதை வருத்தத்துடன் குறிப்பிடவேண்டி யிருக்கிறது.

உயர்ந்த இலட்சியங்கள் உள்ள அரசியல் கட்சிகள் சில சமயம் கடும் சோதனைக்குள்ளாவது இயற்கை. இலட்சியவாதிகள் அடிக்கடி ஆத்ம பரிசோதனை செய்து கொள்வதும் அவசியமாகும்.

பிரஜா-சோஷலிஸ்ட் கட்சியினர் நாகபுரியில் இம்மாதம் 26-ந் தேதி கூடுகிறார்கள். பிரஜா-சோஷலிஸ்ட் கட்சி சமீப காலத்தில் பலவீனமடைந்து வருவதின் காரணங்களை அவர்கள் ஆராய்ந்து அறியப் பிரயத்தனம் செய்ய வேண்டும்.

* * * *

ஒரு அரசியல் கட்சியின் செல்வாக்கை அக் கட்சியில் எத்தனை அங்கத்தினர் சேர்ந்திருக்கிறார்கள் என்பதைக் கொண்டு மட்டும் மதிப்பிடக் கூடாது.

அல்லது சட்டசபையில் அதற்கு எத்தனை பிரதிநிதிகள் இருக்கிறார்கள் என்பதை வைத்துக் கொண்டும் மதிப்பிட முடியாது.

இங்கிலாந்தில் சில சமயம் தொழிற்கட்சி இருந்தவிடந் தெரியாமல் மறைந்து போய் விடலாம் என்ற நிலைமை ஏற்பட்டதுண்டு. பிறகு புத்துயிர் பெற்று எழுந்து அரசாங்கத்தையே நடத்தக் கூடிய செல்வாக்கை அடைந்ததும் உண்டு.


ஆகையால் பிரஜா-சோஷலிஸ்ட் கட்சி சமீபத்தில் நடந்த தேர்தல்களில் வெற்றி பெறவில்லை யென்பதினாலேயே அதன் பலம் குன்றி விட்டது என்று நாம் கருதவில்லை.

ஒரு கட்சியின் நிரந்தரமான செல்வாக்கு அதன் இலட்சியங்களையும், அதை நடத்தும் தலைவர்களின் மன உறுதியையுமே பொறுத்திருக்கிறது.


பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தோடு காங்கிரஸ் போராடிய காலத்தில் பலமுறை படு தோல்வி அடைந்து விட்டதாகத் தோன்றியதுண்டு. ஆனால் காந்திஜி, நேரு, பட்டேல் முதலிய ஒப்பற்ற தலைவர்களின் மன உறுதியினால் முடிவில் மகத்தான வெற்றி யடைந்தது.

இன்றையதினம் பிரஜா-சோஷலிஸ்ட் கட்சித் தலைவர்கள் ஒரு சிலரே இருந்தாலும், அவர்கள் இலட்சியத்தில் சிறிதும் விட்டுக் கொடுக்காமல் உறுதியாக நின்றால், நாளையோ மறு நாளோ சோஷலிஸ்ட் கட்சி நல்ல பலம் பெற்றுக் காங்கிரஸுக்குச் சரியாக ஈடு கொடுக்கும் மாற்றுக் கட்சியாகக் கூடும்.


சுருங்கச் சொன்னால், நாகபுரியில் டாக்டர் லோஹியாவின் கொள்கை வெற்றி பெற வேண்டும்; அப்போது, சோஷலிஸ்ட் கட்சியின் வருங்காலம் பிரகாசமுடையதாகும்.



மன்மத பாணம்!
ரஷ்ய - அமெரிக்க உறவில் புது மாறுதல் ஏற்பட்டிருக்கிறது
அமெரிக்கா
ரஷ்யா
சமாதானம்


# கார்ட்டூன்


வேண்டியதுதான்!
மெக்கார்த்தி மீது அமெரிக்க செனட் சபை நடவடிக்கை எடுக்கப் போகிறது
அமெரிக்க செனட் சபை
மெக்கார்த்தி


பொம்மைக்குப் பாதுகாப்பு!
"சீன சர்க்கார் பார்மோஸாவைத் தாக்கினால் அமெரிக்கா போரில் இறங்கும்." - டல்லஸ்
அமெரிக்கா
பார்மோஸா


நல்ல செய்தி!
புழலேரிப் பிரதேசத்திலுள்ள விசேஷ போலீஸ் படை முகாம் வேறிடத்துக்கு மாற்றப்படும்!
மக்கள்
விசேஷ போலீஸ் படை
சென்னை சர்க்கார்
புழலேரி



அபாயம்!
"சட்டம் ஒரு கழுதை" என்னும் வசனத்தின் உண்மையை மக்கள் சபையில் ஸ்ரீ கட்ஜு உணர்ந்து வருகிறார்!
கட்ஜூ
சட்டம்


அடுத்தது யார்?
சிந்து மந்திரி சபை கலைக்கப் பட்டு விட்டது!
குலாம் முகம்மது
முகம்மது அலி

# கதம்பம்


தூக்கம் கலையுமா?
சென்னை சர்க்கார் விவசாயிகள் கடன் ஒத்தி வைப்புச் சட்டத்தைப் பற்றிய முடிவை வெகு சீக்கிரத்தில் தெரிவிப்பார்கள்!
வக்கீல்


பிரசார நிபுணர்கள்!
அண்ணே! ஆந்திராவில் தேர்தல் நடக்கப் போகிறதாமே நாமும் அங்கே போகலாமா?


தூது கோஷ்டிகளின் பிரயாணம்!
“நமது உள்நாட்டு விமானப் போக்குவரத்து ஸ்தாபனம் மூலம் 127 லட்சம் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது; ஆனால் நமது வெளிநாட்டு விமானப் போக்குவரத்து ஸ்தாபனம் மூலம் 27 லட்சம் லாபம் கிடைத்திருக்கிறது” — செய்தி
— இனி மேல் தூது கோஷ்டிகள் அயல் நாடுகளுக்குப் போவதற்கு முன்னால் இந்தியா முழுதும் பிரயாணம் செய்யலாம்!

கட்சிக்கு ஆள் பலம் சேர்க்க வேண்டுமென்பதற்காக இலட்சியத்தில் உறுதி யில்லாதவர்களை யெல்லாம் சேர்த்துக் கொண்டதனால் பிரஜா—சோஷலிஸ்ட் கட்சி மிக்க கஷ்ட நஷ்டங்களை அடைந்திருக்கிறது.

ஆந்திர மாகாணத்தில் ஸ்ரீ டி. பிரகாசமும் ஸ்ரீ டி. விசுவநாதனும் மந்திரி பதவியை அடையும் சந்தர்ப்பம் வாய்த்ததும் கட்சியைக் கை விட்டு விட்டதைப் பார்த்தோம். இப்போது ஆந்திர கேசரி காங்கிரஸிலேயே சேர்ந்து தேர்தலுக்கு நிற்கப் போகிறாராம்! ஆகவே இவர்களுக்கு உத்தியோகத்துக்காகவும் பதவிக்காகவும் கட்சியே தவிர, இலட்சியத்துக்காக இல்லை என்று ஏற்பட்டு விட்டது.

தென்னாட்டில் பிரஜா–சோஷலிஸ்ட் கட்சியின் வளர்ச்சிக்கு ஸ்ரீ பிரகாசத்தின் மாறுதல் ஒரு முட்டுக்கட்டை யாயிற்று.

ஸ்ரீ பட்டம் தாணுப் பிள்ளையின் காரியங்கள் தென்னாட்டைப் பொறுத்த வரையில் சோஷலிஸ்ட் கட்சியை அடியோடு அழுக்கி விடுமோ என்ற கவலை இப்போது தோன்றி யிருக்கிறது.

மூதன் முதலாக பிரஜா–சோஷலிஸ்ட் கட்சியின் பெயரால் ஒரு சிறிய பிரதேசத்தில் மந்திரிசபை ஏற்பட்டது. இந்த மந்திரி சபையோர் சாதித்த மகத்தான சாதனை என்னவென்று பார்த்தால், பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தின் அடக்குமுறைகளையும் தோற்கடிக்கக் கூடிய பயங்கர முறைகளைக் கடைப் பிடித்தார்கள் என்பதுதான்.

திருவாங்கூர் காங்கிரஸ்வாதிகள் இதைப் பார்த்துக் கொண்டு மனத்திற்குள் குதூகலப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். திருவாங்கூர்த் தமிழர்கள் விஷயத்தில் அவர்களும் லவலேசமும் விட்டுக் கொடுக்க விரும்பவில்லை. ஆனால் தமிழர்கள் மீது அடக்குமுறையைப் பிரயோகித்து அழியாத அபகீர்த்தியைத் தேடிக் கொள்ளும் வாய்ப்பு பட்டம் தாணுப் பிள்ளைக்கும் பிரஜா–சோஷலிஸ்ட் கட்சிக்குமே போய்ச் சேரட்டும்; அதனால் அக்கட்சி அழிந்த பிறகு நாம் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளலாம் என்று காத்திருக்கிறார்கள். இதுவும் முட்டாள்தனமான ஆசைதான்.

பட்டம் சர்க்காரின் அடக்கு முறையை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டு லாபம் அடைந்திருப்பவர்கள் கம்யூனிஸ்டுக் கட்சியினர். தமிழர் பிராந்தியத்தில் சென்ற தேர்தல் வரையில் கம்யூனிஸ்டுகளுக்குச் செல்வாக்கு அடியோடு இல்லாமலிருந்தது. இந்த மூன்று மாதத்தில் அபரிமிதமாகப் பெருகியிருக்கிறது. கம்யூனிஸ்டுப் பத்திரிகையில் "பி. எஸ். பி. குண்டர்களின் அட்டூழியங்களை"ப் பற்றிப் பத்தி பத்தியாகச் செய்திகள் வெளியாகின்றன.

பக்கத்து ஜில்லாவாகிய மலையாளம் ஜில்லா போர்டு தேர்தலிலும் கம்யூனிஸ்டுகளே வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

ஸ்ரீ பட்டம் தாணுப் பிள்ளையின் ஆட்சி நீடித்திருந்தால், பிரஜா – சோஷலிஸ்டு கட்சிக்கு நன்மை இல்லை; காங்கிரஸுக்கும் லாபம் இல்லை. மலையாளம் முழுதும் கம்யூனிஸ்ட் கட்சியின் பலமான கோட்டையாகி விடும்.

* * *

ஒரு கட்சியின் தலைவருக்கு இருக்க வேண்டிய நெஞ்சுறுதி, நேர்மைக் குணங்களுடன் தீர்க்க தரிசனமும் வாய்ந்தவர் டாக்டர் ராம் மனோகர் லோஹியா என்பது ஐயமற வெளியாகியிருக்கிறது.

தம்முடைய கட்சியைச் சேர்ந்தவர் செய்தார் என்பதற்காகக் குற்றத்தையே குணம் என்று சொல்லிப் பாராட்டும் குறுகிய மனப்பான்மை அவரிடம் இல்லை.

துப்பாக்கிப் பிரயோகம் நடந்த உடனேயே 'பட்டம் தாணுப் பிள்ளை ராஜினாமா செய்ய வேண்டும்' என்று சொன்னார்; அதையே இன்றளவும் வற்புறுத்தி வருகிறார்; நாகபுரியிலும் வற்புறுத்தப் போவதாகச் சொல்லி வருகிறார்.

தமிழ் நாட்டிலிருந்து நாகபுரிக்குச் செல்லும் சோஷலிஸ்ட் நண்பர்கள் இந்த விஷயத்தில் டாக்டர் லோஹியாவை முழு மனதுடன் ஆதரிப்பார்கள் என்று நம்புகிறோம்.

நியாயம், நேர்மை, ஜீவகாருண்யம், மனித தர்மம் என்பவற்றில் நம்பிக்கையுள்ள சோஷலிஸ்ட் நண்பர்கள், திருவாங்கூர்த் தமிழர்களுக்குச் சோஷலிஸ்ட் கட்சியின் பெயரால் இழைக்கப்பட்ட கொடுமைகளுக்குப் பரிகாரம் தேடவேண்டும்.

சோஷலிஸ்ட் கட்சியின் வருங்கால வளர்ச்சியை முன்னிட்டும் அவர்கள் டாக்டர் லோஹியாவின் கட்சியை முழுமூச்சுடன் ஆதரிக்க வேண்டும்.

# கலை வளர்க்கிறார்கள்!

உலகெங்குமுள்ள அரசாங்கங்கள் இப்பொழுதெல்லாம் கலைகளை வளர்ப்பதில் அபாரமாக ஈடுபட்டிருக்கின்றன. வளர்ப்பதோடு மட்டுமில்லை; ஏற்றுமதி இறக்குமதியும் செய்து வருகின்றன.

ருஷியக் கலைஞர்கள், சீனக் கலைஞர்கள், யூகோஸ்லோவியா கலைஞர்கள், அபிஸீனியக் கலைஞர்கள்,—எல்லாரும் முறைமுறையாக இந்தியாவுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் மேற்படி நாடுகளுக் கெல்லாம் கலைஞர்கள் போய் வந்த வண்ண மிருக்கிறார்கள்.

கர்நாடக சங்கீதத்தை வட இந்தியர்களாலேயே நன்றாக அறிந்து அநுபவிக்க முடியவில்லை. நமது நாதஸ்வர ஏக சக்ராதிபதியைச் சென்ற வருஷத்தில் புதுடில்லி சபையில் வட இந்தியக் கலா ரஸிகர்கள் சீட்டி யடித்துத் திணற வைத்து விட்டார்கள் என்று அறிந்தோம்.

நமது வீணை வாத்தியத்தின் சிறப்பை யூகோஸ்லோவியா மக்கள் எப்படி ரஸித்து அநுபவிப்பார்கள் என்பது இறைவனுக்குத்தான் வெளிச்சம்.

ஆயினும் நமது கலைஞர்களுக்கு அயல்நாடுகளுக்குச் சென்று வருவதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைக்கிறதல்லவா! அந்த வரையில் சந்தோஷப் படுகிறோம்.

இந்திய சர்க்கார் உள் நாட்டில் பல கலைகளையும் வளர்ப்பதில் இப்போது வெகுவாக ஊக்கம் காட்டி வருகிறார்கள். அதன் பலனாகவே, இப்போது புது டில்லியில் அகில இந்திய நாடக விழா நடைபெறுகிறது. பதினேழு பிராந்தியங்களிலிருந்து வரும் நாடக கோஷ்டியினர் பதினேழு பாஷைகளில் நாடகம் நடிக்கப் போகிறார்கள். எல்லா நாடகங்களையும் அநுபவிப்பதற்குச் சபை எப்படி அமையப் போகிறது என்பதை அநுபவத்திலேதான் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஏற்பாடு என்னமோ நல்ல நோக்கத்துடன் கூடிய சிறப்பான ஏற்பாடுதான். ஆனால் அதில் கண்ட பெருங்குறை ஒன்றை மட்டும் இங்கே நாம் குறிப்பிட விரும்புகிறோம்.

பிராந்தியங்கள் தோறும் நாடகப் போட்டி விழாக்கள் நடத்தி, அவற்றில் சிறந்ததைப் பொறுக்கிப் புது டில்லியில் நடிக்க அனுப்ப வேண்டுமென்று ஏற்பாடு.

விழாவும் நடத்தலாம்; போட்டியும் நடத்தலாம்.

ஆனால் அமைச்சூர் நாடக சபைகளுக்கும் தொழில் நாடக சபைகளுக்கும் சேர்த்துப் போட்டி ஏற்படுத்தக் கூடாது.

அமைச்சூர் நடிகர்கள் பெரும்பாலும் ரஸமான பொழுது போக்குக்காக நாடகக்கலையில் ஈடுபட்டு நடித்து வருகிறவர்கள்.

தொழில் நடிகர்களுக்கோ நாடகமே வாழ்க்கை, ஜீவனம், இலட்சியம் எல்லாம்.

அமைச்சூர் நடிகர்களில் ஐந்தாறு குழுவினர் போட்டி போட்டு, ஒரு குழு தேர்ந்தெடுக்கப் பட்டால் மற்றவர்கள் அதை ஒரு பொருட்டாகவும் கருத மாட்டார்கள்; மனம் ஒடிந்தும் போக மாட்டார்கள். அவர்களுடைய வாழ்க்கையையும் அது ஒன்றும் பாதிக்காது.

தொழில்நாடகசபைகள் போட்டியிட்டால், அதுவும் அமைச்சூர் நடிகர்களுடன் சேர்ந்து போட்டி நடத்தினால், தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தவிர மற்றவையெல்லாம் மட்டமானவை என்று ஏற்பட்டு விடும். அந்த நாடகங்களை அவர்கள் பிறகு பொது மக்களின் சபையில் எப்படி நடத்திப் பெயர் வாங்க முடியும்!

ஆகையால் தொழில் நடிகர் சபைகளைப் போட்டியில் கலந்து கொள்ளும்படி கேட்கவும் கூடாது; எதிர்பார்க்கவும் கூடாது.

* * *

அகில இந்திய வானொலி நிலையத்தார் சங்கீதப் போட்டி நடத்தினார்கள். அந்தப் போட்டியைப் புதிதாக முன்னுக்கு வந்து கொண்டிருக்கும் இளம் வித்வான்களுக்காகவே நடத்தினார்களே தவிர, அரியக்குடி இராமானுஜ அய்யங்காரும், செம்மங்குடி சீனிவாசய்யரும் போட்டிக்கு வருவார்களென்று எதிர்பார்க்க வில்லை.

நாடகத் துறையிலும் அமைச்சூர் சபைகளுக்கு மட்டும் போட்டி நடத்திப் பரிசு வழங்கும் முறையைக் கைக் கொள்ள வேண்டும்.

தொழில் நாடக சபைகளைப் பொறுத்தவரையில், அந்தந்த மாகாண சர்க்காரோ அல்லது சங்கீத நாடக அக்கடாமியோ சொந்தப் பொறுப்பில் உசிதா அநுசிதம் பார்த்துத் தக்கவர்களைப் பொறுக்கி அனுப்ப வேண்டும்.

தொழில் நடிகர்களுக்காக ஒரு குழுவை இவ்விதம் தேர்ந்தெடுத்து விட்டு, அமைச்சூர் நாடக சபைகளுக்கு மட்டும் போட்டி நடத்துவதுதான் சரியான முறை.

இந்த முறையைக் கடைப்பிடித்திருந்தால், சமீபத்தில் சென்னையில் நடந்த நாடகவிழா சம்பந்தமாக ஏற்பட்ட குழப்பம் ஒன்றும் நேர்ந்திராது.

வரும் ஆண்டிலிருந்தாவது நாடகக் கலையை வளர்ப்பதற்கு இந்த முறையைக் கைப்பற்றுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

# சினிமாவில் செய்திப் படங்கள்

சென்ற சில நாட்களாக இம் மாகாணத்தில் உள்ள சினிமாக் கொட்டகைகளில் அரசாங்கத்தார் வெளியிடும் செய்திப் படங்கள் திரையிடப் படுவதில்லை. இதை ஸினிமா ரஸிகர்கள் ஒரு பெரிய நஷ்டமாகக் கருத மாட்டார்கள் என்று எண்ணியிருந்தோம். பெரும்பாலோர் "நல்லவேளை; பதினைந்து நிமிஷம் மிச்சமாயிற்று!" என்று பெருமூச்சு விடுவார்கள் என்றும் கருதினோம்.

ஆனால் செய்திப் படங்கள் திரையிடப்படாதது பற்றி வருத்தப்படும் ஸினிமா ரஸிகர்கள் சிலரும் உளர் என்று நமக்கு வரும் கடிதங்களிலிருந்து தெரிய வருகிறது. உதாரணத்துக்குக் கீழே ஒரு கடிதத்தை வெளியிட்டிருக்கிறோம்:—

"தமிழ் நாட்டு ஏழை மக்கள் நூற்றுக்கணக்காகப் பணத்தைச் செலவழித்துக் காஷ்மீரின் இயற்கைக் காட்சியைக் கண்டு களிக்க முடியாது.

நம் தேசத்தின் தலைநகராகிய டில்லிமாநகரத்தையும், பம்பாய், கல்கத்தா போன்ற அழகான நகரங்களையும் காண முடியாது. தாஜ்மஹாலையும், எல்லோராவையும், அஜந்தாவையும் அவர்களால் பார்க்க முடியாது. சிந்திரி உர உற்பத்தித் தொழிற் சாலையையும், சித்தரஞ்சன் ரயில்வே தொழிற் சாலையையும் பார்க்க வேண்டுமென்று கூட அவர்களால் சிந்திக்க முடியாது.

இன்னும் சொல்லப் போனால் தமிழ் நாட்டின் தலைநகரமாகிய சென்னைமா நகரத்தைப் பார்க்காதவர்களும், மாமல்லபுரத்தையும், குற்றாலத்தின் நீர்வீழ்ச்சியையும் கண்டு களிக்காதவர்களும் தமிழ் நாட்டில் லட்சக் கணக்காக இருப்பார்களென்றுகூடத் துணிந்து சொல்லலாம். பல இடங்களில் நடக்கும் சமுதாய அபிவிருத்தித் திட்ட வேலைகளையும், பிரபல ஆட்டக்காரர்கள் விளையாடும் கால் பந்தாட்டம், கிரிக்கெட் போன்ற பந்தய விளையாட்டுகளையும் பொதுமக்கள் நேரில் சென்று பார்க்க முடியாது. கட்டப்பட்ட அணைக் கட்டுகளையும், கட்டப்படுகிற அணைக் கட்டுகளையும் பொதுமக்கள் நேரில் சென்று பார்த்துப் பயனடைய முடியாது. ஆனால் இவைகளையெல்லாம் பொதுமக்கள் நாலரை அணா கொடுத்து இலகுவாகத் தியேட்டரில் செய்திப் படங்களின் மூலமாகப் பார்க்க முடிகிறது. மேலும் செய்திப் படங்களில் பொது மக்களுக்கு வேண்டிய படிப்பினைகளும் இருக்கின்றன. இப்படிப்பட்ட செய்திப் படங்களைத்தான் தற்பொழுது தியேட்டர் முதலாளிகள் திரையிடாமல் நிறுத்தி விட்டார்கள்.

அரசாங்க செய்திப் படங்களைத் திரையிடுவதற்கு அரசாங்கம், தியேட்டர் முதலாளிகளிடம் அதற்குரிய வாடகை வாங்காமல் இலவசமாகத் தியேட்டர்களில் திரையிடுவதற்கு ஏதுவாக, ஸினிமா சட்ட விதி முறைகளில் திருத்தம் செய்து சட்டம் இயற்ற வேண்டும்.

*மதுரை*
*16—11—54* ஆர். கே. ராமானுஜம்'

ஸினிமாப்படத் தொழிலதிபர்களுக்கும் இந்தியாவின் சுதந்திர சர்க்காருக்கும் பல தகராறுகள் அடிக்கடி ஏற்பட்டு வருகின்றன. யானையும் யானையும் மோதுவது போன்ற இந்தச் சண்டைகளில், அநேகமாகச் சர்க்கார் கட்சியே ஜயமடைவது வழக்கமாயிருந்து வருகிறது.

கடைசியாக ஒரே ஒரு விவகாரத்தில் ஸினிமாத் தொழிலதிபர்கள் வெற்றி யடைந்திருக்கிறார்கள்.

இந்திய சர்க்கார் இலாக்கா வெளியிடும் செய்திப் படங்களைக் கட்டாயமாகத் திரையிட

வேண்டுமென்று பிராந்திய சர்க்கார்கள் ஸினிமாக் கொட்டகைக் காரர்களை வற்புறுத்தி வந்தார்கள். மேற்படி செய்திப் படங்களைக் கொட்டகைக் காரர்கள் விலை கொடுத்து வாங்கியே திரையிட வேண்டும்.

இந்தமாதிரி வற்புறுத்துவது இந்திய அரசியல் சட்டத்தின்படி பிரஜைகளுக்குள்ள உரிமைக்கு முரணானது என்று ஸுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டது.

ஜனநாயக நாடுகளில் மக்களின் நியாயமான உரிமைகள் பாதுகாக்கப்படுவது நீதி மன்றங்களின் நேர்மையையே பொறுத்ததாகும். இந்தியாவின் ஸுப்ரீம் கோர்ட் இந்த விஷயத்தில் மிக நல்ல பெயர் எடுத்திருக்கிறது. அரசியல் சாஸனத்துக்கு விரோதமாகச் சர்க்கார் எடுக்கும் நடவடிக்கைகளை யெல்லாம் அடித்துத் தள்ளி நீதியை நிலைநாட்டி வந்திருக்கிறது.

அது போலவே, செய்திப் படங்களைக் காட்டும்படி வற்புறுத்துவதும் சட்டப்படி செல்லாது என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது.

உடனே, எப்போது சர்க்கார் மீது தங்கள் கோபத்தைக் காட்டச் சந்தர்ப்பம் வரும் என்று காத்திருந்த ஸினிமாத் தொழிலதிபர்கள், கட்டுப்பாடாக இந்திய சர்க்காரின் செய்திப் படங்களைத் திரையிடுவதை நிறுத்தி விட்டார்கள்.

* * *

சட்டத்திலும் விதிகளிலும் உள்ள குறைபாடுகளைச் சர்க்கார் வெகு சுலபமாக நிவர்த்தி செய்து விடலாம். ஸுப்ரீம் கோர்ட் குறிப்பிட்டுக் காட்டியுள்ள பொத்தல்களை அடைத்து மீண்டும் சட்டம்—விதிகள் செய்து விடலாம்.

இவ்வாறு செய்வதால் சினிமா அதிபர்களுக்கும் சர்க்காருக்கும் இடையில் மனக் கசப்பு மேலும் வளர்ந்து கொண்டே போகும்.

மிகவும் சிரமப்பட்டுப் போராடி நீதி மன்றத்தின் மூலம் கிடைத்த நியாயத்தைச் சர்க்கார் யதேச்சாதிகாரமாகப் பறிமுதல் செய்து விட்டார்கள் என்றே ஸினிமா அதிபர்கள் கருதுவார்கள்.

இந்த விஷயத்தில் ஸினிமா அதிபர்களின் கட்சியில் பெரிதும் நியாயம் இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறோம்.

"இந்திய சர்க்காரின் செய்திப் படங்களை உண்மையில் மக்கள் விரும்புகிறதாக இருந்தால், மக்களே எங்களைக் கட்டாயப்படுத்துவார்கள். நாங்கள் மற்றப் படங்களைப் போட்டி போட்டு வாங்குவது போல் செய்திப் படங்களையும் போட்டியிட்டு வாங்கிக் காட்டுவோம். சர்க்காரின் பலவந்தம் வேண்டியதில்லை.

மக்களின் அறிவு வளர்ச்சிக்காக மேற்படி செய்திப் படங்களைக் காட்ட வேண்டும் என்று சொன்னால், அந்தப் படங்களின் கிரயத்தை எங்கள் தலையில் மட்டும் போடுவானேன்? பள்ளிக் கூடங்கள், கலாசாலைகள், புத்தக சாலைகள், விஞ்ஞான நிலையங்கள் எல்லாம் நடத்துவதற்குப் பொதுப் பணத்தைத் தானே செலவு செய்கிறீர்கள்? அதுபோலவே அறிவு வளர்ச்சிக்கான செய்திப் படங்களையும் பொதுச் செலவிலேயே தயாரித்துக் கொடுங்கள்!" என்று ஸினிமா அதிபர்கள் சொல்லுகிறார்கள்.

இதில் நியாயம் இருக்கிறது என்பதை அனைவரும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

ஆகையால் இந்திய சர்க்கார் இந்த விஷயத்தில் தகராறை வளர்த்துக் கொண்டே போகாமல் பரஸ்பரம் விட்டுக் கொடுத்து ஒரு சமரச முடிவுக்கு வருவது மிக்க நலமாயிருக்கும்.

இந்திய சினிமாத் தொழிலின் தலைவராக இப்போது பதவி வகிப்பவர் ஸ்ரீ எஸ். எஸ். வாஸன். சினிமாத் தொழிலின் முன்னேற்றத்தில் எவ்வளவு அக்கறை உண்டோ, அவ்வளவு பொது நலத்திலும் தேச முன்னேற்றத்திலும் அக்கறை கொண்டவர்.

ஆதலின் இந்திய சர்க்கார் ஸ்ரீ வாஸன் அவர்களுடன் நல்ல முறையில் விவாதம் நடத்தி ஒரு சமரச முடிவுக்கு வருவது இரு சாராருக்கும் நன்மை பயக்கும்.

"சினிமாக் கொட்டகைகளில் செய்திப் படங்கள் காட்டவில்லையே!" என்று குறைப்படும் ஸினிமா ரஸிகர்களின் குறையும் நீங்கும்.

# ஒன்றுக்கு இரண்டு ஒப்பந்தம்!

இலங்கைப் பிரதமர் சர் ஜான் கொத்தலாவலை அகில உலகமும் திக்விஜயம் செய்து வருவதற்காக இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார். உலகத்தின் நாடியைப் பரிசீலனை செய்து கொண்டுதான் அவர் திரும்பி வரப் போகிறாராம். உலக நாடுகளின் நாடியைப் பார்ப்பதில் தமக்குள்ள திறமையை அவரே பத்திரிகை நிருபரிடம் பறைசாற்றிக் கொண்டிருப்பதால், அவ்விஷயமாகச் சந்தேகம் எதுவும் எழுவதற்கில்லை!

தற்போது பல பிரச்னைகளும் உலகத்தை நோயாக வருத்திக் கொண்டிருக்கின்றன என்பது உண்மையே. எனவே, சர் ஜான் கொத்தலாவலையைப் போன்ற ராஜதந்திர நிபுணர்கள் உலகத்தின் நாடியைப் பரிசீலனை செய்து, நோய்க்குப் பரிகாரம் தேட வேண்டியது அவசியம், அவசரம் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

அதே சமயம் சர் கொத்தலாவலை இலங்கையின் நாடியையும் பரிசீலனை செய்யத் தவற மாட்டார் என்று நம்புகிறோம்.

இலங்கையும் சிறிது காலமாக ஒரு புதிய நோயினால் பீடிக்கப்பட்டு வருகிறது.

அங்கு ஏற்பட்டுள்ள இனவெறி ஸ்தாபனமான மூச்சிங்கள முன்னணியையே குறிப்பிடுகிறோம்.

சில தினங்களுக்கு முன், இரண்டாவது முறையாக இந்தியா பிரதம மந்திரியும் இலங்கைப் பிரதமரும் சந்தித்ததன் பலனாக ஏற்பட்ட சுமுகமான சூழ்நிலையைக் குட்டிச் சுவராக்க மேற்படி ஸ்தாபனம் முயன்று வருகிறது. அந்த விபரீதமான முயற்சிக்கு முன்னாள் மந்திரிகளான இலங்கைப் பிரமுகர்கள் தூபம் போட்டு வருகிறார்கள்.

சென்ற வாரம் கொழும்புக்கு அருகில் நடந்த பெரிய கூட்டம் ஒன்றில், "இந்தியர்களை இலங்கையிலிருந்து விரட்டுவதுதான் தங்களுடைய ஒரே லட்சியம்" என்று அவர்கள் உலகம் அறியப் பிரகடனம் செய்திருக்கிறார்கள்.

அந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் பேச்சளவில் நின்று விடவில்லை; தங்களுடைய விபரீதமான லட்சியத்தை நிறைவேற்றச் செயலிலும் இறங்கி யிருக்கிறார்கள்.

அவர்கள், இந்தியர்களின் பிரஜா உரிமை விண்ணப்பங்களை எதிர்த்து ஆட்சேபணை மனுக்களைச் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

மேற்படி ஆட்சேபணை மனுக்களைக் காரணமாகக் கூறி, பிரஜைப் பதிவுக் கமிஷனர் இந்தியர்களைப் பிரஜைகளாகப் பதிவு செய்வதைக் காலம் கடத்தி வருவதாகத் தெரிகிறது.

சமீப காலமாக அங்கு நிகழ்ந்து வரும் சம்பவங்களைக் கவனிக்கும்போது, அந்த இனவெறி ஸ்தாபனத்தின் முயற்சிகள் வெற்றி யடைந்து வருகின்றன என்றே எண்ண வேண்டியிருக்கிறது.

சில தினங்களுக்கு முன் ராமலிங்கம் என்ற தோட்டத் தொழிலாளி தமது பெயரின் முதல் எழுத்தான 'ரா'வைச் சரியாகப் போடவில்லை, ஓரிடத்தில் 'ரு' என்று போட்டிருந்தார் என்பதற்காக அவரது பிரஜா உரிமை மனு நிராகரிக்கப்பட்டு விட்டது!

எஸ். சந்தனம் என்ற தோட்டத் தொழிலாளி தம்முடைய மனுவில் 'எஸ்' என்று குறிப்பிடத் தவறி விட்டதற்காக அவரது மனுவுக்கும் அதே கதி நேர்ந்தது!

இவை போன்ற அற்ப காரணங்களைக் கூறி இலங்கை அதிகாரிகள் இந்தியர்களின் பிரஜா உரிமை மனுக்களை நிராகரித்து வருகிறார்கள்.

எனவே, இந்நிலைமையில் இலங்கை இந்தியர்களின் எதிர் காலத்தைப் பற்றி இலங்கை ஜனநாயக காங்கிரஸ் தலைவர்களிடையே நம்பிக்கையின்மையும், ஏமாற்றமும், கலக்கமும் ஏற்பட்டிருப்பதைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை.

*       *       *

இலங்கை இந்தியர்களின் பிரஜா உரிமைகளைச் சீக்கிரமாகப் பரிசீலனை செய்து முடிப்பதற்காக இலங்கை சர்க்கார் அறுபது உதவிக் கமிஷனர்களை நியமிக்க உத்தேசித்திருக்கிறார்கள்.

அதன் சம்பந்தமான செலவுக்காகப் பன்னிரண்டரை லட்சம் ரூபாய் மான்யம் கோரி சர்க்கார் இலங்கைப் பார்லிமெண்டில் கொண்டு வந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

அப்போது, இந்தியர்களின் பிரஜா உரிமை மனுக்கள் சரியான காரணமின்றியும், அநியாகவும் நிராகரிக்கப்படுவதைப் பல அங்கத்தினர்கள் சுட்டிக்காட்டிக் கண்டித்தார்கள்.

"இலங்கை சர்க்கார் பிரஜா உரிமைச் சட்டத்தைப் பாரபட்சமின்றி அமுல் நடத்த முற்பட வேண்டும். அவ்விதம் செய்யாமல், மனுக்களைப் பைசல் செய்ய அதிக அதிகாரிகளை நியமிப்பதால் மாத்திரம் யாதொரு பலனும் ஏற்பட்டு விடாது. அதற்கு மாறாக அதிகாரிகள் அதிகம் ஆக ஆக, கஷ்டங்களும் தகராறுகளுமே அதிகமாகும்" என்று ஸ்ரீ சி. சுந்தரலிங்கம் கூறினார்.

"பிரஜா உரிமை மனுக்களைப் பதிவு செய்யும் விஷயத்தில் இலங்கை சர்க்காரின் தற்போதைய கொள்கை நீடித்து வருமாயின், இலங்கை மந்திரிகள் மறுபடியும் புது டில்லிக்குச் செல்ல விமானத்தில் நிச்சயமாக இடங்கள் ஒதுக்கி வைக்கும்படி நேரும்" என்று மற்றோர் அங்கத்தினர் குறிப்பிட்டார்.

இந்தியர்களின் விஷயத்தில் இலங்கை சர்க்கார் கையாண்டு வரும் முறை, அடுத்துள்ள, உலகிலேயே மாபெரும் வல்லரசுகளில் ஒன்றாக உருவாகி வரும் இந்தியாவை விரோதித்துக் கொள்வதாக முடியும் என்று இலங்கை சமாஜக் கட்சித் தலைவர் சர்க்காரை எச்சரித்தார்.

ஒன்றுக்கு இரண்டு ஒப்பந்தங்கள் ஏற்பட்டும் கூட இலங்கை இந்தியர்களின் துன்பம் தீரவில்லை;

# பனித் துளி

பத்துக் குருடர்களும், பத்துச் செவிடர்களும் சவால் விடுத்துச் சதுரங்கம் ஆடியதில் குருட்டு ஆட்டக்காரர்கள் வெற்றி பெற்றனர். —பீர்ஸ்டல் செய்தி

*"அதையெல்லாம் காதிலேயே போட்டுக் கொள்ள முடியாது" என்று செவிடர்கள் தட்டிக் கழிக்கவும் செய்திருக்கலாம்!*

✶

மலைமீது மேய்ந்து கொண்டிருந்த இருநூறு ஆடுகள், திடீரென்று உண்டான ஒரு இடி மலையை இரு பிளவாக்கவே இருந்த இடம் தெரியாமல் மறைந்தன. — சிரியா செய்தி

*ஆகா! ஆட்டுச் சொந்தக்காரர்கள் காதில் !செய்தி 'பேரிடி'யாக அல்லவா 'விழுந்'திருக்கும்!*

✶

நாடகத் துறையில் சீன நடிகர்கள் வேஷம் போட்டு நடிக்கும் ஆற்றலை வெகுவாகப் புகழ்ந்த ஸ்ரீமதி இந்திரா காந்தி, 64 வயதுக் கிழவர் 20 வயது அசல் குமரியாக நடித்த காட்சியைத் தாமும், நேருவும் கண்டு வியந்ததாகக் கூறினார்! —பம்பாய்ச் செய்தி

*"சமயத்துக்கு ஏற்றவாறு 'வேஷம் போடு'வதில் சீனர்கள் அதி சமர்த்தர்கள் என்று நாங்கள் எப்பொழுதுமே கூறி வந்திருக்கிறோமே!" என்று அமெரிக்க வட்டாரங்கள் வியாக்கியானம் செய்தாலும் வியப்பில்லை!*

✶

இறந்து போன கோபால்தாஸ் என்னும் பிச்சைக்காரரின் கிழிந்த சட்டைப் பையில் முன்னூறு ரூபாய் கரன்ஸி நோட்டுகள் இருந்தன! —அமிருதஸரஸ் செய்தி

*"அவருடைய கெட்டிக்காரத் தனத்துக்கு நாம்தான் அவரிடம் 'பிச்சைவாங்க' வேண்டும்" என்கிறார் இங்கொரு என்.ஜி.ஓ.!*

✶

கணவனும், மனைவியும் பெருங் குடியில் ஈடுபட்டு இரவெல்லாம் கலாட்டா செய்வதாக மிஸ் ஹூஸி என்னும் பக்கத்து வீட்டு அம்மாள் வழக்கு தொடர்ந்திருக்கிறார்! —டமாஸ்கஸ் செய்தி

*தம்பதிகளின் 'குடித்தனம்' அவருக்குப் பிடிக்கவில்லை போலும்!*

✶

"வெகு வெற்றிகரமாக நடந்துவரும் போல்வியாவிலுள்ள ஒரு பள்ளிக்கூடத்துக்கு வகுப்பு நேரம் அறிவிக்கும் மணியே கிடையாது!" —கட்டுரை சாரம்

*மணி அவசியமில்லாத அளவுக்கு மாணவ—மணிகள் குறித்த நேரத்துக்கு வந்து போகும் 'மணிப் பயல்'களாக இருக்கிறார்கள் போலும்!*

இலங்கை சர்க்காரின் மனம் மாறவில்லை என்பதையே அந்நாட்டின் பார்லிமெண்டில் நடந்த விவாதம் காட்டுகிறது.

எனவே இலங்கை சர்க்கார் மந்திரிகளுக்கு உண்மையான மனமாற்றம் ஏற்பட்டாலன்றி, பிரஜா பதிவுக் கமிஷனர்களின் தொகையை அதிகப் படுத்துவதால் மாத்திரம் இலங்கை இந்தியர் பிரச்னை தீர்ந்து விடாது. ஒரு கமிஷனர் பதினாயிரம் மனுக்களை நிராகரித்தால், அறுபது கமிஷனர்கள் ஆறு லட்சம் மனுக்களை நிராகரிப்பார்கள் என்ற கணக்காக முடிந்து விடக் கூடாது அல்லவா!

எனவே, உலகத்தின் நாடியைப் பார்த்து அறிந்து வருவதற்காக யாத்திரை சென்றுள்ள சர் ஜான் கொத்தலாவலை, இலங்கைக்குத் திரும்பியதும், தமது நாட்டின் நாடியைப் பார்த்து இலங்கை இந்தியர் பிரச்னையாகிற நோயைத் தீர்க்க முற்படுவார் என்று நம்புகிறோம்.

# இலங்கை மாணவர்கள் தவிப்பு!

— கொழும்பு, நவம்பர் மீ 20உ

சர்வ சிங்களவர்களினால் நடத்தப்படும் கொழும்பு ஏரிக்கரைப் பத்திரிகைகள் இவ் வாரம் இந்தியத் தலைவர்கள் மீதும் தென் இந்தியப் பத்திரிகைகள் மீதும் வசை புராணம் பாடியிருக்கிறது.

பல்லாண்டுகளாகத் தோட்டத் தொழில்களில் ஈடுபட்டிருக்கும் இந்தியத் தொழிலாளர்களுக்குப் பதிலாக இலங்கையர்களை நியமிக்க முயற்சிகள் நடக்கின்றன. இதே போல மற்றும் பல தொழில்களை இலங்கையர் மயமாக்கவும் திட்டங்கள் வகுக்கிறார்கள். இப்பொழுது ஏரிக்கரைப் பத்திரிகைகள் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்குப் போகும் செய்திகளையும் இலங்கை மயமாக்க விரும்புகின்றன.

இந்தியர்களைக் கடுமையாகத் தாக்கிப் பேசும் பிரசங்கங்களை யெல்லாம் ஏரிக்கரைப் பத்திரிகைகளே இரண்டு பத்தி, மூன்று பத்தித் தலைப்புப் போட்டுப் பிராபல்யமாகப் பிரசுரிக்கின்றன. அதே செய்தியை எடுத்து இந்திய நிருபர்கள் இந்தியப் பத்திரிகைகளுக்கு அனுப்பினால் அவர்கள் இலங்கைக்கு விரோதமாக இந்தியாவில் துஷ்பிரசாரம் செய்வதாய்க் குற்றம் சாட்டப்படுகிறது.

இந்தியப் பத்திரிகைகளில் முற்றிலும் தவறான செய்திகள் பிரசுரமாவதாக ஓலம் இடுபவர்கள் அந்தச் செய்திகளில் எது தவறு என்பதை எடுத்துக் காட்டலாமல்லவா!

முன்னாள் வர்த்தக மந்திரி ஸ்ரீ ஆர். ஜி. சேனநாயகா இந்தியர்களை இலங்கையிலிருந்து விரட்ட எல்லோரும் கச்சை கட்டிக் கொண்டு கிளம்ப வேண்டுமென்று வற்புறுத்தி இவ்வாரம் பல இடங்களில் பேசியிருக்கிறார்.

ரேஷன் அரிசி, கல்வி வசதி, வைத்திய வசதி முதலியவைகளை மறுப்பதின் மூலம் இந்தியர்களை நாட்டை விட்டு விரட்ட வேண்டுமென்றும் இல்லாத பட்சத்தில் வெகு விரைவில் இலங்கை இந்தியாவின் ஒரு மாகாணமாகி விடுவது நிச்சயமென்றும் ஸ்ரீ சேனநாயகா மூலைக்கு மூலை இப்பொழுது தீவிரமாகப் பிரசாரம் செய்து வருகிறார். டில்லியில் இலங்கை இந்தியப் பிரதம மந்திரிகள் சமீபத்தில் பேசியதின் பயனாக ஏற்பட்ட நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் குட்டிச் சுவராக்கி வேதாளத்தை மறுபடியும் முருங்கை மரத்தில் ஏற்ற முயற்சிகள் நடக்கின்றன.

* * *

இந்தியாவில் கல்வி பயிலும் இலங்கை மாணவர்களுக்கு ஒரு வருட விஸா வழங்குவதென்று இந்திய யூனியன் அரசாங்கம் இப்பொழுது தீர்மானித்திருக்கிறது. விஸா சட்ட திட்டங்களை இவ்வருடம் ஜூலை மாதம் இந்திய அரசாங்கம் அமுலுக்குக் கொண்டு வந்தபொழுது இந்தியாவில் படிக்கும் இலங்கை மாணவர்களுக்கு மூன்றுமாத விஸா வழங்கப்பட்டது. அது முடிந்த பின் இந்த மாணவர்கள் விஸாவை இந்தியாவில் புதுப்பித்துக் கொள்ள வேண்டுமென்பது ஏற்பாடு. ஆனால் இந்தியாவில் விஸாவைப் புதுப்பிப்பது அவ்வளவு எளிதான காரியமாயில்லை. சென்னை ராஜ்யத்தில் பல்வேறு கல்வி நிலையங்களிலும் படிக்கும் இலங்கை மாணவர்கள் தங்களுடைய விஸாவைப் புதுப்பிக்கப் பாஸ் போர்ட்டுகளைச் சென்னை ராஜ்ய உள்நாட்டு இலாகாவுக்கு அனுப்பி வாரக் கணக்காகியும் பதிலே இல்லாமல் கிணற்றில் போட்ட கல்லைப் போல் இருக்கிறது.

இலங்கை மாணவர்களுக்கு ஒரு வருட விஸா வழங்குவதென்று இந்திய யூனியன் அரசாங்கம் இப்பொழுது பெரிய மனதுடன் தீர்மானித்திருப்பதினால் இனியாவது சென்னை ராஜ்ய உள்நாட்டு இலாகா அரசியல் காரணங்களுக்காகச் சின்னஞ் சிறு மாணவ மாணவிகளைத் தண்டிக்காமல் விரைவில் விஸாக்களைப் புதுப்பிக்க நடவடிக்கையெடுக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.


* * *

சிதம்பரம் அண்ணாமலைச் சர்வ கலாசாலையைப் போல இந்தியாவிலுள்ள வேறு எந்தக் கல்வி ஸ்தாபனமும் இலங்கை மாணவர்களுக்கு இவ்வளவு சலுகைகளைக் காட்டியதில்லையென்று கூறும் அளவுக்கு அண்ணாமலை சர்வ கலாசாலையின் ஆரம்ப காலத்திலிருந்தே அதில் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு அதிக இடம் அளிக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆகையால் இலங்கைத் தமிழ் மக்கள் அண்ணாமலை சர்வகலாசாலையிடம் ஒரு விசேஷப் பற்றுதல் கொண்டிருக்க நியாயமிருக்கிறது. இந்தக் கலாசாலையில் படித்த இலங்கைப் பழைய மாணவர்களின் கூட்டமொன்று இவ்வாரம் கொழும்பில் நடைபெற்றது. அவர்களுடைய சங்கமொன்றை ஏற்படுத்தப் பேராசிரியர் ஸ்ரீ கே. கணபதி பிள்ளையைத் தலைவராகவும் ஸ்ரீ லட்சுமணனைக் காரியதரிசியாகவும் கொண்ட ஒரு தாற்காலிகக் கமிட்டியைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இந்தக் கமிட்டியினர் இலங்கை முழுவதிலுமுள்ள அண்ணாமலைச் சர்வகலாசாலைப் பழைய மாணவர்கள் ஜாபிதா ஒன்றைத் தயாரித்து, ஒரு பொதுக் கூட்டம் நடத்தி, முறையாக ஒரு சங்கத்தை ஸ்தாபிக்கவும் தமிழுக்கும் தமிழ்க் கலைகளுக்கும் அரும்பெரும் தொண்டாற்றிய காலஞ்சென்ற ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியாரின் ஞாபகார்த்தமாக அண்ணாமலைச் சர்வ கலாசாலையில் படிக்கும் இலங்கை மாணவர்களில் சிலருக்கு உபகாரச் சம்பளமளிக்க ஏற்பாடு செய்யவும் தீர்மானித்திருக்கிறார்கள். இத்துடன் அடுத்த மாதம் நடைபெறப் போகும் அண்ணாமலைச் சர்வகலாசாலை வெள்ளி விழாவுக்கு இலங்கையிலுள்ள பழைய மாணவர்களின் தூது கோஷ்டி அனுப்ப ஏற்பாடாகி வருகிறது.

— ரஜனி

# THE SUNDIAL

## certainly helped—



முற்காலத்தில் சூரிய நிழலைக் கொண்டு பல சாதனங்களிலும் நேரத்தை அறிந்தனர். ஒரே நிலையில் பதித்த டயல் முதல் இலகுவாக எடுத்துச் செல்லக் கூடிய டயல் வரை பல தோற்றங்களிலும் அளவிலும் சாதனங்கள் இருந்தன. இப் படத்தில் உள்ளதுபோல ப்ளாரன்டைன் தேசத்தில் 1560ம் ஆண்டில் 10 அங்குல உயரமுள்ளதை உபயோகித்தனர். அவை சித்திர வேலைப்பாடுடன் அதிநுட்பமாக நிர்மாணிக்கப்பட்டும் ஒரு மணிக்குக் குறைந்த காலத்தை அறிய வசதி இல்லாதிருந்தது. அந்நாட்களில் ஒரு மணிக்குக் குறைவான காலத்தைக் கவனித்ததில்லை. ஆனால் இன்றைய நவீன கால வாழ்விலோ நிமிஷங்கள் மிக முக்கியம்.




இதனால்தான் வெஸ்ட் எண்ட் கடிகாரங்கள் இன்று இந்தியாவில் மிகப் பிரசித்தி பெற்றிருக்கின்றன. மிக நெருக்கடியான சந்தர்ப்பங்களிலும் கூட சரியான மணி கண்டு பிடிக்க அவைகள் நம்பப்படுகின்றன. எல்லோருடைய விருப்பத்துக்கும் வாங்கும் சக்திக்கும் ஏற்றவாறு பற்பல நவீன ரகங்களில் அழகிய கவர்ச்சிகரமான கடிகாரங்கள் உள்ளன. மேலும் ஒவ்வொன்றும் பண மதிப்புக்குச் சிறந்ததாக இருக்கும். வெஸ்ட் எண்ட் கடிகாரத்தை நிச்சயமாகக் கவனித்து வாங்குங்கள்.

*Accurate timing today depends on*

# WEST END WATCHES

*Write for FREE Catalogue*

WEST END WATCH CO. BOMBAY AND CALCUTTA

# அமரதாரா

## கல்கி

### அத்தியாயம் 25

## 'கள்ளம் புகுந்தது'

தேவர்கள் பூவுலகில் நடக்கும்போது அவர்களுடைய பாதம் பூமியில் படாது என்று சொல்கிறார்கள். நான் தேவகணத்தைச் சேர்ந்தவளல்லதான்; ஆனாலும் அன்று வீடு திரும்பிய போது என்னுடைய பாதம் பூமியில் பதிந்ததாகவே தோன்றவில்லை. காற்றில் மிதந்து பறந்து போவதாகவே தோன்றியது.

என்னை யறியாமல் என் வாய் இந்தப் பாரதி பாடலைப் பாடியது :—

"உச்சி குளிர்ந்ததடி—சகியே
உடம்பு நேராச்சு
மச்சிலும் வீடுமெல்லாம்—சகியே
மனதுக் கொத்ததடி!
இச்சை பிறந்ததடி—எதிலும்
இன்பம் விளைந்ததடி
அச்சம் தவிர்ந்ததடி—சகியே
அழகு வந்ததடி!"




இந்தக் கடைசி அடியைப் பாடி முடித்ததும் எனக்கே சிரிப்பு வந்து விட்டது. இந்தப் பாடல் ஒன்றும் என் நிலைமைக்குப் பொருத்தமாக இல்லை. எனக்கு உச்சி குளிரவில்லை; தலையில் கை வைத்துப் பார்த்தால் வெய்யில் உறைத்துச் சுளீர் என்று சுடுகிறது. உடம்பில் உள்ள கோணல்கள் அப்படியேதான் இருக்கின்றன; நிமிர்ந்து நேராகி விடவில்லை. எங்கள் வீட்டுக்கு மச்சிலே இடையாது, மனசுக்கு எப்படி ஒத்திருக்க முடியும்? இச்சை எதிலும் பிறக்கவும் இல்லை; இன்பம் விளையவும் இல்லை. நான் எதற்கும் அச்சப் பட்டதில்லை; அச்சம் நீங்கவுமில்லை. எல்லாவற்றிலும் வேடிக்கை கடைசி வரிதான்! "அழகு வந்ததடி!" புதிதாக என்ன அழகு எனக்கு வந்துவிடப் போகிறது? இருக்கிற அழகைக் கவனமாகக் காப்பாற்றிக் கொண்டாலே போதாதா?

இதை யெல்லாம் பற்றிச் சொல்வதற்கு ஒரு தோழியும் எனக்கு இல்லை. "எனக்குப் புதிதாய் அழகு வந்திருக்கிறதா?" என்று யாரிடம் நான் கேட்க? அம்மாதான் என் தோழி. அவளிடந்தான் என் மனத்தில் தோன்றுவதை யெல்லாம் நான் சொல்லுவது வழக்கம். இன்று ரங்கதுரையைச் சந்தித்ததையும் அவளிடம்தான் சொல்ல வேண்டும். சாயங்காலம் அவர் வருவதாகச் சொல்லியிருப்பதையும் கூற வேண்டும்.

இப்படி எண்ணிக் கொண்டு போனவள் வீட்டை அடைந்ததும் அதை மாற்றிக்கொள்ள வேண்டியதாயிற்று. அம்மா வாசலிலே காத்துக் கொண்டிருந்தாள். என்னைப் பார்த்ததும் சிறிது கோபமாகவே, "என்னடி இந்து! இத்தனை நேரம் எங்கே போயிருந்தாய்? முன்னே யெல்லாம் போல் நீ அடிக்கடி இனி இஷ்டப்படி வெளியே போய்த் திரியக்

கூடாது. நேற்றைக்கெல்லாம் படித்துப் படித்துச் சொல்லிக் கொண்டிருந் தோமே! எங்கள் வார்த்தையில் உனக்குக் கொஞ்சங்கூட மதிப்பில்லையா?'' என்று கேட்டாள்.

"நானுந்தான் 'வீட்டுக்குள்ளே பூட்டிக் கிடக்க எனக்குச் சம்மதமில்லை!' என்று பதில் சொன்னேனே?'' என்றேன்.

"எப்படியாவது கெட்டலை! உன் தலை எழுத்துப் போல் நடக்கட்டும்! வேளா வேளையில் சாப்பிடுவதற்காகவாவது வரக்கூடாதா? எத்தனை நேரம் உனக்காகக் காத்திருப்பது?''

"உன்னை யார் காத்திருக்கச் சொன்னார்கள்?'' என்றேன் நான்.

"நீ காத்திருக்கச் சொல்லவில்லை. ஆனால் என் மனசுதான் கேட்கவில்லை. பன்னிரண்டு மணியாகியும் நீ வராமற் போகவே கவலைப்பட ஆரம்பித்து விட்டது. பைத்தியக்கார மனசு! இந்தப் பெண்ணிடம் பாசம் வைக்காதே என்று எத்தனை சொல்லியும் அதற்குப் புத்தி வரவில்லை!'' என்றாள்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் எனக்கு என்னமோ போல் ஆகிவிட்டது. எத்தனையோ குதூகலமாக அம்மாவிடம் செய்தி சொல்ல வந்தோம். அவளோ இப்படி வேதனையுடன் பேசுகிறாள். என் கண்களில் நீர் துளிக்கப் பார்த்தது. ரங்கதுரையைப் பற்றிப் பேச இது சந்தர்ப்பமில்லை யென்று தீர்மானித்துக் கொண்டேன். அந்த நிமிஷத்தில் என் உள்ளத்தில் ஒரு கள்ளம் புகுந்து விட்டது; ஆனால் அது அப்போது எனக்குத் தெரிந்திருக்கவில்லை.

பதில் ஒன்றும் சொல்லாமல் வேறு பக்கமாக முகத்தைத் திருப்பிக் கொண்டு உள்ளே போனேன்.

"ரொம்பக் கோபித்துக் கொள்ளாதே! என்னுடைய தொந்தரவெல்லாம் இன்னும் கொஞ்ச நாளைக்குத்தான். ஒன்று, நானாவது கண்ணை மூடி விடுவேன்; அல்லது நீ புக்ககத்துக்குப் போய் விடுவாய்!'' என்றாள் அன்னை.

இதைக் கேட்டதும் எனக்குப் பொறுக்க முடியாமல் அழுகை வந்து விட்டது. வீட்டுக் கூடத்தில் குப்புறப் படுத்துக் கொண்டு உடல் குலுங்க விம்மி அழத் தொடங்கினேன்.

அம்மாவுக்கு மனம் இளகி விட்டது. என் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள். என் கையில் அப்போதும் அந்தப் புத்தகம் இருந்தது. எனக்குச் சமாதானம் செய்வதற்கு அதை ஒரு காரணமாக வைத்துக் கொண்டாள்.

"இந்து! இது என்ன இப்படி? பசி வேளையா யிருந்தபடியால் ஏதோ கோபமாகப் பேசி விட்டேன்? இதற்காகவா அழுவார்கள்? உன் பேரில் குற்றம் இல்லை. கையில் புத்தகத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டு விட்டாய் அல்லவா? எங்கேயாவது அருவிக் கரையில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தாய் போலிருக்கிறது. அப்பாவும் மகளும் ஒரே மாதிரி. புத்தகத்தில் மனத்தைச் செலுத்தி விட்டால் பொழுது போவதே



தெரிகிறதில்லை! போனால் போகட்டும்; கண்ணைத் துடைத்துக் கொண்டு எழுந்து சாப்பிட வா!'' என்றாள்.

இப்படிச் சொல்லிக் கொண்டே அம்மா என்னுடைய முதுகையும் தலையையும் இலேசாகத் தடவிக் கொடுத்தாள். அந்த அன்பில் ஆத்திரம், அழுகையெல்லாம் பறந்து போயின.

திடீரென்று சிரித்துக் கொண்டு எழுந்தேன். "பார்த்தாயா? உன்னை எப்படிக் கலங்க அடித்து விட்டேன்? ஜாக்கிரதை! இனிமேல் என்னைக் கோபித்துக் கொள்ளாதே!'' என்றேன்.



பிறகு, முகத்தை அலம்பிக் கொண்டு சாப்பிடச் சென்றேன்.

புத்தகம் இங்கிருந்து நான் எடுத்துக் கொண்டு போனதல்ல, அதைப் படித்துக் கொண்டிருந்ததினால் வருவதற்கு நேரமாகவில்லை என்பதை அம்மாவிடம் அப்போது நான் சொல்லவில்லை. அதற்கும் சந்தர்ப்பம் சரியாக இல்லையென்று நினைத்தேன். சாப்பிட்ட பிறகு சாவகாசமாக எல்லாவற்றையும் சொல்லிக் கொள்ளலாம் என்று எண்ணினேன்.

பிற்பகலில் அதைப் பற்றிப் பேச எண்ணியும் வாய் வரவில்லை. ஏதோ ஒரு தயக்கம் ஏற்பட்டுக் கொண்டேயிருந்தது. "ஒருவேளை அவர் சொன்னபடி வருகிறாரோ, இல்லையோ? வருவார் என்று சொல்லிவிட்டு வராமற் போனால், அதைப் பற்றிக் கேட்கும் கேள்விக்குப் பதில் சொல்லுவது கஷ்டமாயிருக்கும். அவர் சொன்னபடி வந்தாரானால், அதற்குப் பிறகு சொல்லிக் கொண்டால் போகிறது?" என்று ஒருவாறு மனத்தைத் திருப்திப் படுத்திக் கொண்டேன்.

• • •

அன்று மாலை வரையில் என் மனத்தில் ஏற்பட்டிருந்த கிளர்ச்சியைச் சொல்ல முடியாது. அம்மாவின் கோபத்தை அப்போதே மறந்து விட்டேன். வாசலில் போவதும் உள்ளே வருவதும் கொட்டிலுக்குப் போவதும் திரும்பி வருவதுமாயிருந்தேன். கன்றுக்குட்டி லில்லியுடன் ஏதேதோ பேசினேன். சாலையில் ஏதேனும் பேச்சுக் குரல் கேட்டால் உடனே போய்ப் பார்ப்பேன். அவர்கள் இல்லையென்று தெரிந்ததும் திரும்பி வருவேன்.

'இந்துமதி! ஏன் இப்படி வாசலுக்கும் உள்ளுக்குமாய் அலைந்து கொண்டிருக்கிறாய்? காலையிலெல்லாந்தான் ஊர் சுற்றி விட்டு வந்தாயே? இங்கே வந்து சற்று நேரம் உட்காரேன்! ஏதோ புத்தகம் படிக்கிறாயே? அதில் என்ன இருக்கிறது என்று எனக்குக் கொஞ்சம் சொல்லேன்?" என்றாள் அம்மா.

"இந்தப் புத்தகத்திலிருந்து உனக்கு ஒன்றும் புரியாது, அம்மா!" என்று ஒரே போடாய்ப் போட்டு விட்டேன்.

உண்மையில் எனக்குத்தான் ஏதேனும் புரிந்ததா என்று கேட்டால், சொல்ல முடியாது. புத்தகத்தில் கவனம் செலுத்தி இரண்டு வரி சேர்ந்தாற்போல் படித்தால்தானே, புரிகிறதா இல்லையா என்று தெரிந்து கொள்ளலாம்? புத்தகத்தைப் படிக்கத் தொடங்கினால், ஏதோ இங்கி


லிஷ் எழுத்துக்கள் கண் முன்னால் தெரிந்தன. அவ்வளவுதான்! விஷயத்தில் மனசு ஒன்றிச் செல்லவில்லை.

புத்தகத்தைப் பிரித்து நான் படிக்க முயன்றது சுமார் இருபத்தைந்து தடவை இருக்கும். கடைசித் தடவையாக நான் படிக்கத் தொடங்கிய போது, வீட்டு வாசல் தோட்டத்தின் கதவு திறக்கும் சத்தம் கேட்டது. அவர்கள் இருவருந்தான் வருகிறார்கள் என்பதைக் கண்டேன். இதுவரை வாசற் பக்கம் பார்த்துக்கொண்டிருந்தவள் இப்போது வேறு பக்கம் திரும்பி உட்கார்ந்து கொண்டேன். இது எதற்காக வென்று எனக்கே தெரியாது. புத்தகத்தை மட்டும் கீழே வைக்கவில்லை. விரித்த புத்தகத்தை முகவாய்க் கட்டையில் சேர்த்து வைத்துக் கொண்டிருந்தேன். அவர் கொடுத்த புத்தகத்தை அப்படி விடாமல் படித்துக் கொண்டிருக்கிறேன் என்றுதான் அவர் நினைத்துக் கொள்ளட்டுமே!

அம்மா ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்துவிட்டு, "இது என்ன? யாரோ இரண்டு பேர் வருகிறார்களே?" என்றாள். மீண்டும் "ஜமீன்தார் மகனும், இன்னொரு பிள்ளையும் வருகிறார்கள். எதற்காக இங்கு வருகிறார்கள்?" என்று கேட்டாள்.

"ஜமீன்தார் மகன் இல்லை, அம்மா! இப்போது அவர்தான் அசல் ஜமீன்தார்!" என்று சொன்னேன்.

"அப்படியே இருக்கட்டும். பின்னோடு வரு



கிற இன்னொரு பிள்ளை யாரோ தெரிய வில்லை!" என்றாள் அம்மா.

என் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. புதிய மனிதரைப் பற்றி அம்மா என்ன அபிப்பிராயம் சொல்வாளோ என்ற கவலை உண்டாயிற்று. அப்போதுதான் பார்ப்பதுபோல் பார்த்து விட்டு, "ஓகோ! இவர்தான் அம்மா, என்மீது மோட்டார் ஏறுமல் காப்பாற்றியவர்!" என்றேன்.

"இவர் என்ன உன்னைக் காப்பாற்றுகிறது? மோட்டார் டிரைவர் 'பிரேக்' போட்டு நிறுத்திக் காப்பாற்றினன்..."

"இவர்தான் கூச்சல் போட்டு வண்டியை நிறுத்தச் சொன்னர்."

"அழகாயிருக்கிறது! எப்படியிருந்தாலும், அப்பா இல்லாத சமயத்தில் இவர்கள் எதற்காக இங்கே வரவேண்டும்? நான் வாசலிலேயே நின்று விசாரித்து அவர்களை அனுப்பி விட்டு வருகிறேன்!" என்று சொல்லிவிட்டு வாசற் பக்கம் விரைந்து சென்றாள்.

ஒரு கணம் எனக்கு நெஞ்சம் திடுக்கிட்டது. அப்படி ஒன்றும் நடந்துவிடாமல் தடுக்க வேண்டும் என்று நானும் அம்மாவுக்குப் பின்னல் சென்றேன்.

அம்மா வீட்டு வாசற்படியில் வழி மறிப்பவள் போல நின்று கொண்டாள். அவர்கள் அருகில் வந்ததும், "வாருங்கள்! பண்ணையார் ஊரில் இல்லை. ஏதோ கோர்ட் காரியம் என்று புறப்பட்டுப் போயிருக்கிருர்!" என்றாள்.

அம்மாவுக்குப் பின்னல் நின்ற என்னை ரங்கதுரை பார்த்தார். அவருடைய கண்கள் சிரித்தன. "பண்ணையார் ஊரில் இல்லை என்பதை ஏன் என்னிடம் சொல்ல வில்லை?" என்ற கேள்வி அவருடைய பார்வையில் அடங்கியிருந்தது.

ஜமீன்தார் தங்கபாண்டியன், "பண்ணையார் ஊரில் இல்லையா? அதனல் பாதகமில்லை. உங்கள் குமாரியைப் பார்த்து விட்டுப் போகத்தான் முக்கியமாக நாங்கள் வந்தோம். பாவம்! நேற்று மோட்டாரில் அகப்பட்டுக் கொள்ள இருந்தாள். எங்கள் இரண்டு பேருக்கும் கதிகலங்கிப் போய் விட்டது. காயம், கியம் படவில்லையே என்று பார்த்து விசாரித்து விட்டுப் போவதற்காக வந்தோம்!" என்றார்.

"காயம் ஒன்றும் படவில்லை. ஆனால் நேற்றைக்கெல்லாம் ஒரு மாதிரி பிரமை பிடித்தது போலிருந்தாள். ஆனல் இன்றைக்குப் பொழுது விடிந்ததும் மறுபடியும் புறப்பட்டுப் போய் விட்டாள். எனக்கு ஒரே கவலையாய்ப் போய்விட்டது!" என்றாள் அம்மா.

"இந்துமதியை இனிமேல் நீங்கள் தனியாக வெளியில் அனுப்பக் கூடாது. இன்னும் சிறுகுழந்தை மாதிரியே தலை கால் தெரியாமல் ஓடுகிருள்! அடே அம்மா! நேற்று என்ன ஓட்டம் ஓடினாள்! என் சிநேகிதன் பிரமித்துப் போய் விட்டான்" என்றார் தங்க பாண்டியன்.

அவர்கள் திரும்பிப் போகிறதாகத் தோன்றவில்லை. எத்தனை நேரம் அவர்களை வாசலிலேயே நிறுத்தி வைப்பது?

என்னுடைய தாயின் மனம் கொஞ்சம் இளகி விட்டது. "இந்தப் பிள்ளை யார்?" என்று கேட்டாள்.

ரங்கதுரை இப்போதுதான் பேசினர். "நான் இவருடைய சிநேகிதன், அம்மா! ஏழை சிநேகிதன். இந்த ஊர் ரொம்ப அழகாயிருக்கும் என்று சொல்லி அழைத்துக் கொண்டு வந்தார். வந்த இடத்தில் இந்த மாதிரி ஒரு பெண்ணுக்கு அபாயம் உண்டாக்கி விட்டோமோ என்று என் நெஞ்சு பதை பதைத்துக் கொண்டேயிருக்கிறது. உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு போக வந்தேன்!" என்றார்.

"ஏன் வாசலிலேயே நிற்க வேண்டும்? உள்ளே வந்து உட்காருங்கள்!" என்றாள் என்னுடைய தாயார்.

அவருடைய இனிய குரலையும் பணிவான வார்த்தைகளையும் கேட்ட பிறகு வேறு என்ன சொல்ல முடியும்?

உள்ளே முன்புறத்து ஹாலில் வந்து அவர்கள் இருவரும் நாற்காலியில் உட்கார்ந்தார்கள்.

அம்மா காப்பி போடச் சொல்லுவதற்காகச் சமையல் உள்ளுக்குப் போனாள்.

நான் நின்று கொண்டிருந்தேன்.


தங்க பாண்டியன், "இந்தப் பெண்தான் நேற்று நம் மோட்டாரின் முன்னல் விழுந்து உயிரைவிடப் பார்த்தவள்! அடையாளம்தெரிகிறதோ, இல்லையோ?" என்று கேட்டார்.

ரொம்பக் கூச்சமுள்ளவராயிருந்த தங்க பாண்டியனைத்தான் எனக்குத் தெரியும். இப்போது இவ்வளவு வாசாலமாகப் பேசியது எனக்கு வியப்பை அளித்தது. அவருடைய சிநேகத்தின் காரணமாகத் தான் இருக்க வேண்டுமென்று எண்ணினேன்.

அச் சமயம் "அடையாளம் நன்ருய்த் தெரிகிறது. ஒரு தடவை பார்த்தால்

# பினாகா பற்பசை

## ஏன் உபயோகிக்க வேண்டும்?



வாய் ஓர் மலரும்

சோபையைப் பெற்று,

பற்கள்



வெண்மையை அடைந்து




போன்ற உறுதியைப்

பெறுவதற்காகத்தான்!

நீங்களும் உங்கள் குழந்தைமார்களும்

அதன்



நறுமணத்தையும்

பற்களுக்கு அளிக்கும் போஷாக்கையும்

பெரிதும் விரும்புவீர்கள்.

பினாகா ரோஸ் அல்லது 'பினாகா கிரீன்' க்ளோ
ரோபில் சேர்ந்த பற்பசைகளை உபயோகியுங்கள்.

# BINACA

சிபாவின் உன்னத பற்பசை.

ஒவ்வொரு ட்யூப் பினாகா பற்பசையுடனும், நாற்காலிகள், சோபாக்கள், கண்ணாடிகள், சுவர்கள் இவைகளை அலங்கரிப்பதற்கான மனோரம்யமான ஒரு ஒட்டும் கலர் சித்திரம் அடங்கியுள்ளது.

CBK-2111

மறக்கக் கூடிய முகமா ?'' என்று ரங்க துரை கூறியது என் காதில் விழுந்தது.

அந்தப் புகழ்ச்சி உரை என்னைக் கூசச் செய்தது. ஆனால் புகழ்ச்சி உரை மட்டுந்தானா அதில் இருக்கிறது? வேறு ஏதோ......அவர் ஏன் நம்மை இப்படிக் கூர்ந்து பார்க்கிறார் ? அந்தப் பார்வைக்கு என்ன பொருள் ?

"அடேடே ! இது என்ன அதிசயம்? நீ காலையில் வைத்துக் கொண்டு படித்தாயே, அதே டாகூர் புத்தகம் இந்துமதியின் கையிலும் இருக்கிறதே !'' என்றார் தங்க பாண்டியன்.

"எனக்கும் ஒரே அதிசயமாக இருக்கிறது. இந்துமதி ஹைஸ்கூலில் கூடப் படித்ததில்லை என்று சொன்னாயே? டாகூர் புத்தகத்தை எப்படிப் படித்து அர்த்தம் செய்து கொள்கிறாள் ?'' என்று கேட்டார் ரங்கதுரை.

இப்படிச் சொல்லி விட்டு அவர் என்னைப் பார்த்தார். முன்னே சொன்னது, இப்போது சொன்னது எல்லாவற்றிற்கும் எனக்குப் பொருள் விளங்கிவிட்டது. அன்று மத்தியானம் நாங்கள் சந்தித்துப் பேசியதை அவர் தங்கபாண்டியனிடம் சொல்ல வில்லை ! ஏன் ?

நானும் என் தாயாரிடம் சொல்ல வில்லை என்பதை அவருக்குச் சங்கேதமாகத் தெரிவிக்க விரும்பினேன்.

"இந்தப் புத்தகத்தினால் இன்று எனக்கு நல்ல வசவு கிடைத்தது. நான் எங்கேயோ அருவிக் கரையில் உட்கார்ந்து இந்தப் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்ததனால்தான் வீட்டுக்குச் சீக்கிரம் வரவில்லை யென்று அம்மா கோபித்துக் கொண்டாள். இதைப் பிடுங்கி எறிந்து விடப் பார்த்தாள். 'புத்தகம் என்ன செய்யும்?' என்று சொல்லி அம்மாவைச் சமாதானப் படுத்தினேன்'' என்றேன்.

நான் சொல்ல விரும்பியதை அவரும் அறிந்து கொண்டார் என்று அவருடைய முகம் தெளிவாகக் கூறியது. இவ்விதமாக எங்களிருவருக்குள்ளும் ஒரு இரகசிய சங்கேதம் ஏற்பட்டது.

அந்த இரகசிய சங்கேதம் எதற்காக எனக்கு அத்தகைய இன்பத்தை அளிக்க வேண்டும்? முன்பின் தெரியாதவர், நேற்றுத்தான் முதன் முதல் பார்த்தவர், —அப்படிப்பட்ட ஒருவரிடம் அம்மாவுக்குக்கூடத் தெரியாத ஓர் இரகசியத்தைப் பகிர்ந்து கொள்வதில் எதற்காக மகிழ்ச்சி ஏற்பட வேண்டும்? அது முறையான காரியமா என்றுகூட என்னால் அப்போது சிந்திக்க முடியாமற் போனதேன்? மனித உள்ளங்களைப் படைத்த ஆண்டவனுக்கே அது தெரியும்.

அம்மாதிரி பெற்ற தாயினிடமே ஒரு காரியத்தைச் சொல்லாமல் மர்மமாக மறைத்து வைத்ததன் பலன்தான் இன்று இவ்வளவு பயங்கரமான தண்டனையாக மூண்டிருக்கிறதோ, என்னமோ ?

இதற்குள் என் அன்னையும் அங்கு வந்து விட்டாள். அவள் உட்கார்ந்த பின் நானும் உட்கார்ந்து கொண்டேன்.

"அரண்மனையில் எல்லாரும் சௌக்கியமா ?'' என்றாள் அம்மா.

"சௌக்கியத்துக்கு ஒரு குறைவு மில்லை'' என்றார் தங்கபாண்டியன்.

அப்புறம் அம்மாவுக்கும் ஒன்றும் கேட்கத் தோன்றவில்லை.

"சுசிலா டீச்சர் அரண்மனைக்கு வந்து உங்கள் தங்கைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறாரா?'' என்றேன்.

"அவர் வருவதிலும் குறை வில்லை; பாடம் சொல்லித் தருவதிலும் குறை வில்லை: படிப்பு மட்டுந்தான் தங்கைகளுக்கு வர மாட்டேன் என்கிறது !'' என்றார் தங்கபாண்டியன்.

இதற்கு மேலே என்னத்தைப் பேசுவது? அரண்மனையைப் பற்றி ஒன்றும் கேட்பதற்கில்லை.

"உங்கள் சிநேகிதருக்கு இந்த ஊர் பிடித்திருக்கிறதா ?'' என்று கேட்டேன்.

"இந்த ஊரும் பிடித்திருக்கிறது. இந்த ஊர் மனிதர்களும் பிடித்திருக்கிறார்கள்!'' என்று ரங்கதுரையே பதில் சொன்னார்.

அப்போது அம்மா, "தங்கபாண்டியன் என்றால், இந்த ஊரில் எல்லாருக்குமே ஒரு தனி அபிமானம். இளைய ஜமீன்தார் இருந்தால்தான் ஊரே களையா யிருக்கிறது என்பார்கள் !'' என்றாள்.

"ஆனால் இவன் என்னைப் பார்ப்பதற்காக இங்கே வரவில்லை, அம்மா! பண்ணையாரைப் பார்ப்பதற்காகத்தான் முக்கிய

---

அட்டைப் படம்

# அமரதாரா

**இந்தக் கதையில் பின்னால் வரும் இனிய சம்பவம் இவ் வாரத்துக் "கல்கி" அட்டைச் சித்திரமாகத் திகழ்கிறது.**

மாக வந்தான்! நாளைக்குக் கட்டாயம் பண்ணையார் வந்து விடுவார் அல்லவா?"

"வந்து விடுவார். ஆனால் உங்கள் சிநேகிதருக்குப் பண்ணையாரை முன்னால் தெரியுமா என்ன?"

"நேரில் தெரியாது; நான் சொல்லித்தான் தெரியும். இவன் சரித்திர ஆராய்ச்சியில் ரொம்ப ஈடுபட்டவன். இந்த ஊரின் பழைய சரித்திரம் எல்லாம் இவனுக்குத் தெரிந்து கொள்ள வேண்டுமாம். பண்ணையாருக்குத்தான் அது நன்றாகத் தெரியும் என்று சொன்னேன். அதற்காகவே குங்குமத்துறைக்கு வந்திருக்கிறான்" என்றார் தங்கபாண்டியன்.

"இந்த ஊர் என்ன அப்படிப் பிரமாதமான ஊரா? இதற்குப் பழைய சரித்திரம் என்ன இருக்கப் போகிறது?"

"நான் பதில் சொல்லுகிறேன்!" என்றார் ரங்கதுரை.

"இந்தத் தங்க பாண்டியன் இப்படி ஏதோ சாதுவா யிருக்கிறானே என்று எண்ணுகிறீர்கள். இவனுடைய பாட்டனாருக்குப் பாட்டனார் விராதி வீரர். அவர் பெயர் முத்துவீரப்ப பாண்டியர். பாஞ்சாலங்குறிச்சி கட்ட பொம்மனைப் பற்றிக் கேட்டிருப்பீர்களே? அவனைக் கும்பெனியார் தூக்கில் போட்ட போது இந்தத் தென்பாண்டி நாட்டிலுள்ள நாற்பத்தைந்து பாளையக்காரர்களையும் தருவித்திருந்தார்கள். கட்டபொம்மன் தூக்கிலிடப் படுவதைப் பார்ப்பது மற்றவர்களுக்கு ஒரு பாடமாயிருக்கும் என்று எண்ணினார்கள். ஆனால் முத்துவீரப்ப பாண்டியன் விஷயத்தில் அவர்கள் எண்ணம் பலிக்கவில்லை. அவருடைய ஆக்ரோஷம் அதிகமாயிற்று. ஆயிரம் வீரர்களைச் சேர்த்துக்கொண்டு போய்ப் பாளையங்கோட்டைச் சிறையிலிருந்து ஊமைத் துரையை விடுதலை செய்து கொண்டு வந்தார். அப்புறம் கும்பெனிப் பட்டாளத்துடன் பல இடங்களில் சண்டை போட்டார். வெள்ளைக்காரர்களை விரட்டி விரட்டி யடித்தார். முத்து வீரப்பன் என்றால், அந்த நாளில் கும்பெனியார்களுக்குச் சிம்ம சொப்பனமா யிருந்ததாம்......"

"அப்பா அடிக்கடி ஒரு பாட்டுப் பாடுவார்! அது நீங்கள் சொல்லும் முத்து வீரப்ப பாண்டியனைப் பற்றித்தான் என்று தோன்றுகிறது."

"அது என்ன பாட்டு? உனக்குத் தெரியுமா?" என்றார் ரங்கதுரை.

"சில அடிகள் மட்டும் தெரியும்; சொல்லட்டுமா?" என்றேன்.

"சொல்லியேதான் தீர வேண்டும். இல்லாவிட்டால் யார் விடுகிறார்கள்!"

கிராமாந்தரக் கும்மி மெட்டில் இனிமையாக அமைந்துள்ள பின் வரும் பாடலைப் பாடினேன்;—

"குங்குமத்துறையின் கோமகனும்—அவன்
எங்கள் குடிக்குக் காவலனும்!
முருகன் கோபுரம் தெரியக் கட்டிய
முத்து வீரப்பனைப் பாடுங்கடி!

சந்தனப் பொட்டுக் கம கமங்க
சவ்வாதுப் பொட்டுத் தள தளங்க
சுந்தரமான குருதை மேலே
இந்திரன் வரதைப் பாருங்கடி!

வேலைக் கையில் பிடிப்பானும்!—அந்த
வெள்ளையர் ஓட அடிப்பானும்!
காலனும் அஞ்சும் கடும் புலியின்
வாலை இழுத்து மிதிப்பானும்!"

இதை நான் பாடிவரும்போது ரங்கதுரை அடிக்கடி "பலே பலே!" என்று சொல்லி உற்சாகப்படுத்தி வந்தார்.

பாட்டு முடிந்ததும், "ரொம்ப நன்றாயிருக்கிறது. இந்த மாதிரி ஒரு பாட்டு ஓராயிரம் ரூபாய் பெறும். நான் தங்க பாண்டியனாயிருந்தால் இந்தப் பாட்டுக்கு அட்சர லட்சம் கொடுப்பேன். இவ்வளவுதானா? இன்னும் இது போன்ற பாடல்கள் உண்டா?" என்று துடிப்புடன் கேட்டார் ரங்கதுரை.

"எனக்கு இவ்வளவுதான் தெரியும்; அப்பாவுக்கு இந்த மாதிரி ஐந்நூறு பாட்டுக்குமேல் தெரியும். இதெல்லாம் என்ன பைத்தியக்காரப் பாட்டு என்று நான் பரிகாசம் செய்வது வழக்கம்."

"உன்பேரில் குற்றம் இல்லை. பழைய சரித்திரம் தெரிந்திருந்தால்தான் இந்தப் பாட்டின் மகிமை தெரியும். அந்த வீரனுடைய வம்சத்தில் பிறந்த தங்கபாண்டியனுக்கே தெரியவில்லையே?"

"இந்த ஊரின் சரித்திர மெல்லாம் அப்பாவுக்கு ரொம்ப நன்றாய்த் தெரியும். மலை மேலே ஏதோ ஒரு பழைய கோட்டை இடிந்து கிடக்கிறதாம். அதில் ஊமைத்துரை வந்து ஒளிந்து கொண்டிருந்தாராம். அதைப் பற்றிக் கூட அப்பா சொல்லி யிருக்கிறார்."

"இந்த ஊரில் பத்து நாள் இருக்கலாம் என்று எண்ணி வந்தேன். ஒரு மாதம் இருக்க வேண்டியதுதான் போலிருக்கிறது" என்றார் ரங்கதுரை.

அந்த வார்த்தைகள் என் செவிகளில் இன்ப அருவியாய் விழுந்தன. (தொடரும்)


ஊக்கம்
சக்திக்கு
வேலை செய்யும்
இடத்தில்
விளையாட்டு
மைதானத்தில்
கடினமான வேலை, தீவிரமான விளையாட்டு, மற்றும் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பூரண சக்தி பெற உங்கள் உணவுடன் ஏதாவது அதிகப்படி போஷாக்கைச் சேர்த்துக்கொள்ளுங்கள். ஏதாவது ஒரு ருசிகரமான, பரிபூரண சத்து மிகுந்த ஒரு பானம்........அது தான் ஒவல்டின்! சந்தோஷமும், சுறுசுறுப்பும் மிகுந்த உங்களுக்கு இது இன்றியமையாததோர் ஊக்கம் ஊட்டும் பானமாகும்.
விநியோகஸ்தர்கள்:
கிரஹாம்ஸ் ட்ரேடிங் கோ.,
(இந்தியா) லிட்.
OVALTINE
அருந்துங்கள் ருசிகரமான
ஒவல்டின்
ரேடியோ சிலோனிலிருந்து ஒவல்டின் அமெச்சூர் நேரங்களை கேளுங்கள்:
(ஹிந்தி-41. 72 மீட்டர்கள்), சனிக்கிழமைகள் இரவு 8 முதல் 8-30 மணி.
(இங்கிலீஷ்-9520 கிலோசைகிள்ஸ் 31 மீட்டர்கள்)
ஞாயிறுகள் இரவு 8 முதல் 8-30 வரை
IV. 460

# எந்த வேலைக்கும் நீங்கள் அக்ரிகோ கருவிகளை நம்பலாம்!

**அக்ரிகோ**

சிறந்த வேலைகளுக்குச் சிறந்த கருவி!






**கோடரிகள்:** இரண்டு ரகங்களில் கிடைக்கின்றன. தோட்ட வேலைக்கும், சுரங்க வேலைக்கும், ரஸ்தாக்களை அமைப்பதற்கும் பிரத்தியேகமாக விரும்பப்படுபவை

ஆம், ஒவ்வொரு வேலைக்கும் ஏற்ற அக்ரிகோ கருவிகள் இருக்கின்றன. மேலும் அக்ரிகோ கருவிகள் நீடித்து உழைக்கக்கூடியவை என்பதை நீங்கள் நம்பலாம். அவை ஹை-கார்பன் எஃகால் தயாரிக்கப்பட்டு, பிரத்தியேகமாக காச்சப்பட்டவை







**மண்வெட்டிகள்:** மூன்று ரகங்களில் கிடைக்கின்றன. ஆழமாக வெட்டுவதற்காக நன்கு அமைக்கப்பட்டுள்ளன

**கொத்துகள்:** ஐந்து ரகங்களிலிருந்து உங்களுக்கு வேண்டியதை தேர்ந்தெடுங்கள். அவை உறுதியாக வேலை செய்வதற்காகவே தயாரிக்கப்பட்டவை.

**மண்வாரிகள்:** ஐ. எஸ். ஐ. குறிப்புகளின்படி இரண்டு ரகங்களில் தயாரிக்கப்பட்டவை. கனமான மரப் பிடியும், அழகான அலகும் பொருத்தப்பட்டவை

## டாடா அக்ரிகோ கருவிகள்



**சம்மட்டிகள்:** உறுதிக்கும் உழைப்புக்கும் இணையற்றவை. 1 ராத்தல் நிறையிலிருந்து 16 ராத்தல் நிறை வரையில் கிடைக்கும்

**தி டாடா அயரன் & ஸ்டீல் கம்பனி லிமிடெட்**

தலைமை ஸேல்ஸ் ஆபீஸ்:

23-B, நேதாஜி சுபாஷ் ரோட், கல்கத்தா-1

கிளை ஆபீஸ்கள்: பம்பாய், மதராஸ், நாக்பூர், அஹமதாபாத், ஸெகந்திராபாத், விஜயநகரம் கண்டோன்மென்ட், ஜலந்தர் கண்டோன்மென்ட், கான்பூர் & பாட்னா

AG 3876

# வ. உ. சி. யை மறவோம்

நவம்பர் 19உ முதல் தமிழ்கூறும் நல்லுலக மெல்லாம் கப்பலோட்டிய தமிழரின் நினைவு நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

தூத்துக்குடி சிதம்பரனார் தொழிலாளர் இயக்கத்தின் தந்தை. நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே தூத்துக்குடியில் தொழிற் சங்கம் அமைத்து முதலாளி வர்க்கத்தோடு மோதினார். வ. உ. சி. சென்னை எம். எஸ். எம். ரயில்வே சங்கத்தின் தலைவராக இருந்து பல ஆண்டுகள் பணி புரிந்தார். சென்னைத் தொழிலாளர் சங்கத்தின் ஸ்தாபகர்களில் வ. உ. சி. ஒருவர்.

வ. உ. சி. கன்னித் தமிழ் வளர்த்த கவிஞர். திருக்குறளுக்கு மணக்குடவர் எழுதியிருந்த உரை மறைந்தே போய்விட்ட காலத்தில் அதைத் தேடி யெடுத்துப் பதிப்பித்துக் கொடுத்தார் சிதம்பரனார்.

அந்தக் காலத்தில் வ. உ. சி. நடத்திய போராட்டத்தால் காங்கிரஸின் அஸ்திவாரம் பலப்பட்டது. அந்த அஸ்திவாரத்தின் மீது காங்கிரஸ் மாளிகை ஆகாயமளாவி எழுந்து நிற்கிறது.

காங்கிரஸ்காரராக இருந்ததற்காக வ. உ. சி. சர்க்காரால் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார். சிதம்பரனார் காலத்திய காங்கிரஸில், வகுப்புவாதம் வாலாட்டியதில்லை. அந்நாளில் காங்கிரஸ்காரர்கள் தேச விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறைச்சாலைக்குச் சென்றார்கள். அக்கால காங்கிரஸ்காரர்கள் சிறைக்கு வெளியே ராட்டை சுற்றினார்கள்; சிறைக்கு உள்ளே மாடுகள் போலச் செக்கைச் சுற்றினார்கள். வ. உ. சி. வேளாளர், சுப்பிரமணிய சிவா அப்பட்டமான வேதியர். ஆனால், இவ்விருவரும் துன்பத்திலும் இன்பத்திலும் இணைபிரியாத தோழர்களாக வாழ்ந்தனர். ஆம்! அவர்கள் பிறப்புவழி சாதிகளை மறந்தனர். அன்று அவர்களுக்குத் தெரிந்திருந்தது தேசபக்த சாதி ஒன்றுதான்.

அந்தணரான சுப்பிரமணிய சிவாவை, தமது விருந்தாளியாக வைத்திருந்ததற்காக வேளாளரான சிதம்பரனாருக்கு ஜன்ம தண்டனை கிடைத்தது. வேளாளரான சிதம்பரனாரைச் சிறைப் பிடித்தான் என்ற காரணத்துக்காகக் கலெக்டர் ஆஷ் என்ற வெள்ளையனைக் கொன்று தானும் தற்கொலை புரிந்து கொண்டான் வேதியனான வாஞ்சி என்ற இளைஞன். வ. உ. சி., வாஞ்சி, சிவா ஆகிய மூவருடைய நட்பு இந்தக் காலத்தவர்களுக்கு நல்ல வழிகாட்டி யாகும்.

இந்த நாளில் போராட்டத்தைத் துவக்கிய தலைவர், தொண்டர்கள் சிறைச்சாலையை நிரப்பிக் கொண்டிருக்கும்போதே, தாம் மட்டும் ஜாமீனில் வரும் அதிசயத்தைப் பார்க்கிறோம். சிதம்பரனாரோ, தமது அந்தண நண்பரான சிவாவுக்கு யாரும் ஜாமீன் கொடுக்க முன் வராததால் அவரைச் சிறையில் விட்டு விட்டுத் தாம் மட்டும் வெளிவர மறுத்து விட்டார். அவரன்றோ தலைவர்!

இந்த நாளில் அரசியல் கட்சித் தலைமைப் பதவி ஏழையைப் பணக்காரராக்கி விடுகிறது. ஆனால் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட வ. உ. சி. செல்வராக இருந்து வறுமையாளராக மாறினார். ஆம், செல்வந்தராகப் பிறந்தார்; ஏழையாக மாண்டார். காரணம் தமக்காக மக்கள் என்று எண்ணாமல், மக்களுக்காகத் தாம் என்று எண்ணிப் பாடுபட்டதுதான். —"செங்கோல்"

# ஒரு எம். எல். ஏ. இல்லையா?

தற்பொழுது உள்ள ஆந்திர நாடு சென்னையாக இருந்த காலம். அனந்தப்பூரில் உள்ள பொறியியல் கல்லூரி சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கல்லூரியாக இருந்த காலம்.

தமிழ் நாட்டிலே பிறந்து, தாயகத்திலேயே முதல் வகுப்பிலிருந்து இடைக்கலை Intermediate வகுப்புவரை கல்வி கற்றோம். சென்னை கிண்டிப் பொறியியல் கல்லூரியில் விண்ணப்பம் செய்தோம். தமிழ் நாட்டுக் கல்லூரிகளில் இடம் இல்லையாதலால், சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த அனந்தப்பூர் பொறியியல் கல்லூரிக்கு அனுப்பப் பட்டோம்.

ஆனால் எங்கள் நிலைமை என்ன! எங்களுக்குத் தேர்வு சென்னையில் நடக்கும். ஆனால் ஆந்திரப் பல்கலைக் கழகம் பட்டம் வழங்கும். பாடத் திட்டமோ சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தது, அதுகூட மாறினாலும் மாறும். இவ்வாறு இரு பல்கலைக் கழகங்களும் முடிவு செய்திருக்கின்றன. இதை நாங்கள் எங்ஙனம் பொறுத்துக்கொள்ள முடியும்! ஆந்திரப் பல்கலைக் கழகத்துக்கு எங்களைத் தானம் செய்வதை முன்பே அறிவித்திருந்தால் நாங்கள் அனந்தப்பூர் கல்லூரிக்கு வந்திருக்கவே மாட்டோமே. மேலும், இங்கு படிக்கும் தமிழ் மாணவர்களில் அநேகர், பின் தங்கிய வகுப்பினர், ஹரிஜனங்கள் என்ற முறையிலே அரசினர் உதவிச் சம்பளம் கொண்டு படிப்பவர்கள். அரசினர் சம்பளம் கொடுக்கா விட்டால் படிக்கவே வசதியில்லாதவர்கள். "ஆந்திர நாடு பிரிவினை அவர்களைப் பிடித்தது. ஆந்திர நாட்டின் குடியாக இல்லாததால் கீழ்க் கண்டவர்களின் உதவிச் சம்பளம் நிறுத்தப் பட்டது" என்ற தலைப்போடு தமிழ் மாணவர்களின் உதவிச் சம்பளம் அனைத்தும் நிறுத்தப்பட்டது. இவர்களெல்லாம் இப்பொழுது என்ன செய்வது! சென்னைப் பல்கலைக் கழகம்தானே இவர்களை இங்கே அனுப்பியது! அரசினரின் உதவிச் சம்பளத்தையே மேலே கூறிய காரணம் காட்டி நிறுத்திய ஆந்திர அரசாங்கம், எங்களுக்கு ஆந்திரப் பல்கலைக் கழகத்தின் பட்டம் இருந்தாலும்கூட வேலை தருமா!

நிற்க. உதவிச் சம்பளத்தை இழந்து, செய்வது அறியாது திகைத்துத் தவிப்பதைச் சென்னை அரசாங்கத்தினருக்குப் பலமுறை தெரிவித்தும் அதைப் பற்றி ஆவன செய்யவில்லை. நாங்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதையே மறந்து விட்டதாகத் தெரிகிறது.

இங்குள்ள தமிழ் மாணவர்கள் சென்னை மாநிலத்தில் உள்ள கல்லூரிகளுக்கு மாற்றப்படவேண்டும்.

இங்கே உள்ள 35 பேர்களையும் பிரித்துச் சென்னைக்கும் கோவைக்கும் அனுப்பினால், மண்ணியல் (Civil), பொறியியல் (Mechanical), மின்னியல் (Electrical) ஆகிய மூன்று கிளைகளுக்கும் ஒவ்வொரு கல்லூரிக்கும், கிளைக்கு 5 அல்லது 6 பேர் அதிகம் ஆகும். இதை அந்தக் கல்லூரிகள் ஏற்றுக் கொள்ள முடியாதா!

அல்லது நாங்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தின் பட்டமே பெற வழி செய்ய வேண்டும்.

உதவிச் சம்பளத்தையும் இழந்து, ஆந்திர நாட்டிலே அல்லலுறும் தமிழர்களின் மேல் அன்பு கொண்டு, சென்னை அரசினரிடம் இதைத் தெரியப் படுத்தி, மேற்கூறிய இரண்டில் ஒன்றை நாங்கள் அடையும்படி உதவி செய்வதற்கு, ஒரு சட்ட சபை உறுப்பினராவது முன்வர மாட்டாரா!

அனந்தப்பூர்
5-11-54

முப்பத்திரண்டு
தமிழ் மாணவர்கள்

# வழிபாடும் தொண்டும்

நிகழும் நவம்பர் 13உ சென்னை வண்ணையம் பதியில் ஒரு திருவிழா நடந்தது. அந்தத் திருவிழாவை "ஆலய வழிபாடும் தொண்டும்" என்று அழைத்தார்கள். வாரத்தின் கடைசி நாளான சனிக்கிழமை தோறும் இந்தச் சமயத்தொண்டைச் செய்து வருகிறார்கள். நடத்துகிறவர்கள் திருவருள் அடிப்படையில் மக்களுக்குப் பணியாற்றி வரும் திருக்குறள் செயலகத்தாராகிய மாம்பாக்கம் குருகுலத்தார். இந்தக் குருகுலத்தின் தலைவர் தன்னலம் கருதாச் சமயத்தொண்டர், ஆசிரியர் இளவழகனார் அவர்கள். தமிழுக்கும், தமிழ்ப் பண்பாட்டுக்கும், சமயப் பணிக்கும் தம் வாழ்நாளையே அர்ப்பணம் செய்திருக்கும் சைவப் பெரியார். இவருடைய தலைமையின்கீழ் சென்னைமா நகரின் ஒவ்வொரு பேட்டைகளிலும் ஆலய வழிபாடும் தொண்டும் பக்தி சிரத்தையுடன் மிகுந்த உற்சாகமாக நடைபெற்று வருகின்றன.

செந்தமிழ் நாடு, சிவபக்திச் செல்வத்தைப் பரப்புவதற்கே தம் வாழ்நாளை அர்ப்பணித்த நாயன்மார்களையும் சிவநேசச் செல்வர்களையும் பெற்றெடுத்த திருநாடல்லவா! அந்தப் பரம்பரையில் வந்த பெரியோர்கள் இன்னமும் இருக்கிறார்கள் என்பதை ஒவ்வொரு சனிக்கிழமை தோறும் "ஆலய வழிபாடும் தொண்டும்" நடக்கும் இடங்களில் எல்லாம் காண முடிகிறது.

ஆவணித் திங்கள் விநாயகர் சதுர்த்திப் புண்ணிய தினத்தன்று சென்னை பார்க் டவுன் பிரசன்ன விநாயகர் ஆலயத்தில் நமது அரும்பெரும் தலைவர் ராஜாஜி அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இக் குருகுலத்தின் ஆலய வழிபாட்டுத் தொண்டைத் தொடர்ந்து பதினேழு வாரங்களாகச் சென்னை நகரின் பல்வேறு பகுதிகளில் உள்ள ஆலயங்களில் நடத்தி வருகிறார்கள். ஒவ்வொரு வாரத்திலும் இதற்கு முன் யாரும் கண்டிராத பெருமையுடன் சிறப்பாக நடத்துகிறார்கள்.

பிரசன்ன விநாயகர் ஆலயத்தில் ஆரம்பித்த இந்த பக்தி செல்வத் திருத்தொண்டு முறையே கந்த கோட்டம், புரசைவாக்கம் கங்காதீஸ்வரர் ஆலயம், மயிலை கபாலீஸ்வரர் கோயில், சூளை சிதம்பரேஸ்வரர் ஆலயம், வேப்பேரி வேதவிநாயகர் கோயில், குயப்பேட்டை கந்தப்பெருமான் கோயில், வியாசர்பாடி இரவீஸ்வரர் ஆலயம், வன்னிய தேனாம்பேட்டை பாலசுப்பிரமணியர் ஆலயம், பெரம்பூர் பழனி ஆண்டவர் கோயில் முதலிய இறைவன் உறைவிடங்களில் எல்லாம் ஆண்டவன் வழிபாடாகவும் ஆலயத் தொண்டாகவும் நடைபெற்று வருகின்றன.

இந்த உத்தமத் திருப்பணியில் சைவப் பெரியார்கள் திருப்புகழ் மணி ஸ்ரீ டி. எம். கிருஷ்ணசாமி ஐயர், ஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான், திரு சச்சிதானந்தம் பிள்ளை, திரு சங்கர வடிவேலுப் பிள்ளை

மாக எடுத்துச் சென்றனர். ஊர்வலம் அந்தப் பேட்டையின் பல முக்கிய தெருக்கள் வழியாகக் காசி விஸ்வநாதர் ஆலயத்தை நோக்கிச் சென்றது. திருக்குறள் வைத்திருந்த அலங்கரித்த சிவிகைக்குப் பின்னால் நெற்றியில் திருநீறு அணிந்த ஆயிரக்கணக்கான சைவத் திருமங்கையர்களும் சிவநேசச் செல்வர்களும் அணி அணியாக வந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. இந்தக் காலத்தில் தமிழ் நாட்டில் உண்மை ஆத்திகமும், சமய நெறியும், திருவருளும் எவ்வளவு உயர்வாக ஓங்கியிருக்கின்றன என்பதற்குச் சிறந்த அத்தாட்சியாக அத்திருக்கூட்டம் விளங்கியது.

இந்தத் திருக்கூட்ட ஊர்வலத்துக்குச் சென்னை நகரசபை அங்கத்தினர் திருமதி திரிபுரசுந்தரி அம்மையார் தலைமை தாங்கிச் சிறப்பித்தார். ஊர்வலம் சென்ற வீதிகளில் எல்லாம் தண்ணீர் தெளித்துக் கோலம் இட்டிருந்தனர். ஆங்காங்கு மாவிலைத் தோரணம் கட்டியிருந்தனர். அந்தப் பேட்டையே பெரிய திருவிழாக் கோலத்துடன் பொலிந்தது. ஊர்வலத்தில் கலந்துகொண்டிருந்த பக்த கோடிகள் பரவசத்துடன் சென்றுகொண்டிருந்தனர். தேவாரத்தையும், திருவருட்பாவையும் இசையோடு பாடிக்கொண்டு சென்றனர். வீதிகளில் ஆங்காங்கே ஊர்வலம் நிறுத்தப்பட்டது. ஊர்வலத்தின் முன்னால் கையில் ஜாலராவைத் தட்டிக் கொண்டு, தேவாரம் பாடிக்கொண்டிருந்த ஆசிரியர் இளவழகனார் அவர்களுக்கு மலர் மாலை அணிவித்து மக்கள் மகிழ்ந்தனர். ஊர்வலம் சென்னை வண்ணையம்பதி பசுவையன் தெருவிலுள்ள ஸ்ரீ கபில விநாயகர் கோயிலைச் சென்றடைந்தது. கோயில் மரியாதைகளுடன் ஆசிரியர் இளவழகனார் அவர்களையும் அவருடன் வந்த பக்த கோடிகளையும் வரவேற்றனர்.

கபில விநாயகர் கோயில், வள்ளியம்மையார் வழிபாட்டுக் கல்வி மண்டபத்தில் தியாகராயர் கல்லூரித் தலைவர் திரு எம். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் ஆசிரியர் இளவழகனார், திரு சச்சிதானந்தம் பிள்ளை முதலியவர்கள் பேசினார்கள். இறைவன் திருவருளைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். பழைய புராண இதிகாசங்களின் சிறப்பைப் பக்திச் சுவையுடன் இனிக்க இனிக்கச் சொற்பொழிவாற்றினார்கள். ஒழுக்க நெறியின் உயர்வைப் பற்றி வலியுறுத்திக் கூறினார்கள்.

இந்தச் சமயத் தொண்டு வண்ணையம்பதியில் நடைபெறுவதற்கு அந்தப் பேட்டையைச் சேர்ந்த சிவத்திரு வள்ளியம்மையின் பேருக்கமும் பெருமுயற்சியும்தான் காரணம். அவர்கள் சைவ சமயத்துக்கு ஆற்றி வரும் தொண்டும், சமயப் பெருவிழாக்கள் நடக்கும் [illegible]


குருகுலம் மாம்பாக்கம்
மதுராந்தகம் (அஞ்சல்)
திருக்குறட் செயலகம்-மன்பதைப்பணி



கடற் காற்றளிக்கும்
புத்துணர்ச்சி

# புது மாப்பிள்ளை




ஜயலக்ஷ்மி

மேஜைக் கருகில் சென்று அவர் என்ன எழுதுகிறார் என்று பார்த்தேன். ஓ! சங்கராந்தி வருகிறதல்லவா? தன் சகோதரிகளுக்குப் பணம் அனுப்புவதற்காக மணியார்டர் கூப்பனில் அவர் விலாசமெழுதிக் கொண்டிருந்தார்.

எழுதுவதை நிறுத்தி விட்டு என்னை நிமிர்ந்து பார்த்தார் என் கணவர். என் கண்களில் அவர் என்னத்தைக் கண்டாரோ, அறியேன். "ஏன், கோமதி! ஒருமாதிரியாக இருக்கிறாயே? இதுபோல் நமக்கும் சங்கராந்திப் பணம் அனுப்ப ஒரு சகோதரன் இல்லையே என்று வருத்தமாக இருக்கிறதா?" என்று கேட்டார்.

என் கண்கள் உண்மையாகவே கலங்கி விட்டன. நீண்ட பெருமூச்சு ஒன்று என் இதயத்தைக் கிழித்துக் கொண்டு வெளி வந்தது. "சகோதரன் இல்லாமலென்ன? இருந்தான். இன்னமும் எங்கேயாகிலும் இருக்கத்தான் செய்வான். ஆனால் நான் தான் அவன் அன்பை அனுபவிக்கக் கொடுத்து வைக்காத பாவியாகி விட்டேன்!" என்றேன், துயரம் தோய்ந்த குரலில்.

"எனக்கென்னவோ உன் சகோதரன் உயிருடன் இருப்பான் என்றே தோன்றவில்லை. அப்படி இருந்திருந்தால் இந்தப் பத்து வருஷங்களில் உன்னை ஒரு தடவை கூட வந்து பார்க்காமலா இருப்பான்?" என்று கேட்டார் என்னுடைய கணவர்.

"என் இருப்பிடம் அவனுக்கு எப்படித் தெரியும்? அவன் எங்களை விட்டுப் பிரியும் போது எனக்குப் பத்து வயது. இப்பொழுது என்னைப் பார்த்தால் கூட அவனுக்கு அடையாளம் தெரியுமோ தெரியாதோ?...ஹூம்" என்று மொழிந்த என்னை இரக்கத்துடன் பார்த்தார் அவர்.

அது சமயம் தொட்டிலில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த குழந்தை ரவி அழும் சத்தம் கேட்கவே கூடத்துக்கு ஓடி வந்தேன். அவனைச் சமாதானப் படுத்தத் தொட்டிலை ஆட்டிக் கொண்டேயிருக்க வேண்டுமாகையால் அப்படியே தரையில் உட்கார்ந்து கொண்டு தொட்டிலை ஆட்டத் தொடங்கினேன். ஆனால் என் உள்ளப் பாதையில் எண்ணக் குதிரை பின்னோக்கி ஓடிப் பத்து வருஷங்களுக்கு முன்னே போய் நின்றது.

அப்போது நான் பத்து வயதுகூட நிரம்பாத சிறுமி. என் அண்ணா சபேசனுக்கு வயது பதினாறு. எஸ். எஸ். எல். சி. படித்துக் கொண்டிருந்தான். அவன் என் கூடப் பிறந்த சகோதரன் அல்ல; என் தகப்பனாருக்கு, முதல் மனைவியிடத்தில் பிறந்தவன். மூன்றாவது வயதிலேயே அன்னையைப் பறி கொடுத்து விட்ட அபாக்கியவான்.

நான் அவன் சித்தியின் வயிற்றில் ஜனித்தவள். அந்தப் பத்து மாத காலம் அந்த வயிற்றில் வாசம் செய்ய நேர்ந்தமைக்காக நான் இன்றும் வருந்தத்தான் செய்கிறேன். என்னைப் பெற்றெடுத்த தாயானாலும் என் அண்ணா சபேசனை, மூத்தாள் மகன் என்பதற்காக, அவள் படுத்தி வைத்த பாடு என்னால் தாங்க முடியவில்லை. அவனுக்கு வயிறார உணவளிக்காமல் எனக்கு விலாப்புடைக்க வைத்துத் திணிப்பாள். அவன் கந்தல் வேஷ்டியுடன் காட்சி யளிப்பான். என் இடுப்பில் பட்டுப் பாவாடை மின்னும். இதைக் கண்டு என் நெஞ்சம் கொதிக்கும். சின்னஞ் சிறு சிறுமிதான் நான் அப்போது. ஆனால் என் உள்ளத்தில் ஊற்றெடுத்துப் பெருகும் சகோதர வாஞ்சை விரிந்து பரந்த கடலைவிடப் பெரியதாகவே இருந்தது.

அம்மாவுக்குத் தெரியாமல் எனக்கு அவள் கொடுக்கும் தின்பண்டங்களை அண்ணாவுக்குக் கொடுப்பேன், ஆசையோடு. அவன் அதை வாங்கிக் கொள்ள மறுத்துவிடுவான். என்னவென்று கேட்டால், "நீ குழந்தை! உன்னிடமிருந்து நான் வாங்கித் தின்பதா? சே! சே!" என்பான், சிரித்துக் கொண்டே. அதனால் சில சமயங்களில் 'அம்மா உனக்குக் கொடுக்கச் சொன்னாள்' என்று சொல்லிக் கொடுப்பேன். அவனும் அதை நிஜமென்று நம்பி விடுவான். அவன் ஆவலுடன் தின்பதை நான் திருப்தியோடு பார்த்துக் கொண்டிருப்பேன். இவைகளில் எதுவும் என் தகப்பனாருக்குத் தெரியாது. ஏனென்

றால் அவர் எதிரில் என் தாய் அண்ணாவிடம் அளவற்ற அன்புடன் பழகுவாள். ஆம். எல்லாம் வெறும் நடிப்புத்தான். கடைசியில் இந்தச் சிரமத்தைக் கூட அவனுக்கு வைத்திருக்கச் சிறிதும் விரும்பவில்லை பாழும் விதி.

திடீரென்று ஒரு நாள் அப்பா மாரடைப்பால் கண்ணை மூடி விட்டார். இதற்குப் பிறகு அம்மாவின் அட்டகாசம் வளர்பிறைச் சந்திரனைப் போல் வளர்ந்தது.

அப்பா இறந்த ஆறு மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள். அண்ணா பரீட்சைக்குக் கட்டப் பணம் வேண்டும் என்று கெஞ்சிக் கேட்டான் அம்மாவை.

அவள் சீறி விழுந்தாள். "போதும்! நீ படித்துப் பாஸ் செய்த லட்சணம்! உன்னுடைய அப்பா சம்பாதித்து என்னிடம் கொட்டி வைத்து விட்டுப் போக வில்லை" என்றாள் படபட வென்று.

அண்ணா அதற்குப் பதிலே பேச வில்லை. குனிந்த தலை நிமிராமல் வாசற் பக்கம் விடு விடென்று போய் விட்டான்.

மறு நாளுக்கு மறுநாள் என் தாய் மாமன் வந்திருந்தார். என் அம்மாவுக்குச் சந்தோஷம் பிடிபட வில்லை. தமையனுக்கு விழுந்து விழுந்து உபசரித்தாள். "நீதான் அண்ணா இனிமேல் என்னைக் கவனித்துக் கொள்ள வேண்டும்" என்றாள் மனமுருக. அவரும் அதற்கு வேகமாகத் தலையை ஆட்டி வைத்தார். நான் அவருக்குச் சகுனி என்று பெயர் வைத்திருந்தேன். ஏனென்றால் அவர் அடிக்கடி அம்மாவிடம் அண்ணாவைப் பற்றி இல்லாததும் பொல்லாததுமாகக் கோள் சொல்லிக் கொண்டே யிருப்பார். அதைக் கேட்டுக் கொண்டு அம்மா பத்திரகாளியாகி அண்ணாவை இம்சை செய்வாள்.

ஒரு நாள் காலை. குளித்து விட்டுத் தலையை வாரிக் கொண்டிருந்த என் மாமா, "ஐயையோ! என் மோதிரத்தைக் காண வில்லையே!" என்று கூச்சலிட்டார்.

"எங்கே அண்ணா வைத்தாய்?" என்று கேட்டுக் கொண்டே ஓடி வந்தாள் அம்மா.

"குளிக்கிற ஜன்னலில்தான் வைத்தேன். காண வில்லை!" என்றார் மாமா.

"நீ குளித்த பிறகு யார் குளித்தார்கள்?" என்று கேட்டாள் அம்மா.

"சபேசன்தான் குளித்தான்" என்றார் மாமா, அழுத்தமாக.

"கூப்பிடடி, அந்தத் தடியனை!" என்று அம்மா உத்தரவு பிறப்பித்தாள்.

நான் இரேழி அறைக்குள் போனேன். அண்ணா ஏதோ யோசனையி லாழ்ந்தவனாய், விசனமே உருவாய் உட்கார்ந்திருந்தான். எனக்கு வாயெழும்ப வில்லை. துயரம் தொண்டையை அடைத்தது. எப்படியோ தட்டுத்தடுமாறியபடி, "அண்ணா, உன்னை அம்மா கூப்பிடுகிறாள்" என்றேன்.

"ஏன், பரீட்சைக்குக் கட்டப் பணம் தரச் சம்மதித்து விட்டாளா, சித்தி?" என்று கேட்டுக் கொண்டே எழுந்திருந்தான்.

நான் அவன் கைகளைப் பற்றி இழுத்து, "அண்ணா!" என்றேன். அதற்கு மேல் பேச முடியாமல் எனக்கு அழுகை வந்து விடவே, 'நீ போ' என்று ஜாடை காட்டினேன். அவன் கூடத்துக்குப் போனான். நான் இரேழியிலேயே இருந்து விட்டேன்.

"ஏண்டா, போக்கிரி! எவ்வளவு நாளாக இந்தத் திருட்டு வேலை ஆரம்பித்திருக்கிறாய்?" என்றாள் எடுத்த எடுப்பிலேயே அம்மா.

"திருடவா? என்ன சித்தி சொல்லுகிறீர்கள்? எனக்கு ஒன்றுமே புரிய வில்லையே...!" என்றான் அண்ணா வாய் குழற.

"புரியாதுடா, புரியாது! குளிக்கிற அறை ஜன்னலில் வைத்திருந்த மாமாவின் மோதிரத்தை நீதான் எடுத்திருக்கிறாய்! வேறு யார் வந்து விட்டார்கள், இந்தப் பட்டப் பகலில் நம்வீட்டில் வந்து கொள்ளையடிக்க?"

"ஐயையோ! எனக்குத் தெரியாது சித்தி. நான் அதைப் பார்க்கவே யில்லையே!"

"கொடுத்து விடு மோதிரத்தை! திருட்டுப் பயலே, உன் குணம் எனக்குத் தெரியாதென்றா நினைக்கிறாய்?" என்று இரைந்து கத்தினாள் அம்மா.

"சித்தி, என்னை என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள். ஆனால் திருடன் என்று மட்டும் சொல்லாதீர்கள். நான் அப்படிப்பட்டவன் இல்லை!" என்று சொல்லி விட்டு 'ஓ' வென்று அழுது விட்டான் அண்ணா.

அதற்குப் பிறகும் அம்மா வாய்க்கு வந்தபடி திட்டினாள். மாமாவும் அவனுக்குத் தூபம் போட்டார். கடைசியில், 'போடா! போக்கற்றவனே! மோதிரத்தை எங்கேயோ கொண்டு போய் விற்று விட்டுப் பரீட்சைக்குப் பணம் கட்டி யிருப்பாய். இருக்கட்டும் ஒரு மாதத்துக்கு உன்னைப் பட்டினி போட்டுக் கொல்லா விட்டால் கேள்!" என்று மங்களம் பாடினாள் அம்மா. அண்ணா சொல்லொணாத் துயரத்துடன் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு வெளியே சென்றான். அன்று போனவன் போனவன்தான். அதற்குப் பிறகு அவன் திரும்பி வரவேயில்லை.

அவன் வீட்டை விட்டு வெளியேறிய நான்காம் நாள் வேலைக்காரி குளிக்கிற அறையைச் சுத்தம் செய்தபோது அகப்பட்டதாக அம்மாவிடம் மாமாவின் மோதிரத்தைக் கொடுத்தாள். அதற்குப் பிறகும்கூட அம்மா அண்ணாவைத் தேடிக் கண்டு பிடிக்க முயற்சி செய்யவே யில்லை. நான் எவ்வளவோ மன்றாடினேன். அவள் என்னை லட்சியமே செய்ய வில்லை. நாட்கள் மட்டும் தன் போக்கில் சென்றுகொண்டே யிருந்தன.

காலமென்னும் காலண்டரில் வருடமென்னும் எட்டு ஏடுகள் கிழித்தெறியப் பட்டன. நான் பருவப் பெண்ணாகி நின்றேன். என் தகப்பனார் விட்டுப் போயிருந்த ஒரே மூலதனமான வீட்டையே விற்று என் விவாகத்தை விமரிசையாக நடத்தி வைத்து விட்டாள் என் அம்மா.

நான் எனது புக்ககத்துக்கு வந்து சேர்ந்தேன். அம்மா கொஞ்ச நாட்கள் தன் தமயனிடம் போய் இருந்து வந்தாள். பிறகு ஒரு நாள் அவளும் வானுலகத்து வாசியாகப் போய்ச் சேர்ந்தாள். அதோடு எனது பிறந்தகத்துச் சகாப்தம் முடிவடைந்தது.

இதற்குப் பிறகுதான் எனக்கு ரவி பிறந்தான். அன்புக் கணவரின் இணையற்ற பிரேமையிலும், ரவியின் களங்கமற்ற முக காந்தியிலும் நான் என்னை மறந்து விட்டபோதிலும், நடு நடுவே என் சகோதரன் சபேசனின் நினைவுமட்டும் வராமலிருப்பதில்லை. அன்று கண்களில் கண்ணீர் மல்க, சோர்ந்த முகமும், தளர்ந்த நடையுமாக நடந்து சென்ற என் அண்ணாவின் பரிதாபகரமான உருவம் என் நெஞ்சை விட்டு அகலவேயில்லை.

"என்ன கோமதி! குழந்தை தூங்கிப் போய் அரை மணிக்கு மேலாகிறது. இன்னமும் எதற்காகத் தொட்டிலை ஆட்டிக் கொண்டேயிருக்கிறாய்?" என்று கூறிக் கொண்டே வந்தார் என் கணவர்.

நானும் என் சிந்தனை உலகத்திலிருந்து விடுபட்டவளாய்த் தொட்டில் ஆட்டுவதை நிறுத்தி விட்டு எழுந்திருந்தேன்.

"இதோ பார்! என் சித்தப்பா பெண் நளினாவுக்கு வருகிற பதினைந்தாம் தேதி கலியாணமாம். கடிதம் வந்திருக்கிறது" என்று கூறியபடி என் கணவர் என்னிடம் ஒரு கவரைக் கொடுத்தார்.

"கலியாணம் கோயம்புத்தூரில் தானே நடக்கும்?" என்று கேட்டேன்.

"ஆமாம். அங்குதான் அவருக்குப் பழக்கப்பட்டவர்கள் அதிகம்...நம்மை நான்கு தினங்களுக்கு முன்பாகவே வந்து விடவேண்டும் என்று எழுதியிருக்கிறார் சித்தப்பா!" என்றார், அவர் உற்சாகத்துடன்.

"அதற்கென்ன? போனால் போகிறது. நீங்களும் இப்பொழுதே லீவுக்கு எழுதிப் போட்டு விடுங்கள்!" என்று கூறினேன்.

கலியாணத்துக்கு இரண்டு தினங்கள் முன்பாகவே நாங்கள் கோயம்புத்தூருக்குப் போய்ச் சேர்ந்தோம்.

இவருடைய சித்தப்பாவும் சித்தியும் எங்களை மிகவும் அன்பாக வரவேற்றார்கள். அவருக்கு ஒரே பெண். பிள்ளை கிடையாது. பெண்ணுக்குக் கலியாணம் செய்து பெண்ணையும் மாப்பிள்ளையையும் தன்னிடமே வைத்துக் கொள்ள வேண்டுமென்பது அவர் ஆசையாம். அதற்குத் தகுந்த இடமாகத் தானே அவர் பார்த்திருப்பார்!

"மாப்பிள்ளை எந்த ஊர்? என்ன உத்தியோகம்?" என்று விசாரித்தார் என் கணவர், தம் சித்தப்பாவை.

"மாப்பிள்ளைக்குப் பூர்விகம் தஞ்சாவூர் ஜில்லாதான். ஆனால் இந்த ஊரில்தான் உத்தியோகம். என் நண்பர் ஒருவர் சொந்தமாக இரும்பு வியாபாரம் செய்து வருகிறார். அவருடைய கம்பெனியில் தான் இவர் உதவி மானேஜராக இருந்து வருகிறார். மூந்நூறு ரூபாய் சம்பளம். தொழில் நுட்பம் தெரிந்தவர்" என்றார் சித்தப்பா.

ஏதேதோ வெகு நேரம் வரையில் பேசிக் கொண்டிருந்து விட்டு நாங்கள் எல்லோரும் படுத்துக் கொள்ளும் போது மணி பத்து அடித்து விட்டது. விடியற்காலம் சீக்கிரம் எழுந்திருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டுதான் படுத்தேன். ஆனால் பொழுது விடிந்ததும் படுக்கையை விட்டு எழுந்திருக்கவே முடியவில்லை. குளிரும் ஜுரமுமாக வந்து கொட்டி விட்டது. இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்து விட்டேன்.

இரண்டு நாட்களும் நல்ல ஜுரம். நான் கண்ணையே விழிக்கவில்லை. குழந்தையைக் கூட இவர்தான் கவனித்துக் கொண்டார். அன்று இரவுதான் மாப்பிள்ளை யழைப்பு. இரவு ஜான வாசம் அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது. எனக்கும் புது மாப்பிள்ளையைப் பார்க்க அதிக ஆவலாகத் தானிருந்தது. எழுந்திருக்கவும் முயன்றேன். முடியவில்லை. பேசாமலிருந்து விட்டேன்,

ஜாம் ஜாம் என்று மாப்பிள்ளை அழைப்பு நடந்தேறியது. விடிந்தால் முகூர்த்தம்.

காலையில்தான் எனக்கு ஜுரம் நன்றாக விட்டிருந்தது. மெதுவாக எழுந்திருந்து கலியாணக் கூடத்தில் ஒரு ஓரத்தில் போய் உட்கார்ந்து கொண்டேன்.

மாலை மாற்றல், ஊஞ்சல் என்று எல்லா வைபவமும் முடிந்து முகூர்த்தம் ஆரம்ப

மாயிற்று. மாங்கல்யதாரணம் செய்வதற்குச் சற்று முன்பு, "பிள்ளைக்கு அக்கா, தங்கை யாருமில்லையாமே. யார் தாலி முடிவார்கள்?" என்று ஒரு குரல் எழுந்தது.

"ஒன்றுவிட்ட அக்கா, தங்கை கூடவா கிடையாது?" என்று அசிரத்தையுடன் கேட்டது இன்னொரு குரல்.

"ஊஹூம். ஒரு ஈ, காக்கா கிடையாது. பாவம். அம்மா, அப்பா கூட இல்லையே!" என்று அங்கலாய்த்தது ஒரு கிழம்.

இவர்கள் சம்பாஷணையைக் கேட்டதும் எனக்கு ரொம்பவும் ஆச்சரியமாக இருந்தது. பந்துமித்திரர்கள் யாருமில்லாத அந்தப் பரிதாபத்துக்குரிய மாப்பிள்ளையை எதனாலேயோ பார்க்கத் துடித்தது உள்ளம். மெதுவாகக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு கலியாண மேடையை அணுகினேன். அதே சமயம் மாப்பிள்ளையும் கையில் மஞ்சள் சரட்டுடன் எழுந்திருந்து நிற்கவே அவருடைய முகம் எனக்குப் பளிச்சென்று தெரிந்தது. உற்றுப் பார்த்தேன். சந்தேகமேயில்லை, என் அண்ணா சபேசன்தான்! வியப்பும் திகைப்பும் ஒருமிக்க அடைந்த நான் என்னையும் மீறி "என் அண்ணாவா?" என்று பலமாகக் கத்தி விட்டேன்.

எல்லோருடைய பார்வையும் என் பக்கம் திரும்பியது போல் மாப்பிள்ளையின் பார்வையும் என் பக்கம் திரும்பியது. மறுகணம் "யார் கோமதியா?" என்று கேட்டுக் கொண்டே என் சமீபம் ஓடி வந்தான், என் சகோதரனான புது மாப்பிள்ளை.

"அண்ணா! அண்ணா! நீதானே? நீயே தானே?" என்று பிதற்றினேன் நான்.

"கோமதி! சௌக்கியமாக இருக்கிறாயா? நீ எப்படி இங்கு வந்தாய்?" என்று கேட்டான் அண்ணா வியப்புடன்.

"அண்ணா! நீ போய்த் தாலியைக் கட்டு. முகூர்த்தம் தவறி விடப் போகிறது. என் கணவர் உன் மனைவியின் ஒன்றுவிட்ட தமயன்!" என்றேன் நான் மகிழ்ச்சியுடன்.

அதற்குள் என் கணவரும், அவர் சித்தி, சித்தப்பாவும் எங்கள் சமீபம் வந்து விடவே, விஷயம் புரிந்தது. உறவு தெரிந்து விட்டதும் எல்லோரும் ஆனந்த மடைந்தார்கள்.

பிறகு என்ன நடந்தது என்று கேட்கவும் வேண்டுமா! என் சகோதரன் சபேசன் என் ஒன்றுவிட்ட நாத்தனாரின் கழுத்தில் கெட்டி மேளம் முழங்கத் தாலியை முடிந்தான். அவன் முடிந்து நிறுத்தி யிருந்த மீதியை நான் உள்ளத்தில் பெருமிதம் பொங்கி வழிய முடிந்து பூர்த்தி செய்தேன்.

அங்கு கூடியிருந்தவர்கள் எல்லோரும் என்னை வியப்புடன் நோக்கினார்கள். நான் என் உடல் நிலையையும் மறந்து போய்க் கம்பீரமாக நடந்து பெண்களின் பகுதியில் புகுந்து கொண்டேன்.

முகூர்த்தம் முடிந்த பின் என் அண்ணா என்னைத் தேடி வந்து விசாரித்தான். நான் அவனை என்னுடைய கணவருக்கு அறிமுகப் படுத்தி வைத்தேன்.

வேலை தேடிச் சென்னையில்தான் அலைந்து கொண்டிருந்தானாம். கிடைக்கவே யில்லையாம். பிறகு ஒரு நாள் ஒரு பெரியவரைச் சந்தித்துத் தன் நிலைமையைக் கூறினானாம். அவர் தம்முடன் கோயம்புத்தூருக்கு வந்தால் தம் கம்பெனியிலேயே வேலை போட்டுத் தருவதாகச் சொன்னாராம். சரியென்று அவருடன் கிளம்பிக் கோயம்புத்தூருக்கு வந்து விட்டானாம். முதலில் சாதாரண குமாஸ்தாவாகத் தான் சேர்ந்தானாம். பிறகுதான் தன்னுடைய உண்மையான உழைப்பினால் உயர்ந்து கொண்டே வந்து இன்று உதவி மானேஜராக ஆகி யிருக்கிறான்.

"எப்படியோ அண்ணா! நீ அம்மாவிடம் பட்ட சிரமம் தீர எங்கேயாகிலும் சௌகர்யமாக இருக்கவேண்டும். அதுதான் இன்றை என் பிரார்த்தனை!" என்றேன். மனம் நிறைந்த மகிழ்ச்சியோடு.

"அடுத்த வருஷம் உனக்கும் சங்கராந்திப் பணம் வரும்!" என்று பரிகாசம் செய்தார் என் கணவர். என்ன பொல்லாத்தனம் பாருங்கள்! மைத்துனன் வாங்கிக் கொடுத்த சரிகை வேஷ்டி யல்லவா இடுப்பில் ஏறி யிருக்கிறது! அதுதான் அவரை இப்படிப் பேசச் சொல்லுகிறது, இல்லையா?


# கிராமங்களிலிருந்து நகரத்திற்கு காய்கறிகள்:

இன்னும் சில மாதங்களில் பம்பாய் நகருக்கு அருகாமையிலுள்ள டிராம்பேயில் ஸ்தாபிக்கப்படும் இந்தியாவிலேயே மிகப்பெரியதான பர்மா-ஷெல்லாரின் ரிபைனரி ரோட் மார்க்கத்தில் உபயோகப்படுத்தப்படும் போக்குவரத்து யந்திரங்களுக்கு வேண்டிய டீசல் ஆயிலை சப்ளை செய்யும்.



பர்மா-ஷெல் ... பாரத நாட்டின் வாழ்க்கையில் ஈடு பட்டிருக்கிறது.

# தங்க மாம்பழம்



பாப்பா மலர் :: தொடர்கதை




## 9. சதியாலோசனை

உமா அழுவதைப் பார்த்ததும் பிரபாகரனுக்கு மனசு தாங்கவில்லை. "உமா, தங்க மாம்பழம் போய் விட்டதே என்றுதானே அழுகிறாய்? நானா தங்க மாம்பழத்தை ஆற்றில் எறிபவன்? இதோ பார், தங்க மாம்பழம்! என்னிடத்தில் எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்கிறது!" என்று கூறி, தன் பைஜாமாவின் பையில் கைவிட்டுத் தங்க மாம்பழத்தை எடுத்துக்காட்டினான்.

உமாவுக்கு ஆச்சரியமும் ஆனந்தமும் தாங்கவில்லை. "அண்ணா, தங்க மாம்பழம் எப்படி உன் கையில் இருக்கிறது? நீ அதை ஆற்றில் வீசி எறிந்ததை நான் பார்த்தேனே!" என்றாள் உமா.

"நீ பார்த்த லட்சணம் அவ்வளவுதான், உமா! கரியன் மாந்தோப்பில் ஆளுக்கு ஒரு மாம்பழம் கொடுத்தானல்லவா? அதை நீ பரிசல் துறையிலேயே தின்று விட்டாய். நான் அப்புறம் தின்னலாம் என்று பைஜாமாப் பையில் போட்டுக் கொண்டேன். பரிசல்காரன் தங்க மாம்பழத்தைக் கேட்டுப் பயமுறுத்தினதும் சமயோசிதமாக, தங்க மாம்பழத்தை எறிவதாகப் பாசாங்கு செய்து, கரியன் கொடுத்த மாம்பழத்தை எறிந்தேன். அந்த மூடன் விஷயம் புரியாமல், நான் எறிந்தது தங்க மாம்பழம்தான் என்று நினைத்துப் பரிசலிலிருந்து தண்ணீரில் குதித்தான்!" என்றான் பிரபாகரன்.

உமா, "அண்ணா, உன் புத்திசாலித்தனமே புத்திசாலித்தனம்! தங்க மாம்பழம் போய் விட்டதென்றே நினைத்து நான் துக்கம் தாங்க முடியாமல் அழுது விட்டேன். அண்ணா, இன்று காலையிலிருந்து நடந்தவைகளையெல்லாம் நினைத்தால் ஆச்சரியமாயிருக்கிறது. காலையில் நாம் எழுந்து வந்ததிலிருந்து நமக்குப் பிரமாதமான வரவேற்பு உபசாரமும் விருந்து வைபவமும் கிடைத்தன. பிறகு உயிருக்கே ஆபத்து வந்து விட்டது!" என்று சிரித்துக் கொண்டே சொன்னாள்.

"எது நடந்தாலென்ன, உமா! எல்லாம் நன்மையாகவே நடந்திருக்கிறது. நேற்று



இரவு இரும்புக் கூண்டுக்கு அருகில் வந்து நம்மைப் பார்த்து நம் விடுதலைக்கு உதவி செய்த துறவி சொன்னபடி எல்லாம் ஈசன் செயல். நாம் இன்று இரவு எங்கேயாவது சத்திரத்தில் தங்கியிருந்து விட்டு நாளைக் காலையில் நம் வழியே போகலாம்!'' என்று சொன்னான் பிரபாகரன்.

* * *

ஆற்றில் குதித்த பரிசலோட்டி மாம்பழத்தை வலது கையில் வைத்துக் கொண்டே சந்தோஷமாகப் பரிசல் துறையை நோக்கி வெகு வேகமாக நீந்திக் கொண்டு போனான். கரையை அடைந்ததும் மாம்பழத்தைத் தன்னுடைய மடியில் கட்டிக் கொண்டான்.

பரிசல்காரனை எதிர் பார்த்துக் கொண்டு ஆவலுடன் காத்திருந்த வீரப்பதேவன், அவன் மாம்பழத்தை மடியில் கட்டிக் கொண்டதைப் பார்த்து மனம் பூரித்தான். பரிசல்காரனைப் பார்த்து, "சீக்கிரம் வா, சீக்கிரம் வா!'' என்று சைகை காட்டினான்.

பரிசல்காரன் வேகமாகக் கரையேறி வீரப்பதேவனிடம் ஓடோடியும் வந்தான்.

"இந்தாருங்கள், மாம்பழம். இதை அவனிடமிருந்து பெற நான் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல!'' என்று சொல்லிக் கொண்டே தன் மடியிலிருந்து மாம்பழத்தை எடுத்து வீரப்ப தேவனிடம் கொடுத்தான். அந்தப் பழத்தைக் கையில் வாங்கிக் கொண்டதும் வீரப்ப தேவன் முகம் சுண்டியது. "சீ, உன்னை இந்த மாம்பழத்தையா கொண்டுவரச் சொன்னேன்? இதுவா மந்திர மாம்பழம்!'' என்று எரிச்சலுடன் கூறி அந்த மாம்பழத்தை ஆற்றில் வீசி எறிந்தான்.

பரிசல்காரன் கோபத்தினால் குதித்தான். "யாரை ஏமாற்றப் பார்க்கிறீர்கள்? பாவம், அவன் நல்ல பையன். உங்களுக்காக அவனை நான் கடிந்து பேசி அவனிடமிருந்து மாம்பழத்தைக் கவர்ந்து வந்தேன். இப்பொழுது என்னை ஏமாற்றப் பார்க்கிறீர்களா? நீங்கள் அரசாங்கச் சேவகர் என்றல்லவா நான் மதிப்புக் கொடுத்தேன்? என்னுடைய சன்மானத்தைக் கொடுக்கிறீர்களா இல்லையா?'' என்று கத்தினான். அங்கே கூட்டம் கூட ஆரம்பித்தது. இனிமேல் இங்கிருந்தால் ஆபத்து என்று அறிந்த வீரப்ப தேவன் பத்து ரூபாயைப் பரிசல்காரன் கையில் வைத்து விட்டு வெகு வேகமாகத் தன் குதிரையின் மீது ஏறிக் கொண்டு அவ்விடத்தைவிட்டு அகன்றான்.

பிரபாகரனும் உமாவும் அன்று இரவு ஒரு சத்திரத்தில் தூங்கி விட்டு மறுநாள் காலையில் ஒரு வீதி வழியாகப் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்கள் எங்கு போய்க் கொண்டிருக்கிறார்கள், எதற்காகப் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பது அவர்களுக்கே தெரியாது. அவர்கள் வீதி வழியாகப் போய்க் கொண்டிருக்கும் போது யாரோ, "இங்கே கொஞ்சம் வாருங்கள்'' என்று கூப்பிடுவது போல் இருந்தது. பிரபாகரன் திரும்பிப் பார்த்தான். ஒருவரும் தென்படவில்லை. "இதோ உங்களுக்கு முன் தெரியும் இந்த வீட்டில் உட்கார்ந்திருக்கிறேன். இங்கு வாருங்கள்'' என்றது மறுபடியும் அந்தக் குரல்.

சற்று நிதானித்து நின்று பார்த்தார்கள் பிரபாகரனும் உமாவும். அவர்கள் நின்று கொண்டிருந்த அதே இடத்துக்கு எதிரே பாழ் அடைந்த வீடு ஒன்று இருந்தது. அந்த வீட்டின் வாசல் திண்ணையில் ஒரு கிழவர் உட்கார்ந்திருந்தார்.

"ஏன் இப்படித் தயங்குகிறீர்கள்? உங்கள் இருவரையும்தான் கூப்பிட்டேன். இங்கு வாருங்கள். ஒன்றுமில்லை. எனக்

குத் தள்ளாத வயது. காலையி லிருந்து ஒன்றும் சாப்பிடவில்லை. களைப்பா யிருக்கிறது" என்றார் அந்தக் கிழவர்.

"பாவம், எங்களிடம் உங்களுக்குக் கொடுப்பதற்கு ஒரு காலணாக் கூட இல்லையே. நாங்கள் என்ன செய்வோம்!" என்றான் பிரபாகரன்.

"உங்கள் காசு எனக்கு வேண்டாம். அந்த மண் கூஜாவிலே குடிப்பதற்குக் கொஞ்சம் தண்ணீர் இருந்தால் கொடுங்கள். அதற்காகத்தான் கூப்பிட்டேன்" என்றார் கிழவர் மிகவும் ஆயாசத்துடன்.

உடனே மண் கூஜாவை அந்த வயோதிகரிடம் கொடுத்தாள் உமா.

தண்ணீரைச் சாப்பிட்ட வயோதிகர், "அப்பாடா! என் தாகம் தணிந்தது. குழந்தைகளே, என் பக்கத்தில் உட்காருங்கள்!" என்றார்.

பிரபாகரனும் உமாவும் பெரியவர் சொல்லியபடியே அவர் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டார்கள்.

"நீங்கள் இந்த ஊர்தானே?" என்று விசாரித்தார் கிழவர்.

"இல்லை" என்றான் பிரபாகரன்.

"உங்களுக்குத் தாய் தந்தையர்கள் இருக்கிறார்களா அல்லது வேறு உறவினர் இருக்கிறார்களா?" என்று கிழவர் கேட்டார்.



"நான் இவளுக்கு அண்ணன். என் பெயர் பிரபாகரன். இவள் என் தங்கை உமா. எங்கள் இருவரைத் தவிர உறவினர் என்று சொல்லிக் கொள்ள வேறு ஒருவரும் எங்களுக்குக் கிடையாது. அது இருக்கட்டும். கல்லறைத் தீவு எங்கே இருக்கிறது? உங்களுக்குத் தெரியுமா, தாத்தா?" என்று கேட்டான் பிரபாகரன்.

"அட பாவமே! அந்தப் பெயரைச் சொன்னாலே இந்த அரசாங்கத்தில் ஆபத்து. அந்தத் தீவு ரொம்ப தூரத்தில் இருக்கிறது. அந்த இடத்தைக் கண்டு பிடிப்பதே சுலபம் அல்ல; அப்படிக் கண்டு பிடித்து அந்த இடத்துக்குப் போனால் திரும்பி அந்த இடத்தை விட்டு வர முடியாது. அங்கே பொல்லாத நாய் ஒன்று இருக்கிறதாம். அதைப் பார்த்தால் அங்கேயே நீ கல்லாகி விட வேண்டியது தான் என்று சொல்கிறார்கள். நீ எதற்காக அந்த இடத்தைப் பற்றிக் கேட்கிறாய்?"

"யாரோ அங்கு அடைபட்டுக் கிடக்கிறாராம். அவரைப் பார்க்க முடியுமா என்றுதான்!" என்றான் பிரபாகரன்.

இதைக் கேட்டவுடன் கிழவர் 'ஹி ஹி' என்று பெரிதாகச் சிரித்தார்.

"கல்லறைத் தீவுக்குப் போனவர்களின் கதி என்ன ஆகும் என்பது எனக்குத் தெரியும். ஒன்றும் அறியாத பிள்ளை நீ. அந்தக் கல்லறைத் தீவுக்குப் போய் யாரையோ சந்திக்கப்போவதாகச் சொல்லுகிறாயே. வேண்டாம் அப்பா, அந்த எண்ணத்தை விட்டுவிடு! இந்த வயதான தாத்தா சொல்லுவதைக் கேள்!"

வயோதிகர் சொல்லிய வார்த்தைகள் பிரபாகரனுக்குப் பிடிக்கவில்லை. "தாத்தா, என் விருப்பத்தில் நீங்கள் குறுக்கிட வேண்டாம். நான் கோழை அல்ல. எப்படியாவது நான் கல்லறைத் தீவுக்கு என் தங்கை உமாவுடன் போகத்தான் போகிறேன்" என்றான் பிரபாகரன்.

"ஏன் அப்பா ஆத்திரப்படுகிறாய்? நான் ஏதோ எனக்குத் தெரிந்ததைச் சொன்னேன். இருந்தாலும் நீ கல்லறைத் தீவுக்குப் போகத்தான் போவேன் என்கிறாய். உன் தைரியத்தை நான் மிகவும் பாராட்டுகிறேன். என் ஆசீர்வாதத்தையும் உனக்குக் கொடுக்கிறேன். நீங்கள் எனக்குத் தண்ணீர் கொடுத்துச் சமயத்துக்கு உதவி செய்தீர்களே, அதற்கு உங்களுக்கு நான் ஏதாவது உதவி செய்யப் போகிறேன். இந்தா, பிரபாகரா! இந்தக் கல் மோதிரத்தை வைத்துக் கொள். இந்த மோதிரம் எனக்கு உபயோகமில்லை. நான் தெருத் திண்ணையில் தூங்குகிறவன். இது என்னிடமிருந்தால் யாராவது திருடிக் கொண்டு போகப் போகிறார்களோ என்ற பயத்தினால் இரவில் நான் தூங்குவதே இல்லை. என் முழு ஆசீர்வாதத்துடன் இந்த மோதிரத்தைக் கொடுக்கிறேன். இந்த மோதிரம் விலை உயர்ந்த மஞ்சள் கல் மோதிரம்- அதை நீதான் போட்டுக் கொள்ள வேண்டும். இந்தா, தட்டாமல் வாங்கிக் கொள்!" என்று மோதிரத்தைப் பிரபாகரனிடம் கொடுத்தார் அந்தக் கிழவர்.

மோதிரத்தைப் பிரபாகரன் கையில் வாங்கிக் கொண்டான்.

உடனே உமா "அண்ணா, இந்த மோதிரம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. நான் என் விரலில் போட்டுக் கொள்ளுகிறேன், அண்ணா!" என்று கெஞ்சினாள்.

"உமா, நீயே இந்த மோதிரத்தை உன் விரலில் அணிந்து கொள். உனக்கு மிகவும் நன்றாக இருக்கும்" என்று மோதிரத்தைப் பிரபாகரன் உமாவிடம் கொடுத்தான். உமா அதைத் தன் இடது கை மோதிர விரலில் அணிந்து கொண்டாள்.

அதைப் பார்த்த வயோதிகர் திடுக்கிட்டு, திண்ணையை விட்டு எழுந்து நின்றார்.

"பிரபாகரா, நீயே அந்த மோதிரத்தை அணிந்து கொள். உமா சின்னவள்; எங்கேயாவது மோதிரத்தைத் தொலைத்து விடுவாள்!" என்றார் கிழவர்.

உடனே பிரபாகரன் "தாத்தா! என் தங்கை ஆசைப்படுகிறாள். என் தங்கைதான் அவள் கூஜாவிலிருந்து உங்களுக்குத் தண்ணீர் கொடுத்தாள். ஆகவே அவள் மோதிரத்தைப் போட்டுக் கொள்ளுவதுதான் நியாயம்!" என்று சொன்னான். பிரபாகரன் அப்படிச் சொன்னது கிழவருக்குத் திருப்தி அளிக்கவில்லை என்பது அவர் முகத்தைச் சுளித்துக் கொண்டதிலிருந்து தெரிய வந்தது.

பிரபாகரன் அவரிடம் விடை பெற்றுக் கொண்டு உமாவுடன் புறப்பட்டான்.

* * *

வியற் காட்டுக் கிழவியும் வீரப்ப தேவனும் பேசிக்கொண்டிருந்தனர். "இந்தச் சமயத்தில் கட்டாயம் வெற்றி பெறுவோம் என்று நினைத்தேன்" என்றாள் கிழவி.

"ஏன், பிரபாகரன் மஞ்சள் கல் மோதிரத்தை வாங்கிக் கொள்ளவில்லையா? அல்லது அதை வாங்கி எறிந்து விட்டானா?" என்று தேவன் கேட்டான்.

"அப்படி இருந்தாலும் பாதகம் இல்லையே! அந்த மோதிரம் நம்மிடம் வந்து விடுமே! ஒரு கிழவராக அவன் முன் தோன்றி, நயமாகப் பேசி, மோதிரத்தை அவனிடம் கொடுத்தேன். அவன் கை விரலில் அணியப் போகும் சமயத்தில் அவன் கூட இருக்கிறதே அந்தப் பெண், நான்தான் அந்த மோதிரத்தைப் போட்டுக் கொள்ளுவேன் என்று பிடிவாதம் பிடித்தது. அவன் மோதிரத்தை அவளிடம் கொடுத்து விட்டான்!"

"ஆண் போட்டுக் கொள்ள வேண்டிய மோதிரம் ஒரு பெண் கையிலா சிக்கியது? இதில் கூடவா நம் முயற்சி பலிக்கவில்லை? மோதிரமாவது திரும்பி நம் கைக்கு வந்தால் ஒருவிதமாக மனசைத் தேற்றிக் கொள்ளலாம். அந்த மோதிரத்தையும் அவர்கள் தட்டிக் கொண்டு போய் விட்டார்கள். இருக்கட்டும், நான் அவர்களைச் சும்மா விடப் போகிறதில்லை. எப்படியாவது அவர்களிடமிருந்து மந்திர மாம் பழத்தைத் தட்டிக் கொண்டு வந்துவிடுகிறேன். அவர்கள் எங்கு போனாலும் அவர்களைப் பின் தொடர்கிறேன்!" என்று வீரப்ப தேவன் வீரமாகப் பேசினான்.

"தேவரே, முக்கியமான சமாசாரம் ஒன்று சொல்ல மறந்து விட்டேனே. பிரபாகரன் கல்லறைத் தீவுக்குப் போகப் போகிறானாம். அவன் கோழை இல்லையாம். எந்த ஆபத்து வந்தாலும் அவனுக்குக் கவலை இல்லையாம். மிகவும் திமிராகப் பேசுகிறான் அவன்!" என்றாள் கிழவி.

"அந்த மந்திர மாம்பழம் அவன் கையில் இருக்கும் வரையில்தானே அவன் திமிராகப் பேசுவான்? அது என் கைக்கு வந்து விட்டால்? இன்று அவர்களிடமிருந்து எப்படியாவது மந்திர மாம்பழத்தைத் தட்டிக்கொண்டு வந்து விடுகிறேன். பிறகு உன்னைச் சந்திக்கிறேன்" என்று கிழவியிடம் விடைபெற்றுக் கொண்டு பிரபாகரனையும் உமாவையும் தேடிக்கொண்டு குதிரைமீதுஏறி வேகமாகப் புறப்பட்டான்.

வீரப்ப தேவன் புறப்படும் சமயத்தில் கிழவி அவனைக் கூப்பிட்டாள். "வீரப்ப தேவரே! ஒரு சமாசாரம். தங்க மாம் பழத்தை அவர்களிடமிருந்து மீட்டுக் கொண்டு வர எனக்கு மற்றொரு சந்தர்ப்பம் கொடுங்கள். அதில் நான் தோற்றுப்போக மாட்டேன். அப்படி நாங்கள் தோற்றுப் போனால் நீங்கள் உங்கள் சாமர்த்தியத்தை உபயோகித்து அடுத்த முறை வெற்றிபெற முயற்சி செய்யுங்கள்" என்றாள் கிழவி.

"சரி, உன் திட்டத்தைச் சொல் பார்க்கலாம்!" என்று கேட்டான் வீரப்பன்.


"பிரபாகரனும் உமாவும் கல்லறைத் தீவைநோக்கிப் போவதாகச் சொன்னார்கள் அல்லவா? அதற்கு எப்படியும் இன்று பகல்கோட்டைக்குப்பக்கத்திலுள்ள பெரிய மைதானத்தைக் கடந்துதானே ஆகவேண்டும்? அப்பொழுது குடிக்கத் தண்ணீருக்கு மைதானத்திலுள்ள அந்தச் சிறிய கிணற்றுக்குத்தானே போக வேண்டும்? இவர்கள் அந்த மைதானத்துக்கு வந்து அந்தக் கிணற்றுத் தண்ணீரைக் குடிப்பதற்குச் சற்று முன்னால் என் ஜால மந்திரத்தை உபயோகப்படுத்துவேன். பிறகு அந்த ஜலத்தைக் குடிப்பவர்கள் மிருகம், பறவை இவைகளில் எதைப் பார்த்தாலும் அதன் சுபாவத்தைப் பெற்று விடுவார்கள். அவர்களைப் போல் சுபாவம் மட்டும் மாறுமே தவிர உருவம் மாறாது. அது மாதிரியான உணர்ச்சி ஒரு மணி நேரம்தான் இருக்கும். அந்தச் சமயத்தில் உங்களுக்குச் சொல்லி அனுப்புகிறேன். நீங்கள் இரண்டு சேவகர்களைவிட்டு அவர்கள் தங்கள் சுயஉணர்ச்சி இல்லாமல் இருக்கும் பொழுது அவர்களைப் பிரித்து விட ஏற்பாடு செய்யுங்கள். நீங்கள் பிறகு வந்து ஒருவருக்கும் தெரியாமல் அவர்களிடமிருந்து தங்க மாம் பழத்தை எடுத்துக் கொண்டு செல்லுங்கள்" என்றாள் கிழவி.

"பாட்டி, நீ சொல்லுவது சரியான யோசனைதான். ஆனால் புதிதாக மைதானத்துக்குப் போகிறவர்களுக்கு அந்தக் கிணறு இருக்கும் இடம் தெரியாதே! அது ஒரு மூலையில் அல்லவா இருக்கிறது! அவர்கள் கிணற்றுத் தண்ணீரைக் குடிக்காமலே போனால்?" என்றான் வீரப்பதேவன்.

"வீரப்பதேவரே, அவர்களைக் கிணற்றண்டை வரும்படி நான் முயற்சி செய்கிறேன்" என்றாள் கிழவி.

"சரி, அப்படியே செய்; உன் முயற்சி பலித்ததும் எனக்குத் தகவல் கொடு. நான் வருகிறேன்" என்று கூறிவிட்டு வீரப்ப தேவன் போனான். (தொடரும்)

# ஹாஸ்யக் களஞ்சியம்


"இயாவைக் கொஞ்ச நாட்களுக்கு மாடிப் படி ஏறவேண்டாம் என்று டாக்டர் சொல்லியிருக்காரு! அதனுல்தான்......!"
"சற்று முன்னுல் இங்கு ஒரு 'ஆட்டம் பாம்' வெடித்துப் பல பேருக்குக் காயம். நீங்கள் இல்லாமல் போய்விட்டீர்களே!"
"உங்களைத்தானே! முதியோர் கல்விச் சாலையிலாவது போய்ச் சேரக் கூடாது?"
"அடி அசடே! அதற்கு எனக்கு இன்னும் வயசாகல்லே!"
"என்ன அண்ணே! சந்தைக்குப் போன காரியம் காயா, பழமா?"
"காய்தானுங்க!"
2
???
3
ஆடுபாம்பே! விளையாடு பாம்பே!


சாமா
"உனக்கு டாக்டர் எழுதிக் கொடுத்து
விட்டுப் போனதைப் பார்த்தாயா? ஒரு
உரல், உலக்கை, ஒரு முட்டை
காலே......மாலே......" செல்லு!
மாமா மேலே என்ன பார்க்கிறீர்?
பறக்கும் தட்டையா?
..........பூ! இதற்குத்தானா?
அப்படியே இரு!
ஒரு நொடியில்
முள்ளை "ரிப்பேர்"
செய்து வந்து
விடுகிறேன்!
"பேசுங்கள்! நான் தவறித் தூங்கிவிட்
டாலும் என்னை எழுப்பிப் பேசுங்கள்.
ஏனென்றால் உங்க பேச்சு என்றால் எனக்கு
ரொம்பப் பிடிக்கும்!"




## 38. அதோ, ராமனுடைய ஆசிரமம்!

**ம**றுநாள் காலை முனிவர் "இவ்விடத்திலிருந்து இரண்டரை யோசனை தூரத்தில் மந்தாகினி நதி ஓடுகிறது. அதன் கரையில் ஜன சஞ்சாரமற்ற பெரிய காடு இருக்கிறது. தெற்கே சித்திரகூட மலையிருக்கிறது. மலைக்குக் கீழ், வனத்தில் ஒரு பர்ணசாலையில் ராம லக்ஷ்மணர்களும் சீதையும் வசித்து வருகிறார்கள்" என்று சொல்லி அங்கே போகும் வழியையும் விளக்கிச் சொன்னார்.

பிறகு பரத்வாஜரைத் தாய்மார்கள் மூவரும் வலம் செய்து வணங்கினார்கள்.

"இவர்களை எனக்கு அறிமுகப்படுத்துவாய்" என்று கேட்டார் ரிஷி.

**ப**ரதன் அவ்வாறே கோசலை, சுமித்திரை, கைகேயி இவர்களை ஒருவர் பின் ஒருவராகப் பெயர்கள் சொல்லி ரிஷியிடம் ஆசி பெறச் செய்தான்.

"இதோ, துக்கப்பட்டு, பட்டினி கிடந்து, இளைத்து நிற்கிறாள் மகாராஜாவின் பட்டமகிஷி கௌசல்யா தேவி. இந்திரனைப் பெற்ற அதிதிக்குச் சமானமான இவளே, சக்கரவர்த்தித் திருமக

# திருமகன்




துடன் மகன் பரதன் பக்கத்தில் வந்து நின்றாள்.

அப்போது பரத்வாஜ ரிஷி பரதனுக்குச் சொன்னார்.

"தாயை அப்படிச் சொல்லாதே! உலகத்தின் நன்மைக்காகவே அனைத்தும் நடந்தன" என்றார்.

* * *

**தா**ய்மார்களைக் காட்டும் இந்த நிகழ்ச்சியைக் கம்பர் இடம் மாற்றி வெகு அழகாகக் குகப் படலத்தில் கொண்டு போய்ச் சேர்த்து விட்டார். குகன் பணிவுடன் விசாரிக்க பரதன் ஒவ்வொருவராகச் சொல்லிக் காட்டுகிறான். பரத்வாஜ ரிஷி ஆசிரமத்தில் நடந்ததாக வால்மீகி சொல்லும் நிகழ்ச்சியைக் கவிக் கண்ணால் பார்த்து அதன் சரியான இடம் எங்கே என்று கண்டு கொண்டு அமைத்துத் தம் அசாதாரணத் திறமையோடு கம்பர் பாடியிருக்கிறார்.

அதை இந்த இடத்திலேயே எடுத்துச் சொல்லுவது குற்றமாகாது.

னைப் பெற்றவள். வலது புறத்தில், கோசலையைத் தாங்கிக்கொண்டு, வாடிய புஷ்பங்கள் நிறைந்த கொடியைப் போல் துக்கப்பட்டு நிற்பவள் அரசனுடைய இரண்டாவது பட்டமகிஷி, லக்ஷ்மண சத்ருக்னர்களைப் பெற்ற பாக்யவதி. இதோ நிற்கிறாள் எங்களுடைய துக்கத்துக் கெல்லாம் காரணமான என் தாய், ஆர்ய வடிவம் கொண்ட அனார்யை" என்று கைகேயியைச் சுட்டிக் காட்டினான். அவளும் மற்றவர்களைப் போலவே ரிஷியை வலம் செய்து நமஸ்கரித்து விட்டு வெட்கம் படர்ந்த முகத்

சுற்றத்தார் தேவரொடும் தொழநின்ற
கோசலையைத் தொழுதுநோக்கி,
வெற்றித்தார்க் குரிசில்,இவர் யாரென்று
குகன்வினவ 'வேந்தர் வைகும்
முற்றத்தான் முதல்தேவி மூன்றுலகும்
ஈன்றானை முன்ஈன்றானைப்
பெற்றத்தால் பெருஞ்செல்வம் யான்பிறந்த
லால்துறந்த பெரியாள்'என்றான்.

"ராமன் என்கிற செல்வத்தைப் பெற்ற கோசலை, பரதன் என்று ஒரு மகன் நான் பிறந்ததால் அந்தச் செல்வத்தை இழந்தாள். அவளே இவள்" என்று கூறினான் பரதன்.

**ராஜாஜி**

அறந்தானே என்கின்ற அயல்நின்றாள்
    தனைநோக்கி, 'ஐயஅன்பின்
நிறைந்தானே உரை'யென்ன 'நெறிதிறம்பாத்
    தன்மெய்யை நிற்பதாக்கி
இறந்தான்தன் இளந்தேவி யாவர்க்கும்
    தொழுகுலமாம் இராமன்பின்பு
பிறந்தானும் உளனென்னப் பிரியாதான்
    தனைப்பயந்த பெரியாள்'என்றான்.

"நான் அடையாத பாக்கியத்தை லக்ஷ்மணன் பெற்றான். அந்த உண்மைத் தம்பியின் தாய் இவள்."

'படரெலாம் படைத்தானைப் பழிவளர்க்கும்
    செவிலியைத்தன் பாழ்த்தபாவிக்
குடரிலே நெடுங்காலம் கிடந்தேற்கும்
    உயிர்ப்பாரம் குறைந்துதேய
உடரெலாம் உயிரிலா எனத்தோன்றும்
    உலகத்தே ஒருத்திஅன்றே
இடரிலா முகத்தானை அறிந்திலையேல்
    இந்நின்றாள் என்னைஈன்றாள்.'

வால்மீகி ராமாயணத்தில் இருப்பது போலவே கம்பருடைய சித்திரத்திலும் பரதன் கைகேயியைக் கடுமையான மொழிகளைச் சொல்லித்தான் அறிமுகப் படுத்துகிறான்.

* * *

பரதனும் பெரும் பரிவாரமும் பரத்வாஜர் சொன்ன வழியைப் பிடித்துச் சென்றார்கள். சித்திர கூட மலையும் தெரிந்தது. ஓர் இடத்தில் இலேசாகப் புகை கிளம்புவதையும் கண்டார்கள். அதுவே சக்கரவர்த்தித் திருமகன் ஆசிரமம் என்று ஊகித்துக் கொண்டார்கள். உடனே பரிவாரத்தில் பெரிய மகிழ்ச்சி கோஷம் கிளம்பிற்று. அனைவரையும் அங்கேயே நிறுத்தி விட்டு சுமந்திரன், வசிஷ்டர், பரதன் மூவர் மட்டுமே புகை தெரிந்த இடம் நோக்கிச் சென்றார்கள்.

## 39. இளையவனுடைய ஆத்திரம்

நடந்து போன அனர்த்தங்களை எப்படியாவது நல்ல முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமென்று பரதன், இவ்வாறு ஊரை விட்டு வனம் நோக்கிச் சென்று கொண்டிருந்த நாட்களில், சித்திரகூடத்தில் பர்ண சாலையில் ஒருவாறு சந்தோஷமாகவே காலங் கழிந்து வந்தது.

"லக்ஷ்மணனும் சீதையும் பக்கத்திலிருக்க எனக்கு என்ன குறை?" என்று எண்ணினான் ராமன்.

மலையின் கம்பீரமும், வனத்தின் அழகும், பக்ஷிகளின் மதுரமான பாட்டும் விளையாட்டும் அவன் உள்ளத்தைக் கவர்ந்தன. ஊரையும் உறவினரையும் விட்டுப் பிரிந்த துக்கத்தை மறந்தான்.

"சீதா, அதோ, பறவைகள் விளையாடுவதைப் பார்! மலைப் பாறைகளைப் பார்! அவற்றில் தாதுக்கள் நீலமும் மஞ்சளும் சிவப்புமாக எப்படி மின்னுகின்றன! வனத்தில் செடிகளையும் கொடிகளையும் பார். புஷ்பங்களைப் பார். நாம் என்னவோ எண்ணினோம், இந்த வனவாசம் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது! என்னைப் போன்ற பாக்கியவான் யார்? இந்த மகிழ்ச்சி ஒரு பக்கம், தந்தையின் ஆணையை நிறைவேற்றும் பெரிய லாபம் ஒரு பக்கம். தந்தைக்குச் செலுத்தவேண்டிய கடமையைச் செய்து தீர்ப்பதோடு தம்பி பரதனுக்கு ராஜ்யத்தைக் கொடுக்கும் மகிழ்ச்சியையும் அடைந்தேன்."

இவ்வாறு சொல்லிக் கொண்டு ராமன் தன் துக்கத்தை அகற்றியும், சீதைக்கு உற்சாகம் உண்டாக்கியும் பிரதிக்ஞையை நிறைவேற்றி வந்தான்.

மலையிலிருந்து சில சமயம் சீதையுடன் மந்தாகினி ஆற்றுக்குப் போவான். அங்கே இருவரும் ஸ்நானம் செய்வார்கள். நதியின் அழகை அநுபவிப்பார்கள். "மணல் குன்றுகளைப் பார்! அன்னங்களும் பறவைகளும் தாமரைக் கொடிகளிடையில் விளையாடுவதைப் பார்! ஆற்றின் அழகு உன் அழகைப் போலவே இருக்கிறது, காதலி!" என்பான் ராமன்.

"இந்த நதிக்கரை எவ்வளவு மனோகரமாக இருக்கிறது! மிருகங்கள் இறங்கி நீர் குடிக்கும் துறைகளில் ஜலம் சிவந்து எவ்வளவு அழகாக இருக்கிறது! இதற்குச் சமானம் குபேரனுடைய ஸௌகந்திக ஸரஸ்ஸும் இல்லை. அதோ, பார்! ரிஷிகள் நீராடுகிறார்கள். சிலர் சூரியனை உபாசித்து நிற்கிறார்கள். புஷ்பங்கள் மரக் கிளைகளினின்று நீரில் விழுவதைப் பார். அதோ, முத்துக்களை வாரி எறிவது போல் மந்தாகினி துள்ளிக் குதித்து விளையாடி வரும் அழகைப் பார்! பட்டணவாசத்தைவிட இந்த வனவாசம் எவ்வளவோ இன்பமாக இருக்கிறது. இது நம்முடைய பாக்கியம். ரிஷிகளும் சித்தர்களும் இங்கே நதியில் தினமும் நீராடுகிறார்கள். இந்தக் காட்சி நமக்கு நகரத்தில் கிடைக்குமா? இந்த மலையே நம்முடைய அயோத்தி. கூட்டம் கூட்டமாகப் பறக்கும் இந்தப் பக்ஷிகளும் வன விலங்குகளும் நம் பிரஜைகள். இந்த மந்தாகினியே நம்முடைய ஸரயூ நதி. லக்ஷ்மணனும் நீயும் என்னுடன் இருக்கும் போது வேறு என்ன வேண்டும்? ஆற்றில் மிருகங்கள் ஒன்றையொன்று

பார்த்துப் பயமின்றி நீர் குடித்து வருவதைப் பார்த்தால் எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது. இந்த நதியில் நீராடி இங்கே கிழங்கும் பழங்களும் புசித்து உன்னுடன் காடும் மலையும் சுற்றி மகிழ்ச்சி யடையும்போது நான் அயோத்தியையாவது ராஜ பதவியையாவது ஏன் நினைக்க வேண்டும்?''

இவ்வாறு சக்கரவர்த்தித் திருமகன் ஜானகியுடனும் தம்பி லக்ஷ்மணனுடனும் ஆற்றங்கரையிலும் மலையிலும் வனத்திலும் சஞ்சரித்துக் கொண்டு சந்தோஷமாகக் காலங் கழித்து வந்தான்.

• • •

**ம**லைச் சாரலில் ஓர் இடத்தில் நிம்மதியாக உட்கார்ந்திருந்தார்கள்.

திடீர் என்று தூரத்தில் தூசி கிளம்பி ஆகாயமளாவி நின்றது. இத்துடன் பெரிய ஜன சமுத்திரத்தின் கம்பீரப் பேரொலியும் கேட்டது. பரதனுடைய சேனை காட்டில் பிரவேசித்ததின் காரணமாகக் காட்டுப் பிராணிகள் பயந்து இங்குமங்கும் கூட்டமாக அலைந்து கொண்டிருந்ததையும் ராமன் பார்த்தான்.

லக்ஷ்மணனைப் பார்த்துச் சொன்னான் ராமன் :

''தம்பி, கேள்! ஏதோ பெரிய கோஷம் கேட்கிறது. யானைகளும் காட்டெருமைகளும், மான்களும் நாலா பக்கமும் ஓடுகின்றன. என்ன விஷயம் என்று நன்றாகப் பார்! யாராவது அரச குலத்தார் வேட்டையாட வந்திருக்கிறார்களா அல்லது சிங்கம், புலி இவற்றின் காரியமா என்று பார்த்துச் சொல்வாய்'' என்றான்.

உடனே லக்ஷ்மணன் மிக உயர்ந்த ஒரு ஆச்சா மரத்தின் மேல் ஏறினான். நாலா பக்கமும் நன்றாகப் பார்த்தான். வட திசையில் பெரியதொரு சதுரங்க சேனை வந்து கொண்டிருந்ததைக் கண்டான். மரத்தின் மேலிருந்தே ராமனுக்கு எச்சரிக்கை செய்தான் :

''அண்ணா! ஒரு பெருஞ் சேனை துவஜங்களைப் பறக்க விட்டுக் கொண்டு, தேர்ப் படை, யானைப் படை, குதிரைப் படை, காலாட் படை எல்லாமாக வந்து கொண்டிருக்கிறது. அபாயம்! உடனே நெருப்பை அணைத்து விட்டு, சீதையை அழைத்துச் சென்று மலைக் குகையில் பத்திரமாக இருக்கச் செய்து விட்டு, கவசம் பூண்டு வில்லும் அம்பும் எடுத்து யுத்தத்துக்கு ஆயத்தமாவோம்!'' என்றான்.

''அப்பனே, நன்றாகப் பார்த்துச் சொல். இந்தப் படை எந்த அரசனுடையது என்று தேர்க் கொடியைக் கவனித்துப் பார்!'' என்றான் ராமன்.

அவ்வாறே பார்த்தான் லக்ஷ்மணன். பார்த்து விட்டு ஒரே கோபாவேசமாகி விட்டான்.

''அண்ணா! ராஜ்யத்தைப் பெற்றதோடு நிற்காமல் நம்மை எதிர்த்துக் கொல்லவும் வருகிறான் பரதன். தேரில் திருவாத்திக் கொடி காற்றில் ஆடுவது நன்றாகக் காணப்படுகிறது. இன்று கைகேயி மகன் என் கையில் அகப்பட்டு விட்டான். அவனை விடப் போவதில்லை. அற நெறியிலிருந்து விலகிய இவனைக் கொல்வதில் என்ன பாவம்? இந்தச் சேனையை இங்கிருந்து எதிர்க்கலாமா, அல்லது மலைமேல் ஏறி நின்று எதிர்ப்போமா? நமக்கு இவன் செய்த கொடுமைக்கு இன்று பழி வாங்கி விடலாம். நம்மைக் கொல்ல வரும் பகைவனைக் கொல்வதில் என்ன பாவம்? முதலில் இவனல்லவோ அதருமத்தில் இறங்குகிறான். அவனை எதிர்த்துக் கொல்வது தருமமே யாகும். இவனை வதம் செய்து விட்டுத் துராசையில் வீழ்ந்த இவன் தாயின் எண்ணத்தை இன்று முற்றிலும் அழித்துத் தீர்ப்போம். இந்த வனத்தில் ரத்த வெள்ளம் ஓடச் செய்யப் போகிறேன். யானை ஒடித்த பெரிய மரம் போல் இன்று பரதன் வீழ்வான். இந்தச் சேனையை நிர்மூலமாக்குவோம். இந்தக் காட்டிலுள்ள பிணம் தின்னும் மிருகங்களுக்கு நிறைய உணவு கொடுப்போம்.''

இவ்வாறு லக்ஷ்மணன் கோபத்தில் தன்னையும் மறந்து பேசினான்.

## 40. ராம—பரதச் சந்திப்பு

**ல**க்ஷ்மணன் சொன்னதைக் கேட்ட ராமன் மெதுவாகச் சொன்னான்.

இலக்குவ! உலகம்ஓர்
ஏழும் ஏழும்நீ
கலக்குவை என்பது
கருதினால்அது
விலக்குவ(து) அரிது. அது
விளம்பல் வேண்டுமோ?
புலக்குரித்(து) ஒருபொருள்
புகலக் கேட்டியால்.

இது கம்பர் பாட்டு. வால்மீகியும் இப்படியே சொல்லுகிறார்.

''நீ வெற்றி வீரன். பரதனுடைய பெருஞ் சேனையை நாசமாக்கித் தீர்ப்பாய். அதில் சந்தேகமில்லை. ஆனால் ஒரு விஷயம் யோசிக்கவேண்டியது இருக்

## கரும்பினும் இனிய
# கலைமகள் நூல்கள்

**தங்கம்** (நாவல்)

**பி. வி. ஆர்.** **ரூ. 2 4 0**

பணக்கார வாலிபன் ஒருவன் பெற்றோரின் வற்புறுத்தலால் தன் காதலியை விட்டு விலகுகிறான். அவன் பழிச் சுமையுடன் பல கஷ்டங்களை அநுபவிக்கிறாள். முடிவில் அவர்கள் சந்திக்கும் காட்சி இயற்கை யாகவும் ரஸமாகவும் இருக்கிறது.

**கொட்டு மேளம்** (சிறு கதைகள்)

**தி. ஜானகிராமன்** **ரூ. 2 0 0**

சம்பவங்களையும் சம்பாஷணைகளையும் தத்ரூபமாக அமைத்துக் காட்டுவதில் ஆசிரியர் தனித்திறமை படைத்தவர். அவருடைய சிறந்த கதைகள் இந்தத் தொகுப்பில் சேர்ந்துள்ளன.

**புது மெருகு** (இலக்கியம்)

**கி. வா. ஜகந்நாதன்** **ரூ. 1 8 0**

பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் நிகழ்ச்சிகள் சிலவற்றைப் புதிய உருவில் அமைத்து ரசமாகத்தீட்டியுள்ள கதைகள்.

**பலகணிக் காட்சிகள்**
(கட்டுரைகள்)

**கி. சந்திரசேகரன்** **ரூ. 1 8 0**

சமீப காலத்திலே தோன்றிய சில பெரியார்களுடைய வரலாறுகளைப் புதுப் புதுக் கோணத்திலிருந்து பார்த்து எழுதி யுள்ள நடைச் சித்திரங்கள்.

**திவான் மகள்** (நாவல்)

**'குமுதினி'** **ரூ. 1 0 0**


இளம் ஜமீன்தார் ஒருவர் வடநாட்டில் திவானக இருக்கும் ஒருவருடைய பெண்ணை மணப்பதாக எண்ணி அவள் தோழியை மணந்து கொள்ளுகிறார். அருமையான காதல் நவீனம்.

எல்லாத் தமிழ் புத்தகங்களும் கிடைக்கும்

★

# கலைமகள் காரியாலயம்

**தபால் பெட்டி 604, சென்னை - 4**




செல்வி :
**வள்ளியம்மை**

செல்வன் :
**சாம்பசிவம்**

கோவை ஜில்லா, காங்கயம் ஸ்ரீ சென்னியப்பா மில்ஸ் உரிமையாளர், ஸ்ரீ V. S. நாச்சிமுத்து முதலியார் அவர்கள் குமாரத்தி செல்வி **வள்ளியம்மைக்கும்**, அவிநாசி ஸ்ரீ A. V. தங்கவேல் முதலியார் (இன்ஸ்பெக்டர், C. I. D. சென்னை) அவர்கள் குமாரன் செல்வன், **A. T. சாம்பசிவத்திற்கும்**, 31 - 10 - 54 - ந் தேதி காங்கயம் மணமகள் இல்லத்தில் திருமணம் சிறப்பாக நடந்தேறியது.

மணமன்றத்தில் பழைய கோட்டை பட்டக் காரர் ஸ்ரீ N. நல்ல சேனபதி சர்க்கரை மன்றாடி யார் M. L. C. அவர்களும், மற்றும் பிரபலஸ் தர்களும், பல பிரபல வியாபாரிகளும், உறவினர் களும், நேரில் வந்திருந்து மணமக்களை வாழ்த்தி, அனேக பரிசுகள் வழங்கி, ஆசி கூறினார்கள். வெளியூர்களிலிருந்து, முக்கியமாக சென்னை ராஜ்ய முதன் மந்திரி ஸ்ரீ கே. காமராஜ் அவர்களிடமிருந்தும், விவசாய மந்திரி ஸ்ரீ எம். பக்தவத்சலம் அவர்களிடமிருந்தும் மற்றும் பல ராஜ்ய மந்திரிகளிடமிருந்தும், அனேக M. P., M. L. A. க்களிடமிருந்தும் பிரபலஸ்தர்களிட மிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்தன.

**வாழ்க, மணமக்கள்!**



# பற்களின் சுகாதாரத்திற்கு சிறந்த மார்க்கம்!

## ஆக்டிவ் க்ளோரோபில்லும் 'கோலினஸ்' நுரையும்

நீங்கள் இன்னும் ஒரு பழங்காலத்திய டூத்பேஸ்டையே உபயோகித்து வருகிறீர்களானால், உடனே அதைமாற்றி ஆக்டிவ் க்ளோரோபில் சேர்ந்த 'கோலினஸ்' டூத்பேஸ்ட்உபயோகிக்கத் தொடங்குவது நலம்!

இந்த நூதன முறை டூத்பேஸ்டு உங்கள் பற்களை சுத்தமாக்குவதுடன், சிறப்பிலை, பல் சிதைவுக்குக் காரணமான கிருமிகளை ஒழித்து, புண்பட்ட ஈறுகளுக்கு உதவி, உங்கள் சுவாசத்தை மணிக்கணக்கில் நறுமணம் கமழ வைத்திருக்கிறது. இதன் அற்புத நுரை ஆக்டிவ்க்ளோரோபிலை வாயின் ஒவ்வொரு மூலைமுடுக்கிற்கும் எடுத்துச் செல்வதனால், உங்களுக்கு மிகுந்த அனுகூலம் கிடைக்கிறது!

**பெரிய டியூப் 2 மாதங்களுக்கு வரும்**

**பற்களை சுத்தம் செய்ய சிறிதளவு 'கோலினஸே' மிகவும் பயன்படவல்லது! ஈரமில்லாத பிரஷில் அரையங்குல அளவு போதுமானது. எனவே, அன்றாடம் வழக்கமாக இருமுறை உபயோகித்தாலும், ஒரு பெரிய டியூப் இரண்டு மாதங்களுக்குத் தாராளமாக வரும். இன்றே ஆக்டிவ் க்ளோரபில் சேர்ந்த 'கோலினஸ் உபயோகிக்க ஆரம்பியுங்கள்!**




GK. 213

கிறது. அதைச் சொல்லுகிறேன், கேள்!" என்று ஆரம்பித்து, கோபத்தில் லக்ஷ்மணன் விஷயங்களைச் சரியாகக் காண வில்லை என்பதை விளக்கினான்.

"லக்ஷ்மணா! பரதனே நேரில் வருகிறான் என்கிறாய். அப்படியானால் நம்முடைய வில்லுக்கும் அம்புக்கும் கத்திக்கும் என்ன வேலை? தந்தையின் ஆணையை அழித்தும் பரதனைக் கொன்றும் ராஜ்யமும் பழியும் சம்பாதித்து நாம் என்ன பிரயோஜனத்தைப் பெறுவோம்? பந்து மித்திரர்களை அழித்து விட்டுச் சம்பாதிக்கும் சொத்தானது விஷம் கலந்த பணியாரத்தைப் போலாகும். என்னத்துக்காக ராஜ்யம் அல்லது தனம் சம்பாதிக்க விரும்புகிறோம்? யாருக்குச் சுகமும் சந்தோஷமும் தந்து அதனால் நாமும் சந்தோஷம் அடையலாம் என்று சம்பாதிக்கிறோமோ அவர்களை அழித்து விட்டு அந்தப் பொருளை நாம் அடைவதில் என்ன பயன்? அதர்ம வழியில் சம்பாதிக்கும் ராஜ்யம் நமக்கு வேண்டாம், லக்ஷ்மணா! நீயும், பரதனும், சத்ருக்னனும் என்னுடன் இருந்து அனுபவிக்க முடியாத சுகம் எனக்கு வேண்டாம். இது நிச்சயம்."

மேலும் சொன்னான்: "நான் சொல்வதைக் கவனித்துக் கேள். பரதன் இப்போது இங்கே ஏன் வருகிறான் என்பதை நான் அறிவேன். அவன் எள்ளளவும் தருமம் தவறாதவன். நம்மில் யாருக்காவது அவன் எப்போதாவது தீமை செய்ததுண்டா? ராஜ்யத்தை எனக்குக் கொடுத்து விடுவதற்காகவே அவன் வருகிறான். கைகேயியைக் கோபித்து, தந்தைக்கும் ஏதோ சொல்லிச் சமாதானப்படுத்தி விட்டு, என்னைத் திருப்பி அழைத்துப் போவதற்காகவே வந்திருக்கிறான் என்பது நிச்சயம். பரதனை நான் அறிவேன். நீ அவனைப் பற்றிக் கோபாவேசமாகப் பேசியதெல்லாம் அதருமம். அப்படிப் பேசலாகாது. ராஜ்யத்தைச் சம்பாதிக்கவா ஆசைப் படுகிறாய்? அப்படியானால் சொல். பரதன் வந்ததும் அவனுக்குச் சொல்லுகிறேன், 'லக்ஷ்மணனுக்கு ராஜ்யம் வேண்டுமாம். அவனுக்குக் கொடுத்து விடு' என்று. நான் இப்படிச் சொன்ன மாத்திரத்தில் பார், 'எடுத்துக் கொள்' என்று உனக்கு உடனே, தந்து விடுவான், சந்தேகமில்லை" என்று சொல்லிச் சிரித்தான் ராமன்.

லக்ஷ்மணன் வெட்கத்தால் உடல் குறுகிப் போனான்.

"ஒரு வேளை நம்முடைய தந்தை சக்கரவர்த்தியே நம்மைப் பார்க்க வந்திருக்கலாம்" என்றான் லக்ஷ்மணன்.

இத்தனை சேனையும் ஆர்ப்பாட்டமும் யுத்தத்துக்குத்தான் இருக்கும் என்று முதலில் எண்ணினான். ராமன் சொன்னதைக் கேட்டதும், அது அசம்பாவிதம் என்கிற தீர்மானத்துக்கு உடனே வந்தான். மற்று என்ன காரணம் இருக்கக்கூடும் என்று யோசித்து ஒரு வேளை தசரதனே வந்திருக்கலாம், அவனுடன் இந்தச் சேனையும் பெரும் பரிவாரமும் வருவது சகஜமே என்று சமாதானம் பண்ணிக் கொண்டான்.

தான் பரதனைப் பற்றிப் பேசிய பேச்சுக்கள் தகாதவை என்று உணர்ந்து, வெட்கப் பட்டு இம்மாதிரி தடுமாற்றமாகப் பேசினானே என்றும் உரையாசிரியர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள்.

லக்ஷ்மணன் வெட்கப்பட்டுப் போனான் என்பதை யறிந்த ராமன், "அப்படியுமிருக்கலாம்! வன வாசத்தில் கஷ்டப் படுகிறோமென்று எண்ணிச் சக்கரவர்த்தி நம்மையும் முக்கியமாக சீதையையும் ஊருக்கு அழைத்துப் போக வந்திருக்கலாம். ஆனால் மன்னனுடைய வெண் கொற்றக் குடையைக் காணவில்லையே? தந்தை வந்திருந்தால் அது இருக்குமே? எப்படியாயினும் சரி, நீ சாந்தமடைவாய்" என்றான்.

லக்ஷ்மணன், ராமசந்திரன் உட்கார்ந்திருந்த இடத்துக்கு அருகே போய்க் கை கூப்பிய வண்ணம் நின்றான்.

* * *

சேனையைத் தொலைவில் நிறுத்தி விட்டு, புகை கிளம்பிய இடத்தைச் சரியாகப் பார்த்து வர பரதன் சில ஆட்களை அனுப்பினான். சற்று நேரம் கழித்து அவர்கள் சமாசாரம் கொண்டு வந்தார்கள். அதுவே பரத்வாஜர் குறிப்பிட்ட இடம். அங்கே காணப்படும் பர்ணசாலை ராமனுடைய பர்ணசாலை என்பது நிச்சயம் என்று தெரிந்தவுடன் பரதன் புறப்பட்டான்.

தன்மேல் வந்த பழியை நினைத்து நினைத்துப் பயந்து, இன்னது செய்ய வேண்டியது இப்படிச் சொல்ல வேண்டியது என்று யோசித்துக் கொண்டே போனவன், ராமன் உட்கார்ந்திருந்ததைப் பார்த்ததும் எல்லாம் மறந்து விட்டான். புல் தரையில் உட்கார்ந்திருந்த

ராமனைக் கண்டதும் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அண்ணன் இருந்த இடம் நோக்கி ஓடினான்.

துக்கம் மேலிட்டுக் கண்களில் நீர் பெருக, ஒன்றும் பேச முடியாமல் "அண்ணா!" என்று கதறிக் கொண்டு ராமன் காலண்டை விழுந்தான். 'அண்ணா' என்ற ஒரு வார்த்தைக்கு மேல் பேச முடியாமல் தொண்டை அடைத்துக்கொள்ள, விம்மி அழுதான்.

இதற்குள் சுமந்திரனும் குகனும் வந்து சேர்ந்தார்கள்.

ஜடையும் மரவுரியும் தரித்துத் தன் முன் கை கூப்பிய வண்ணம் தரையில் விழுந்து கிடந்த பரதனைப் பார்த்தான் ராமன். துக்கத்தாலும் உபவாசத்தாலும் தேகம் மெலிந்து, நிறம் மாறிப் போய்க் கிடந்த பரதனை வாரியணைத்து, உச்சி மோந்து மடியின் மேல் உட்கார வைத்து, "குழந்தாய், தந்தை சக்கரவர்த்தியைத் தனியாக விட்டு விட்டு நீ இப்படி வெகு தூரம் வனத்துக்கு வந்து விடலாமா? ஏன் இந்த மாதிரி இளைத்துப் போயிருக்கிறாய்?" என்று ராமன் கேட்டான்.

பரதன் பேச்சிழந்து கிடந்தான். பரதனுடைய நிலையைப் பார்த்து ராமன் மெதுவாக, ராஜ்யத்தின் யோக க்ஷேமத்தைப் பற்றி வழக்கப்படி அரச குலத்தவர்கள் சந்திக்கும் சமயங்களில் கேட்பது போல் கேட்டான். கொஞ்ச நேரம் கழித்துச் சமாளித்துக் கொண்டு பரதன் பேசலானான்.

"ராஜ தர்மத்துக்கும் எனக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது, அண்ணா? சிம்மாசனம் ஏறி ராஜ்ய பரிபாலனம் செய்யவேண்டியவன் நீ இருக்க நான் எவ்வாறு அரசனாவேன் அல்லது அரசனுக்குரிய தருமத்தை அனுசரிப்பேன்? எனக்குரிய தருமம் உனக்கு அடிமை செய்வது. அது எனக்குப் பிராப்தமாகவில்லை. மூத்தவன் ராஜ்யப் பொறுப்பைத் தாங்க வேண்டியவன். இது ராஜகுல பொது தருமம். நம்முடைய குலத்திலும் இதுவே முறை. அயோத்தியைக்கு என்னுடன் வந்து, பட்டம் சூடிக் கொண்டு குலத்துக்கும் ஜனங்களுக்கும் மங்களம் அருள்வாய். மகாராஜாவான தந்தை அவர் செய்ய வேண்டிய வேள்விகளையெல்லாம் செய்து முடித்து, புகழ் பெற்ற மகா வீரர் சுவர்க்கலோகம் புகுந்தார். நான் கேகய தேசத்திலிருக்கும் போதே நீங்கள் அயோத்தியை விட்டு வனம் சென்று விட்டீர்கள். அந்தப் பிரிவின் துக்கத்தைத் தாங்க மாட்டாமல் உயிர் நீத்தார். வருந்தாதே! எழுந்து நம் தந்தைக்குச் செய்ய வேண்டிய கிரியைக் கடனைத் தீர்ப்பாயாக! நானும் சத்ருக்னனும் செய்தாயிற்று. அண்ணா! தந்தைக்கு மிகப் பிரியமாக வளர்ந்தாய். உன் ஞாபகமாகவே தந்தை உயிர் நீத்தார். நீ விட வேண்டிய எள்ளும் நீருமே அவருக்குச் சாந்தி தரும்" என்று கம்பீரமாகச் சொன்னான்.

கௌசல்யா தேவி, குகன், பரத்வாஜர் இவர்களிடம் பரதன் சொல்ல நேரிட்ட சமாதானங்கள் — அதாவது நடந்த அனர்த்தங்களில் தனக்கு ஒரு சம்பந்தமுமில்லை என்கிற சமாதானங்கள் — ராமனிடத்தில் சொல்ல வேண்டிய அவசியமே இருக்கவில்லை. துக்கத்தால் பீடிக்கப்பட்டு, தேகம் மெலிந்து, முகம் வாடி நின்ற அந்த பரதனைப் பார்த்ததே போதுமல்லவா? சமாதானங்களுக்கு அவசியமே இருக்கவில்லை. ராமனை அயோத்தியைக்கு அழைத்துப் போகிற விஷயம் ஒன்றே பரதனுடைய காரியமாக நின்றது. அதையே பேசினான். தன்னைப் பற்றிப் பேசவில்லை.

தந்தை இறந்தார் என்ற சொல்லைக் கேட்டதும் ராமன் கோடாலியால் வெட்டப்பட்ட மரம் போல் கீழே விழுந்தான்.

> நந்தா விளக்கனைய
> நாயகனே, நானிலத்தோர்
> தந்தாய், தனியறத்தின்
> தாயே, தயாநிலையே!
> எந்தாய், இகல்வேந்தர்
> ஏறே, இறந்தனையே!
> அந்தோ இனிவாய்மைக்(கு)
> ஆருளரே மற்றென்றான்.

ராஜகுமாரர்களும் சீதையும் சுமந்திரனுடன் ஆற்றுக்குச் சென்றார்கள். அங்கே ஸ்நானம் செய்து, கை நிறைய ஜலத்தை எடுத்துத் தந்தையைத் தியானித்து ஆற்றில் விட்டான். பிறகு வழக்கப்படி செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்து விட்டு பர்ணசாலைக்கு வந்து ராஜகுமாரர்கள் ஒருவர் கையை ஒருவர் பிடித்து நின்று தந்தையை நினைத்துப் பெருங் குரலில் அழுது துக்கம் தீர்த்துக் கொண்டார்கள்.

இவ்விடத்தில் ஒரு விஷயம் சொல்ல வேண்டும். பரதன் வந்து ராமனைப் பார்த்த கட்டத்தில் ராமன் பரதனுக்கு

உபதேசித்ததாக ஒரு நீண்ட ராஜ தரும உபதேசம் வால்மீகி எழுதி யிருக்கிறார். நம்முடைய இதிகாச புராணங்களில் இவ் வாறு ராஜநீதியும், தருமோபதேசமும் அடிக்கடி வரும். தற்காலத்து நூல்களில் ஆசிரியர்கள் முக்கியமாகக் கருதி வருவது நிகழ்ச்சி வேகமும் நாடகத்துக்குரிய வியப்பு, அதிர்ச்சி முதலிய லக்ஷணங்கள். பழைய நூல்களில் இந்த ரஸங்கள் வேண்டியளவு இருந்தாலும் கூடவே மக்களின் சீலத்தை வளர்க்கும் உபதேசங் களும் மத்தியில் தாராளமாகச் சேர்க்கப் பட்டிருக்கும்.

மேலும் இந்தக் கட்டத்தில் வால்மீகி ராமாயண அத்தியாயங்கள் கிரமம் தவறி முன்னும் பின்னுமாக அமைந்து விட் டிருக்கின்றன வென்று பழைய உரை ஆசிரியர்களே கண்டிருக்கிறார்கள். கம்பர் இதை யெல்லாம் கவனித்துத் தற்கால ரீதியாகவே ஒழுங்காகப் பாடி விட் டிருக்கிறார். துளசிதாஸருடைய ராமா யணமோ இந்த ராம—பரதச் சந்திப்புக் கட்டத்தில் ஒரே பக்தி சாகரமாக அலைகள் மோதிப் பருவ காலக் கடலைப் போல் பொங்குகிறது. அதில் எந்தச் சிக்கலுக்கும் இடமே இல்லை.

# படித்துப் பாருங்கள்!

## விநாயகர் அகவல்

அரச மரத்தடியிலும், சாலையிலும், சந்து சதுக்கங்களிலும் கோயில் கொண்டெழுந்தருளி ஊழி ஊழி காலமாக அடியவர்களுக்குத் தன் னருள் சுரந்து தடுத்தாட் கொள்ளும் தனிப் பெருங் கடவுள் விநாயகப் பெருமான். எதைத் துவங்கினாலும், எதைச் செய்தாலும் அப்பெரு மானை முதலில் வணங்கிப் பின்பு எதையும் செய் தல் சைவப் பெருமக்களின் மரபு. அத்தகைய பழம் பெருமை வாய்ந்த விநாயகப் பெருமான் மீது தமிழகத்தின் பழம் பெரும் புலவரான ஔவைப் பிராட்டியார் அருளிச் செய்த விநாயகர் அகவலும் மிகப் பழைமையானது. அது இளம் பிள்ளைகள்கலபமாகச் சொல்லுவதற்கு ஏற்றமுறை யில் இனிய எளிய நடையில் அமைந்திருக்கிறது. ஆனால் அந்நூலின் உட்பொருள் தத்துவார்த்த, ஆராய்ச்சிக்குரிய விஷயமாக இருந்து வருகிறது.

இவ்வரிய நூலுக்கு மிகவும் விரிவான முறை யில் உரை விளக்கம் செய்யப்பட்டிருக்கிறது. வேதாந்தம், சித்தாந்தம், ஆகமம், புராணம் முதலியவைகளை ஆராய்ந்து தெளிந்தஉண்மைகளை ஆங்காங்கு எடுத்துக் காட்டி உரையை மிகச் சிறந்த முறையில் ஆக்கியிருக்கிறார் உரையாசிரியர்.

உரையாசிரியர்: குக ஸ்ரீ பு. பா. ரசபதி; வெளி யிட்டோர்: அமிர்தவசனி பிரசுராலயம், 54, பந்தர் தெரு, சென்னை-1; விலை: ரூ. 1-8-0.

## வாழ்வே நித்யா

நித்யா மணம் கமழும் மலர்; ராமபத்திரன் அந்த மலரைச் சுற்றி வரும் வண்டு; வாசு அந்த வண்டுக்கு உற்சாக மூட்டி யோசனை கூறுபவன்; கிச்சாமி காதலின் உயர்வை அறிந்து அதைப் பற்றிக் கவிதை மழை பொழியும் மேகம்; ஜலஜா காதலை நினைத்து ஏங்கிக் கரையும் குயில்; ஸ்ரீமான் கோதண்டம் தம்மையே மறந்துவிடும் ஓர் அபூர் வப் பேர்வழி; டாக்டர் பகவதி நித்யாவின் உள் ளத்திலும் ராமபத்திரனின் உள்ளத்திலும் காதல் புயலை எழுப்பிவிட உறுதுணையா யிருந்தவர்.

மேலே கூறிய காதலர்களில் யார் யாரை மணந் தார்கள்! அந்த விவரத்தை ருசியுடன் கூறுவது தான் இந்தக் கதை. ஹாஸ்யச் சுவையும் கலந்து கதை சுவாரஸ்யமா யிருக்கிறது.

எழுதியவர்: ரா. கி. ரங்கராஜன்; பிரசுரம்: குமுதம் காரியாலயம்; சென்னை 10; விலை அணு 6.

## இலவு காத்த கிளி

வாழ்க்கையின் பலகோணங்களிலும் புகுந்து அதிலுள்ள இன்பங்களின் முடிவுகளெல்லாம் துன்பத்தை அடிப்படையாகக் கொண்டவைதான் என்னும் கருத்தை வலியுறுத்தும் கதைகளும், பரிசுத்தமான இதயங்களைப் புரிந்து கொள்ளாத மனித சமூகம் இழைக்கும் தீமைகளைப் பற்றிய கதைகளும், காதல் நினைவில் கரைந்த உள்ளம் கரைந்தே போகும் கதியற்ற நிலையைக் காட்டும் கதைகளும், அபலைப் பெண்களுக்கு நேரும் அவல நிலைகளைக் கூறும் கதைகளும் சேர்ந்து இந்நூல் உருவாகி யிருக்கிறது. கதைகள் வாசகர்களின் உள்ளங்களை உணர்ச்சி மயமாக்கும் திறன் வாய்ந்தவையா யிருக்கின்றன.

எழுதியவர்: பிரம்மப், 44, வெங்கடாசல முதலித் தெரு, சென்னை-14; விலை: 1-8-0.

## முதல் ஐந்து வருடத் திட்டம்—வினு விடை

நிதி, உணவும் விவசாயமும், நிலக் கொள்கை, சமுதாய அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கைத் தொழில், குடிசைத் தொழில்கள், போக்குவரத் தும் செய்திப் போக்குவரத்தும், வீடு, தேகா ரோக்கியம், கல்வி, பிற்போக்கு வகுப்பினரின் நலன்—முதலிய துறைகளில் ஐந்தாண்டுத் திட்டத் தினல் ஏற்படும் சாதனைகளை வினு விடை ரூபமாக விவரிக்கிறது இந் நூல். புள்ளி விவரங்களுடன் தெள்ளிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

தயாரிப்பு: திட்டக் கமிஷன், ராஷ்டிரபதி பவனம், புது டில்லி; விலை: அணு 4.

## சாரல்

"தேனருவித் திரை யெழும்பி வானின் வழி ஒழுகும்" வளம் படைத்த திருக் குற்றாலத்தி லிருந்து வரும் 'சாரல்' என்னும் மாதப் பத்திரிகை யின் முதல் இரண்டு இதழ்கள் வரப் பெற்றோம். சமயம், இலக்கியம், கலைகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் முதலியன "சாரல்" இதழ்களை அலங்கரிக்கின்றன. கட்டுரைகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் மிளிர்கின்றன. படித்துச் சிந்தித்துச் சுவைக்க வேண்டிய தரம் உயர்ந்த கட்டுரைகளா யிருப்பது "சாரல்" இதழ்களில் சாரமான விஷயம்.


ஆசிரியர்: ஐ. டி. சிதம்பரம் எம். ஏ.,; "கோல்டு மோகர்," இலஞ்சி, தென்காசி.

# வீட்டுச் சலவை வேலையை

## சுலபமாக்குகின்றன



501 ஸோப்புகளின் செழுமையான நுரை துணி மணிகளுக்குள் ஊடுருவிச் சென்று, அழுக்கையெல்லாம் மாயமாய் வெளியேற்றுகிறது. இந்த ஸோப்புகள் வீட்டுச் சலவை வேலையை உங்களுக்கு அதிக சுலபமும் சிக்கனமுமாக்குகின்றன.




# 501

## சலவை ஸோப்புகள்

டாடா தயாரிப்பு A TATA PRODUCT

இந்திய மூலதனத்தைக் கொண்டு, இந்திய நிர்வாகத்தில், இந்தியாவிலேயே தயாரிக்கப்படுவது

FS 8707

# வஸந்தாவின் விவாகம்



பி.எஸ்.மணி

"வஸந்தா! உன்னிடம் ஒரு சமாசாரம் சொன்னால் அதை ஊர் முழுதும் தண்டோராப் போட்டுப் பரப்பி விடுகிறாய்!" என்று கோபித்துக் கொண்டேன், எனது மனைவியை.

"அதனால் உங்களுக்கு என்ன தீங்கு நேர்ந்து விட்டது!" என்று கேட்டாள் வஸந்தா.

"தீங்கா! எனக்குப் பதவி உயர்ந்ததற்கு எல்லோரும், 'விருந்தும் சிற்றுண்டியும் எப்பொழுது தரப் போகிறாய்!' என்று நச்சரிக்கத் தொடங்கி விட்டார்கள்" என்று அலுத்துக் கொண்டேன்.

"அடுத்த வீட்டு அலமுவிடம் மட்டுந்தான் உங்களுக்குப் பதவி உயர்ந்திருப்பதைப் பற்றிச் சொன்னேன். ஆனால் ஊர் முழுதும் எப்படிப் பரவியதோ!" என்று வியந்தாள் வஸந்தா.

"பெண்களிடம் ஒரு விஷயத்தைச் சொன்னால் போதும். ரேடியோ, மைக் மூலம் செய்தி பரவுவதைவிட வெகு வேகமாகப் பரவி விடும். பெண்களுக்கு மனசுக்குள் ஒரு விஷயத்தை வைத்துக் கொள்ளத் தெரியாது. அது அவர்கள் சுபாவம்!" என்று கேலி செய்தேன்.

"பெண்களுக்கு ஒரு விஷயத்தை மனசுக்குள் வைத்துக் கொள்ளத் தெரியாது — ஆனால் நீங்கள்!...நடு இரவில் பைத்தியம் பிடித்தவர் போலப் புலம்பி விடுவீர்கள்!" என்று பதிலுக்குச் சூடு கொடுத்தாள் வஸந்தா.

அவள் கேலி வார்த்தைகள் என் இதயத்தில் சுருக்கென்று தைத்தன. அந்த இடத்திலிருந்து எண்ண அலைகள் குபுகுபுவென்று பாய்ந்து வந்தன.

* * *

திருநெல்வேலியிலிருந்து பன்னிரண்டு மைல் தூரத்தில் அரியநாயகிபுரம் என்ற கிராமம் இருக்கிறது. வற்றாது பாயும் பொருனை நதிக் கரையிலுள்ள அரியநாயகி புரத்தில் எனக்குச் சொந்த வீடு ஒன்றிருந்தது. அந்த வீடு வாடகையில்லாமல் பூட்டிக்கிடந்தபடியினால் அதை விற்று விடக் கருதினேன். ஒரு வாரம் லீவு வாங்கிக் கொண்டு அரியநாயகிபுரத்துக்குச் சென்றேன்.

அந்தக் கிராமத்திலேயே என் அக்காவின் வீடு இருந்த பொழுதிலும் அதில் போய் இறங்க எனக்கு மனசில்லை. அக்கா போன பிறகு உறவு கொண்டாடுவது அழகாகுமா! அக்காவின் பெண் வஸந்தாவும், அக்காவின் அகத்துக்காரரும் அந்த வீட்டிலிருந்தார்கள். வஸந்தாவிடம் எனக்கு அளவற்ற பிரியம் உண்டு. ஆனால் அத்திம்பேர் மூன் கோபியாயிற்றே! ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டு வீட்டை விற்கும் கைங்கர்யத்தில் முழு மூச்சுடன் ஈடுபட்டேன்.

நான் வந்திருப்பது என் அத்திம்பேருக்கு எப்படியோ தெரிந்து விட்டது. அவர் விடுவிடென்று வந்து என்னைக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு அவர் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். 'சொந்த வீடிருக்க ஹோட்டலில் சாப்பிடுவது எவ்வளவு அக்கிரமம்!' என்று என்னைக் கோபித்துக் கொண்டார். அவர் வற்புறுத்தலின் பேரில் அவர் வீட்டிலேயே தங்கினேன். அப்பொழுது தான் என் வாழ்க்கைச் சகடத்தில் புதிய பாதையை வகுக்கக் கூடிய சம்பவம் நிகழ்ந்தது.

அன்று மாலையில் வீடு விலை பேசி முடிப்பதற்காக ஒருவரைப் பார்த்து விட்டுத் திரும்பிக்கொண்டிருந்தேன். என் முன் வஸந்தா வந்து நின்றாள்.

"நீங்கள் இந்த ஊரில்தான் இருக்கிறீர்களா!" என்று புன்முறுவல் பூத்தபடி கேட்டாள் வஸந்தா.

"ஏன்! இன்று காலையில் உன்னிடம் சொல்லி விட்டுத்தானே வெளியில் புறப்பட்டுப் போனேன்! அதற்குள் என்னை இந்த ஊரைவிட்டே அனுப்பி விடத் தீர்மானித்து விட்டாயா!" என்று திகைப்புடன் கேட்டேன்.

"இன்று முழுதும் கண்ணில் தென்படாவிட்டால் அதுதானே அர்த்தம்!"

"பேஷ், நல்ல வியாக்கியானம்! இப்பொழுது எங்கே புறப்பட்டாய்!"

"உங்களிடம் யோசனை கேட்பதற்காகத்தான் புறப்பட்டு வந்தேன்!"

"என்னுடைய யோசனையைக் கேட்டு நடக்கும்படியான காரியந்தான் என்ன!"

" கல்யாணம் செய்து கொள்ளவேணும் என்ற எண்ணம் என் மனத்தில் உதித்திருக்கிறது !"

" அப்படியா !" என்று கேட்ட நான் அதிசயத்தில் ஸ்தம்பித்துப் போனேன். 'வஸந்தாவுக்குக் கல்யாணம்! அவள் மனசுக்குகந்த மணவாளன் யார்! அவள் அன்பைப் பெறப் பாக்கியம் செய்தவன் எவனோ!' சிந்தனை அலைகள் சிதறி ஓடின.

" என்ன! ஒரு பெண் நிடுதிப்பென்று திருமணத்தைப் பற்றிப் பேசுகிறாளே என்று உங்களுக்குத் திகைப்பா யிருக்கிறதா !"

" இல்லை, இல்லை ! பெண்களின் உள்ளத்தில் உதித்த ஆசை அமுங்கிக் கிடக்காதுதானே! ஆனால் உன்னை அடையப் போகும் அதிர்ஷ்டசாலி யார் என்ற சிந்தனையில்தான்..." என்று இழுத்தேன்.

" ஓஹோ ! அதுவா ! எனக்கு வெட்கமா யிருக்கிறது. இப்பொழுது சொல்ல மாட்டேன் !"

" நீ சொல்ல வேண்டாம். இதற்கு மட்டும் பதில் சொல்லு. அவன் எனக்குத் தெரிந்தவன் தானா !"

" அதைச் சொல்ல இயலாது. ஆனால் நீங்கள் எனக்கு ஒரு ஒத்தாசை செய்ய வேண்டும் !"

" கொஞ்ச நேரத்துக்கு முன் ஆலோசனைதான் கேட்பதாகச் சொன்னாய் ! ஆனால் இப்பொழுது வேறு விதமாக......"

" அது இருக்கட்டும். நீங்கள் இன்றிரவு அப்பா கூடத்தானே சாப்பிடுவீர்கள் !"

" ஆமாம் ! அவர் கூடத்தான். இதில் என்ன சந்தேகம் !" என்றேன்.

" என் திருமண ஆசையை அவரிடம் நீங்கள் மெதுவாகச் சொல்லிவிட வேண்டும் !"

நான் அவளை மிகுந்த அதிசயத்துடன் அண்ணாந்து நோக்கினேன்.

" என்னையா சொல்லச் சொல்கிறாய் ! ஏன், நீயே அதை அவரிடம் அறிவித்தால் என்ன !"

" எனக்குப் பயமா யிருக்கிறது. உங்களுக்குத் தான் அப்பாவின் குணம் தெரியுமே !"

---

## கடந்த நாட்கள்

அவன் அவளைக் காதலித்தான். அவளும் அவனைக் காதலித்தாள். அவனது காதல் ஒரு சந்தர்ப்பத்தில் திசை திரும்பியது. ஆனால் அவள் காதல் தன்னலமற்றது. அவனையே நினைந்து உள்ளம் மறுகினாள். இரண்டாவது காதலில் தோல்வியடைந்து அவன் தன் உண்மைக் காதலியிடம் திரும்பி வந்தான். அவள் அகதி; அகதிகளின் முகாமிலிருந்து எங்கோ சென்று விட்டாள் அவள். இப்பொழுது அவன் அகதியாகி அவள் காதலை எண்ணிக் கரைந்தான். வெறிச்சோடிய அவனுடைய உள்ளம் ஆசிரியரின் எழுத்தில் நன்கு புலனாகிறது.

ஆசிரியர் : எம். மக்பூல்; 10/14, புதுத் தெரு: திருச்செங்கோடு. விலை : அணா 4.

## ஸம்க்ஷேப ராமாயணம்

அனாதி காலந் தொட்டு, பாரத தேசத்தின் புராதன காவியமாக விளங்கி வரும் வால்மீகி ராமாயணத்தை முழுவதும் படிக்க அவகாசமில்லாதவர்களுக்கு இந்த ராமாயணச் சுருக்கம் பெரிதும் பயன்படும். வட மொழியில் சுலோகங்களும், தமிழில் பதவுரையும் கொடுத்திருப்பதால் படிப்பவர்களுக்குப் பொருள் விளக்கம் மிகவும் எளிதா யிருக்கும்.

பிரசுரம்; ஆர். சுப்பரத்தினம் ஐயர், 50, வடக்குத் தெரு, மலைக் கோட்டை, தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி; விலை ரூ. 1—4—0.

---

" உனக்குப் பயமா யிருந்தால் நீ தேர்ந்தெடுக்கப் போகிறவரைத் தூது அனுப்புவதுதானே !"

அவள் புன்முறுவல் தவழ, " உங்களிடம் அப்பாவுக்கு அளவு கடந்த மதிப்பிருக்கிறது...... அதனால்தான்......" என்று இழுத்தாள்.

" கொஞ்சநஞ்ச மதிப்பையும் கெடுத்துக்கொள்ளச் சொல்கிறாய் ! அப்படித்தானே !"

அவள் மௌனமாகத் தன் பவள வாயில் புன்முறுவலை அள்ளிச் சொரிந்தாள்.

" சரி ! அப்படியானால் உன் உள்ளத்தைக் கவர்ந்தவன் யாரென்று சொன்னால் அவரிடம் சொல்ல எனக்குத் தைரியம் ஏற்படும் !"

" அது இயலாத காரியம் ! யாரென்று விளக்கி விட்டால் பின் காரியம் கைகூடுவதற்கு உங்கள் தயவு எதற்கு ! அது மட்டுமல்ல ; நீங்கள் என் தந்தையிடம் என் உள் அந்தரங்கத்தை எடுத்துக் கூறினாலே அவர் புரிந்து கொள்வார் !"

" சரி ! முயற்சி செய்கிறேன் !"

" நீங்கள் இந்த உதவியைச் செய்தால் உங்களை நான் என்றும் மறக்க மாட்டேன் !"

வஸந்தா போய்விட்டாள், என் உள்ளத்தில் பெரிய குழப்பத்தை உண்டு பண்ணி விட்டு.

அவள் வேண்டுகோளை எப்படி நிறைவேற்றுவது என்ற கவலையுடன் அவர்கள் வீடு சென்றேன்.

வஸந்தாவின் தகப்பனார் நாற்காலியில் சாய்ந்து கொண்டு கணக்குப் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தார். என் காலடிச் சத்தத்தைக் கேட்டுப் பார்வையைத் திருப்பினார்.

" வா, அப்பா ! உனக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறேன் !" என்றார் அவர்.

" அப்படியா, அத்திம்பேர் !" என்று கேட்ட என் கண்கள் வியப்பால் விரிந்தன.

" உன்னிடம் ஒரு யோசனை கேட்கலாமென்று நினைத்தேன். நினைத்ததுதான் தாமதம், நீ வந்து விட்டாய் !" என்றார்.

" நான் சிறியவன். என்னிடம் அப்படி யோசனை கேட்கும்படியான அறிவு ஒன்று மில்லையென்று நினைக்கிறேன் !" என்றேன்.

" இதற்கு அசாத்திய அறிவு வேண்டியதில்லை. சிறிய விஷயம் ; என் பெண் வஸந்தாவைப்பற்றி !"

"வஸந்தாவைப் பற்றியா !" என்று கேட்டவன் அப்படியே வாயைப் பிளந்தபடி அரைக்கணம் அயர்ந்து போனேன் !

" வஸந்தா கலகலப்பாகவே யில்லையே ! எனக்குக் கவலையா யிருக்கிறது. உனக்கு ஏதாவது தெரியுமா !" என்று வினவினார்.

வழியத் தேடிச் சென்ற பொருள் கையில் வந்து விழுந்தாற் போல, அவர் சொன்னதைக் கேட்டு ஆனந்தக் கடலில் ஆழ்ந்து போனேன்.

" நானும் அதைக் கவனித்தேன். அவளுக்குக் கல்யாணம் செய்யும் காலம் வந்து விட்டது...."

" ஆம் ! நீ சொல்வது ரொம்ப சரி ! அவளுக்கும் பதினெட்டு வயதாகி விட்டது. அவள் வயதில் அவள் தாயாருக்கு ஒரு குழந்தைகூடப் பிறந்து விட்டது !" என்றார் அவர்.

" நீங்கள் அவள் கல்யாணத்தைப் பற்றித்தான் கவலைப்படுகிறீர்கள் என்பதை நான் கனவிலும் கருதவில்லை. திருமணத்துக்கு என்ன அவசரம் என்று சொல்வீர்கள் என்று எதிர்பார்த்தேன் !"

" இதோ பார்த்தாயா ! என்னைப் பற்றி நீ எவ்வளவு தப்பு அபிப்பிராயம் கொண்டிருக்கிறாய், தெரியுமா !" என்று கோபத்துடன் கேட்டார்.

அவரை அதிசயத்துடன் கூர்ந்து நோக்கினேன். பதில் சொல்ல வாயெழ வில்லை.

அவர் தொடர்ந்து, " வஸந்தா படித்தவள் ; அழகி. அவளுக்குரிய காதலனை அவளே தேர்

தெடுத்துக் கொள்ளும் உரிமையை வழங்க உத்தேசித்திருக்கிறேன்! அதை அவளிடம் சொல்லத்தான் உன் உதவியை நாடினேன்!" என்றார்.

இதுவரை பிடித்து வைத்த பொம்மை மாதிரி பார்த்துக் கொண்டிருந்த எனக்குச் சிறிது தைரியம் உண்டாயிற்று.

"ஆம்! அவள் மனசுக்குகந்த காதலனைத் தேர்ந்தெடுத்து விட்டாள்!"

"என்ன அவ்வளவு நிச்சயமாகச் சொல்கிறாயே! உனக்கு அவள் சொன்னாளா! இல்லாவிட்டால் உனக்கு ஜோசியம் தெரியுமா!"

நான் சிரித்தேன். "ஆம்! அவளே அதைச் சொன்னாள். தங்களிடம் அவள் விருப்பத்தை வெளியிடச் சொன்னாள். ஆனால் அதற்கு அவசியம் இல்லாமல் நீங்களே முந்திக்கொண்டுவிட்டீர்கள்!"

"வேறு ஏதாவது அதைப் பற்றிச் சொன்னாளா... !" என்று கேட்டார்.

"அவள் தன் உள்ளம் கவர்ந்தவன் யாரென்று தங்களுக்குத் தெரியும் என்று சொன்னாளே!"

அவர் குதித்தெழுந்து, "அவள் அப்படிச் சொன்னாளா!" என்று கேட்டார்.

"ஆமாம்!" என்றேன்.

என்னைப் பொருட்காட்சியிலுள்ள அதிசயப் பொருளைப் பார்ப்பது போல் கூர்ந்து நோக்கினார். அவர் முகத்தில் மகிழ்ச்சி ரேகைகளின் சாயல் படரத் தொடங்கியது.

"ஆம்! நான் நினைத்தது நடந்து விட்டது. என் முடிவு சரியானதுதான்! அவன் அவளுக்குச் சகல விதத்திலும் சரியான ஜோடி!"

"இல்லை! நீங்கள் சொல்வது தவறு!" என்று பலமாகக் கத்தினேன்.

"ஏன், எதற்காகச் சொல்லுகிறாய்!"

நான் குதித்தெழுந்தேன், படபடப்பும், ஆத்திரமும் தொனிக்க. "வஸந்தாவுக்கு அவன் ஏற்றவன் அல்ல. எனக்கு அவளிடம் அளவற்ற பிரேமை. அவள் என்னைத் தவிர வேறு யாரையும் மணக்கக் கூடாது!" என்று பலமாக இரைந்தேன்.

"என்ன! உனக்கு இத்தனை கோபமும் ஆத்திரமும் இருக்கும் என்று எனக்குத் தெரியாதே!" என்றார் அத்திம்பேர்.

நான் பைத்தியம் பிடித்தவனைப் போல, "அவன் யார்! அதைச் சொல்லுங்கள், முதலில்!" என்று இரைந்து கூவினேன்.

"ஏன், அவனையே கேட்பதுதானே!" என்று பதிலளித்துவிட்டு நாற்காலியை விட்டு எழுந்தார்.

நான் வாசல் பக்கம் திரும்பினேன். வாசலில் வஸந்தா நின்று கொண்டிருந்தாள்.

"வஸந்தா, நான் ஒரு முட்டாள்! அசடு. என் உள்ளத்து ஆசையை உன்னிடம் தெரிவிக்காது ஊமையாக இருந்து விட்டேன்!" என்று பலங்கொண்ட மட்டும் கத்தினேன்.

அவள் நகைத்தாள்.

"உன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவன் யாரென்று சொல்லிவிடு. இல்லாவிட்டால் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும்!" என்றேன்.

"இந்தா! எழுந்திரு. என் பெண்ணினால் உனக்குப் பைத்தியம் பிடிக்க வேண்டாம்! காதல் பிதற்றலும் வேண்டாம். வெகு சீக்கிரத்தில் உன் கனவை நனவாக்கி விடுகிறேன்!" என்றார் என் அத்திம்பேர், அரைத் தூக்கத்திலிருந்த என்னைத் தட்டி எழுப்பியபடியே.

நான் கண்களைத் துடைத்துக் கொண்டு பிரள பிரள விழித்தேன். என் எதிரில் அத்திம்பேர் சிரித்துக் கொண்டே நின்று கொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்தில் வஸந்தா நாணிக்கொண்டே புன்முறுவலை அள்ளிச் சொரிந்தபடி நின்றாள்.

அடுத்த மாதம் என் கனவு நனவாகியது. வஸந்தாவின் கைத்தலம் பற்றினேன்.

* * *

பழைய நினைவுகளில் ஒன்றிப்போன நான் அப்படியே அயர்ந்து போய்க் கண்களை மூடினேன். அச்சமயம் அடுத்த வீட்டிலே கேட்ட சண்டை தூக்கத்திலிருந்து விழிப்பைக் கொடுத்தது.

வஸந்தாதான் அடுத்தவீட்டு அலமுவிடம் இரைந்து கொண்டிருந்தாள்.

"ஏண்டியம்மா! உன்னிடம் ரகசியமாக ஒரு விஷயம் சொன்னால் நீ எல்லாரிடமும் சொல்லி, இப்பொழுது என் கணவரிடமும் வசவு வாங்கும்படியாக வைத்து விட்டாயே!"

"ஏண்டியம்மா! சந்தோஷ சமாசாரத்தை நாலு பேரிடம் சொல்லி மகிழ்வதில் என்ன தப்பு! கல்யாணத்திலும் பிறந்த நாளிலும் கொட்டு மேளம் கொட்டி நாலு பேரைக் கூப்பிட்டுச் சந்தோஷப்படுவது எதற்காக......!" என்று அவளுக்குச் சமாதானம் கூறினாள் அலமு.

"அது என்னவோ, அம்மா! இப்பொழுது அதனால் என் கணவருக்கும் எனக்கும் மனஸ்தாபமேற்பட்டு விட்டது!" என்று கூறிவிட்டு 'விர்'ரென்று வீட்டினுள் வந்து விட்டாள் வஸந்தா.

"வஸந்தா!" என்று கூப்பிட்டேன்.

"என்னை மன்னித்து விடுங்கள். உங்கள் மனத்தைப் பெரிதும் புண்படுத்தி விட்டேன்!" என்று நாணியவாறே கூறினாள் வஸந்தா.

"நீ உண்மையைத்தானே சொன்னாய்! என்னுடைய பிதற்றலினால்தானே உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள முடிந்தது!" என்று நகைப்புக்கிடையே கூறினேன்.

"ஆமாம்! எனக்கு அன்றைக்கே ஒரு சந்தேகம் ஏற்பட்டது. அப்பாவிடம் நேரிலேயே உங்கள் விருப்பத்தைக் கூறுவதற்கென்ன! பாதி ராத்திரியில் அப்படி......"

"அதுவா! அக்கா இருந்தால் என் உள்ளக் கிடக்கையை அவளிடம் சொல்லியிருக்கலாம். ஆனால் அத்திம்பேர்தான் முன் கோபியாயிற்றே!"

"அதற்காக அப்படியா செய்வார்கள்!"

"இல்லை! நான் வீடு விற்பனை விஷயமாக ஒருவரிடம் போயிருந்தேன் அல்லவா! அவர் பேச்சு நடுவில், 'உன் அக்கா பெண்ணுக்கு வேறு இடத்தில் அல்லவா அத்திம்பேர் வரன் பார்க்கிறார்! உனக்கு இல்லையா!' என்று கேட்டார். அது என் உள்ளத்தில் ஆழப் பதிந்து வேதனையை அளித்தது. அந்த வேதனையின் பிரதிபலிப்புதான் அன்றையச் சம்பவம்!" என்றேன்.

வஸந்தா அதைக் கேட்டு விழுந்து விழுந்து சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்!" என்றேன்.

"இல்லை. அன்றைக்கு உங்களிடம் அந்த மாமாவை, வேணுமென்றே எனக்கு வேறிடத்தில் பெண் பார்ப்பதாகச் சொல்லும்படி அவரிடம் கூறியிருந்தேன். அது நினைவுக்கு வந்தது; சிரித்து விட்டேன்" என்றாள் வஸந்தா.

"அடி, கள்ளி! நீதானா காரணம்!" என்றேன்.

"இல்லை; முழுப் பொறுப்பும் என் மீது சுமத்தி விடாதீர்கள்! என் அப்பாவுக்கும் பங்குண்டு. 'ஏதாவது சாக்குச் சொல்லி உங்கள் பிள்ளையை ஊருக்கு அனுப்பி வையுங்கள்' என்று உங்க அம்மாவுக்கு அப்பாதான் இரகசியமாகக் கடிதம் எழுதியிருந்தார்!" என்றாள் வஸந்தா. நான் அதைக் கேட்டு அயர்ந்து போனேன்.

# உயர் பதவிக்கு உகந்தவன்




## ஸெவன் ஓ'க்ளாக் பிளேடுகளால் உங்களுக்கு என்ன அனுகூலம்

பணம் மிச்சமாகிறது. டீக்கான தோற்றம்.
க்ஷவரசுகம். பரிசுத்தத்தன்மை.
வெற்றிக்கான மார்க்கம்.

தினசரி ஸெவன் ஓ'க்ளாக் பிளேடுகளால்
க்ஷவரம் செய்துகொள்ளுங்கள்.

## 7 o'clock BLADES






## 28. விசித்திர இருதயம்

ஜகதீஷ் எதற்குப் பயந்து ஓடி ஒளிய நினைத்தானோ, அதுவே அல்லவா அவன் குறுக்கே வந்து நின்று விட்டது! இப்படி ஆகும் என்று தெரிந்திருந்தால் அவன் இவ்வளவு தூரம் ஓடி வந்திருக்க வேண்டாம் அல்லவா? அவன் கண்களெதிரே பூச்சி பறந்தது. எதிரே இருப்பது என்ன, நடப்பது என்ன என்று அவனுக்கு ஒன்றுமே தெரியவில்லை. எனவே, ஆடாமல் அசையாமல் கல்லாகச் சமைந்து உட்கார்ந்திருந்தான்.

போக்கு வரத்தைச் சீர் செய்வதற்காகக் கையைத் தூக்கி யிருந்த போலீஸ்காரர் வண்டிகள் போகலாம் என்பதற்கு அடையாளமாகச் சமிக்ஞை காட்டினார். காரும் நகர்ந்தது. ஆனால் ஜகதீஷ் அதையெல்லாம் எங்கே கண்டான்? அவன்தான் பேய் அறைந்தவன் போல் விலி பிடித்து உட்கார்ந்திருந்தானே? அவனுடைய முகம் போயிருந்த போக்கைக் கண்டு விஜயலக்ஷ்மிக்குக் குலை நடுக்கம் எடுத்தது. அவனைப் பிடித்து உலுக்கி, "என்னவோ சொல்லிக் கொண்டிருந்தீர்கள். திடீரென்று நிறுத்தி விட்டு இப்படிப் பிரமை பிடித்தவர் போல் உட்கார்ந்து விட்டீர்களே!" என்று கேட்டாள்.

விஜயலக்ஷ்மியின் கர ஸ்பரிசம் பட்டவுடனுக்குற்று ஜகதீஷ் சுய உணர்வு பெற்றான். "ஒன்றுமில்லை. எங்கேயோ நினைவு. ஆமாம், நான் என்ன சொன்னேன்? என்னால் இயன்ற உதவிகளைச் செய்திருக்க மாட்டேனா என்றுதானே? அதோடு அந்தச் சமயம் பார்த்து என் உடல் நிலை வேறு சீர்கேடுற்றிருந்தது. அதனால்தான்..." என்றான்.

அதற்கு மேல் விஜயலக்ஷ்மி அவனைப் பேச விடவில்லை. "அது போனால் போகட்டும், பரவாயில்லை. இனிமேல்தான் உங்கள் உதவி எங்களுக்கு அதிகமாகத் தேவையா யிருக்கும். அரசாங்கச் சபைத் தேர்தலில் அவர் வெற்றி பெற்று விட்டால் ஏராளமான பொறுப்புகளும் வேலைகளும் அவருக்குச் சுமந்து விடும். அப்பொழுது கட்டாயம் உங்கள் உதவியை நாங்கள் நாடத்தான் செய்வோம். நீங்கள் மறுக்கக் கூடாது. அதோடு நானும் ஏதாவது பொழுது போக்காக உங்களிடம் படிக்கலாம் என்று இருக்கிறேன். என்ன சொல்கிறீர்கள்?" என்றாள்.

அரசாங்க சபைக்குத் தனவந்தர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதால் இந் நாட்களில் வேலையற்றவர்களுக்கு வேலை கிடைப்பதற்கான பல சாதனங்கள் பெருகுவது இயல்பே அல்லவா?

"தேர்தலில் லால்ஜி ஸேட்டுக்குத்தான் வெற்றி கிட்டப் போகிறது. இவ் விஷயத்தில் சந்தேகத்துக்குச் சிறிதும் இடம் இல்லை. ஏனென்றால் இது சம்பந்தமான பொறுப்பை ஏற்றிருப்பவர் ஜுகல்கிஷோர். அவர் பலே கைகாரர். இம்மாதிரியான காரியங்களுக்கு அவரைப் போன்ற தகுதியான ஆசாமி வேறு யாருமே கிடையாது. இதுவரை அவர் எடுத்துக் கொண்ட காரியம் தோல்வியுற்றதென்பதே இல்லை!" என்றான் ஜகதீஷ்.

"இருக்கலாம். ஆனால் என் கணவர் தேர்தலில் வெற்றி பெறுவது சர்வ நிச்சயம் என்பதற்கு வேறொரு முக்கியமான காரணமும் இருக்கிறது. அதாவது என் கணவருக்கு எதிராகப் போட்டியிட்ட பிரமுகர்கள் அனைவரும் தங்கள் தங்கள் அபேட்சைப் பத்திரங்களை வாபஸ் பெற்று விட்டார்கள். அதனால் இப்பொழுது அவர் மட்டுமேதான் அபேட்சகர். அப்படியிருக்கும்பொழுது அவருக்குக் கிட்டப்போகும் வெற்றி விஷயத்தில் என்ன சந்தேகம் உதிக்க முடியும்? போட்டி ஏதாவது இருந்தால் அல்லவா யோசனைக்கு இடம் ஏற்படுவதற்கு?" என்றாள் விஜயலக்ஷ்மி.

அப்பொழுது அவள் முகத்தில் அலாதி மகிழ்ச்சி தாண்டவ மாடியது. லால்ஜி ஸேட் அரசாங்க சபைத் தேர்தலில் வெற்றி பெற்றுவிடப் போகிறார் என்பதற்காக விஜயலக்ஷ்மி அத்தனை மகிழ்ச்சி கொண்டாளா, அல்லது அவருக்குக் கிட்டப்போகும் வெற்றி காரணமாக, ஜகதீஷுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளும் வாய்ப்பு தனக்குக் கிட்டக்கூடும் என்ற நினைப்பில் மகிழ்ச்சி கொண்டாளா என்பது சுலபமாகச் சொல்ல முடியாத விஷயம். அந்த மகிழ்ச்சியின் மிதப்பிலேயே, "இதோ பாருங்கள்! அப்புறம் நீங்கள் எனக்கு ஆங்கிலம் கற்றுத் தரவேண்டும். புரிந்ததா? இப்பொழுதே சொல்லி விட்டேன்!" என்றாள் மறுபடியும்.

அவளுக்கு என்ன பதில் சொல்வது என்று ஜகதீஷுக்குப் புரியவில்லை. அப்பொழுது அவன் இருந்த நிலையில் யார் இருந்தாலும் பேசத் தெரியாமல்தானே நிற்பார்கள்?

"ஏன் மௌனம் சாதிக்கிறீர்கள்? சரி யென்று சம்மதம் அளிக்கக் கூடாதா?" என்று கேட்டாள் விஜயலக்ஷ்மி.

"நான் எப்படிச் சரியென்று சம்மதம் அளிப்பேன்? என் வாழ்க்கை தான் வெகு விசித்திரமானதா யிருக்கிறதே!"

"இருந்தால் என்ன? அந்த விசித்திரங்களோடு இன்னொரு விசித்திரத்தையும் தான் உங்கள் வாழ்க்கையில் சேர்த்துக் கொள்ளுங்களேன்!" என்றாள் விஜயலக்ஷ்மி.

விஜயலக்ஷ்மியின் வாழ்க்கையில் கலை மிளிர்ந்தது. அவள் உட்காருவதிலும், எழுந்திருப்பதிலும், நடப்பதிலும், நிற்பதிலும்— ஒவ்வொன்றாகக் கூறுவானேன்? — அவளுடைய ஒவ்வொரு அங்க சேஷ்டையிலுமே அலாதி அழகு பளிச்சிட்டு ஒளி வீசியது. அறியாத மனிதனும் அறிந்து கொள்ளக் கூடிய வகையில் அவள் பேச்சில் நயம் தொனித்தது. கடைந் தெடுக்கப்பட்ட தந்த விக்ரஹம் போன்ற அவள் உடல் அழகையும், உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அங்க நெளிவுகளையும் கண்டு யாருமே பிரமிக்கத்தான் செய்வார்கள்.




அவள் அவ்வார்த்தைகளைக் கூறும்பொழுது வேண்டுமென்றே கண்களின் கருவிழிகளை ஒரு ஓரத்தில் கொண்டு வந்து நிறுத்தி ஒய்யாரமாகப் பார்த்தாள். சிரிப்பும் சினமும் கலந்த அவளுடைய அந்த முக பாவத்தில் மனத்தை ஈர்த்திழுக்கும் அபார சக்தி அநாயாசமாகத் தாண்டவமாடியது. தோள் பட்டையில் சரிந்து விழுந்திருந்த முந்தானையை அவள் லாகவமாக எடுத்து முன்னுக்குக் கொண்டு வந்த காட்சியே காண்போரின் கண்களைக் கவர்வதாக அமைந்தது. அப்பொழுது அவள் கரம் அறிந்தோ, அறியாமலோ ஜகதீஷின் உடலை ஸ்பரிசித்தது.

அடுத்த கணம் ஜகதீஷின் மனத் திரையில் அவனுடைய அன்புக்கன்பான மனைவி கோகிலாவின் எழிலுருவம் நிலைபெற்றது. கோகிலாவைக் காட்டிலும் வயதில் சற்றுப் பெரியவளும் கொஞ்சம் பருத்து நிறைந்த தேகக் கட்டோடு கூடியவளுமான விஜயலக்ஷ்மி தன்னிடமும் கோகிலாவைப் போன்ற உடலழகும் உணர்ச்சி அழகும் இருக்கின்றன வென்பதை அவனுக்கு ஒருங்கே காட்ட முயன்று கொண்டிருந்தாள். அதைக் கண்ட ஜகதீஷின் மனத் திரையிலே ஒரு புதுமை உணர்ச்சி தோன்றி உள்ளத்தைக் கிளுகிளுக்கச் செய்தது. விஜயலக்ஷ்மியின் விழிகளில் மதிமயக்கும் பருட்சியையும் உள்ளத்தைக் கிளர்ச்சி கொள்ளச் செய்யும் வெறியையும் கண்ட அவன் சிறிது நேரம் தன் நிலை தவறித் தடுமாறினான். தன் காரணமாகத்தான் இன்ப வெறியும் எண்ணப் புயலும் விஜயலக்ஷ்மியிடம் உருவாகி ஓங்கி வளர்ந்திருக்க வேண்டும் என்பதையும் உணர்ந்தான். அடுத்த விநாடி அவனுக்கு ஒரேயடியாகத் தூக்கிவாரிப் போட்டது. 'என்ன இசைகேடான நிலைமையில் சிக்கி விட்டோம்!' என்பதை நினைத்த மாத்திரத்தில் அவன் மனத்தை என்னவோ செய்தது.

பெண் மணிகளை வணங்கி வழிபடும் தெய்வ மகளிராக அவன் மதித்திருந்தான். சிறு பிராயம் முதற் கொண்டே உல்லாசமாகப் பொழுதைப் போக்குவதில் ஆர்வம் மிகக் கொண்டிருந்த பொழுதிலும் அவன் அழகிற் சிறந்த மாதர்களைக் கண்டு உள்ளத்தைச் சலிக்க விட்டதில்லை; இருதயத்தில் காம வாசனைக்கு இடம் கொடுத்ததில்லை. பெண்ணினம் மிக மிகப் பரிசுத்தமானது என்ற தன்னம்பிக்கை அவனிடம் பரிபூரணமாக நிறைந்திருந்தது. ஆனால் வாழும் வகையறியாமல் வயிறு



# நீங்கள் இன்று உங்கள் பற்களை

# மக்ளீன்

# செய்தீர்களா?



ஆம் நான் இன்று என் பற்களை மக்ளீன்ஸ் பற்பசையைக் கொண்டு சுத்தம் செய்தேன்.

வசீகரம் வாய்ந்த புன்னகைக்கு ஆரோக்கியமான பற்கள் அத்தியாவசியம் ஆகையால் தான் நான் பிரிதி தினமும் இரு முறை எனது பற்களை மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையைக்கொண்டு சுத்தம் செய்கிறேன். மக்ளீன்ஸிலுள்ள ஒரு தனிப்பட்ட பொருள் பற்களின் மேல் படிந்துள்ள மங்கலான பூச்சை நீக்கி பற்களுக்கு இயற்கையாக ஒளிரும் வெண்மையைக் கொணர்கிறது. அதிக வெண்மையான பற்கள், கெட்டியான ஈரு மற்றும் நறுமணமுள்ள சுவாசத்திற்கு மக்ளீன்ஸ் பற்பசையையே உபயோகியுங்கள்.

"...மக்ளீன்ஸ் பற்பசை இப்பொழுது கடைகளில் விற்கப்படும் எல்லா ரகங்களை விட மிக உயர்ந்தது!"




MTY-39-TAM

க்ளோரோபில் சேர்ந்தும் கிடைக்கும்

வளர்க்கும் வழி புரியாமல் திண்டாடும் காலத்தில் பெண்களின் பெருமைக்கும் கற்புக்கும் பங்கம் நேரக்கூடும் என்பதையும் அவன் ஒருவாறு ஊகித்து உணர்ந்திருந்தான்.

ஆயினும் பெண்களும் மனித உள்ளம் படைத்தவர்கள் தான். அதன் காரணமாக அவர்களிடமும் குற்றங் குறைகள் இருக்கத் தான் செய்யும் என்ற எண்ணம் மட்டும் அவனுக்கு எந்த காலுமே எழுந்ததில்லை. காரணம், பெண்களைத் தெய்வமாக நினைத்து விட்டபின் இத்தகைய எண்ணங்களுக்கு இருதயத்தில் இடமளிப்பது நியாயமில்லை தானே? கீழ்ச் சாதிப் பெண்கள், தொழிலாளர் பெண்மணிகள், வேலை வெட்டி செய்து வயிறு வளர்க்கும் பெண்மணிகள் இவர்களெல்லாம் நெறி தவறி நடந்து விட்டார்கள் என்றால் அதற்கு ஒரு காரணம் இல்லாமல் இராது என்பது அவன் திடமான அபிப்பிராயம். அதனால் அவர்கள் மன்னிப்புக்குப் பாத்திரமானவர்களே என்றும் அவன் முடிவு கட்டி வைத்திருந்தான். குறைந்த வருவாயைக் கொண்டு அவர்கள் தங்கள் வாழ்க்கையை ஒரு ஒழுங்கு முறையுடன் நடத்த முடியாமல் திண்டாடுவதுதான் அதற்குக் காரணம் என்பது அவன் கண்டு பிடித்து வைத்திருந்த காரணம். ஆனால் கல்வி கேள்விகளில் சிறந்த, நாகரிகத்தில் ஊறித் திளைத்த, பணத்தில் புரளும் பெண்மணிகளின் விஷயத்தில் யாராவது இம்மாதிரி சொன்னால் வேண்டுமென்று கதை கட்டிவிட்டதாகவே எண்ணுவான். யார் என்ன சொன்னாலும் நம்ப மாட்டான். அப்படிச் சொல்பவர்களைத் தன் வாதத்தினால் தோல்வியுறச் செய்து விட்டுத்தான் மறு காரியம் பார்ப்பான்.

அவன் மீதோ பதினையாயிரம் ரூபாய் களவாடி விட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. ஏறக்குறைய அவன் வயதை ஒத்த ஒரு பெண்மணி — அதுவும் பண்பும் பணமும் ஒருங்கே அமையப் பெற்ற பெண்மணி, குற்றவாளி என்று கருதப்படும் அவனைக் காதலித்தாள். இது எங்கேயாவது நடக்கக் கூடிய காரியமா? இதை எண்ணிப் பார்த்த அவனுக்கு இவ்விரண்டு மாறுபட்ட எண்ணங்களும் ஒன்றையொன்று மோதி மேவி மூளையைச் சம்மட்டி கொண்டு அடிப்பதுபோல் தோன்றின. எதுவுமே சரியென்று தோன்றாமல் திகைத்த அவன் பித்தனைப் போல் மறுபடியும் பலத்த யோசனையில் ஆழ்ந்து விட்டான்.

"உங்களுக்கு இப்பொழுது உடம்பு சரியில்லை என்று தோன்றுகிறது. நீங்கள் எப்பொழுதும் இருக்கிறாற்போல் இல்லை. என்ன, நான் சொல்வது சரிதானே?" என்று கேட்டாள் விஜயலக்ஷ்மி. அந்தக் கேள்வியைக் கேட்டு முடிப்பதற்குமுன்பாகவே ஜகதீஷின் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள், ஜுரம் இருக்கிறதா இறங்கி யிருக்கிறதா என்று பார்ப்பவளைப் போல். அவள்



"இந்தப் பூசணிக்காய் அழுக ஆரம்பிச்சுடுத்து. என்ன செய்யலாமுங்க?"

"எருமை மாட்டுக்குப் போடு!"

"எருமை மாடு சாப்பிட மாட்டேன்கிறதுங்க! அதனால்தான் உங்களிடம் திருப்பிக் கொண்டு வந்துட்டேனுங்க!"

தன் கையைப் பிடித்துக் கொள்ளவே, ஜகதீஷுக்கு மயிர் சிலிர்த்தது. அதைக் கண்ணுற்ற விஜயலக்ஷ்மி இலேசாக இளநகை புரிந்தாள். பிறகு தன் பக்கத்தில் கிடந்த கம்பளிச் சால்வையை எடுத்து ஜகதீஷிடம் கொடுத்து, "உங்களுக்குக் கார் போகும் வேகத்தில் அதிகமாகக் குளிருவதாகத் தோன்றுகிறது. இந்தாருங்கள்! இந்தப் போர்வையை வேண்டுமானால் போர்த்திக் கொள்ளுங்கள்!" என்றாள்.

மோட்டார் இருபதாம் நூற்றாண்டின் யந்திரம்தான். இருந்தாலும் மனிதர்களின் மனோபாவங்களைப் புரிந்து கொள்ளும் திறன் அதற்கு எங்கே இருக்கிறது? அது தனக்கு அளிக்கப்பட்ட வேலையைச் சரிவரச் செய்வதில்தானே கண்ணா யிருக்கிறது? மானிட உள்ளத்தின் சிறிய பெரிய பலவீனங்களைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் மோட்டார் தன்பாட்டுக்கு முன்னேறிக் கொண்டிருந்தது. அதில் உட்கார்ந்திருந்தவர்களோ உணர்ச்சி வசப்பட்டு என்ன செய்வது என்று புரியாமல் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய சிரமத்தை, மற்றவர் மனத்தைப் புரிந்து கொள்ளும் திறன் அற்ற அந்த மோட்டார் ஒரு சிரமமாக மதித்தால் தானே?

பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே அது நகரத்தைக் கடந்து வெகு தூரம் வந்துவிட்டது. அடுத்த சில நிமிஷங்களுக்கெல்லாம் ஆற்றங் கரையையும் அடைந்தது. திடீரென்று டிரைவர் காரின் வேகத்தைக் குறைத்து, "ஏன், அம்மா! வண்டியை எங்கே நிறுத்தட்டும்?" என்று கேட்டான்.

விஜயலக்ஷ்மியோ டிரைவர், மோட்டார் ஆகியவற்றின் நினைவை யொழித்துத் தன்னை மறந்த நிலையில் உட்கார்ந்திருந்தாள். டிரைவரின் கேள்வியைக் கேட்ட பின்தான் அவளுக்குச் சுய நினைவு வந்தது. "போதும், இங்கேயே நிறுத்து. — ஜகதீஷ்! இறங்கி

## 1. வள்ளல் கீதம்
## 2. ஆத்மாஞ்சலி

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய உயிர்க்கருணை நிரம்பிய உள்ளத்தினரான வள்ளலார் ராமலிங்க சுவாமிகளிடம் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டு பக்திச் சுவை கனி சொட்டச் சொட்ட இயற்றப்பட்ட கீர்த்தனைகள் அடங்கியிருக்கின்றன, ''வள்ளல் கீதம்'' என்னும் சிறு நூலில். மேற்படி கீர்த்தனைகள் தமிழின் இனிமைக்கு எடுத்துக் காட்டாய் இலங்குகின்றன. விலை: அணு 4.

அமைதியை நாடும் உள்ளத்துக்கு, இறைவனின் அருட் பேரொளியைக் காட்டிச் சாந்தியளிக்கும் பக்தி உணர்வூட்டும் பாடல்களைக் கொண்டு ''ஆத்மாஞ்சலி'' வெளியாகியிருக்கிறது.

''ஓங்காரப் பொன்மலையில்
உன்னதமாய் நானமர்ந்தே
ஆங்காரந் தவிர்த்துன்றன்
அருட்புகழைப் பாடேனோ''

என்று படிக்கும்போது உள்ளம் கனிந்து உருகுகிறது. விலை: அணு 6.

இயற்றியவர்: இசைப்பாவலர் என். எஸ். சிதம்பரம்; வெளியிட்டவர்: திரு. சா. பெரியசாமி, வள்ளல் நிலையம், ஏகிரிமங்கலம், சீராத்தோப்பு, திருச்சிராப்பள்ளி.

வாருங்கள். ஆற்றங்கரையோடு நாம் கொஞ்ச தூரம் உலாவப் போய் வருவோம்!'' என்றான்.

ஜகதீஷுக்கோ அங்கிருந்து எங்கேயாவது எப்படியாவது ஓடியாக வேண்டும். ஆனால் எங்கே ஓடுவது என்பதுதான் அவனுக்குப் புரியவில்லை. அதற்கு நேர் மாறாக விஜயலக்ஷ்மிக்கு அவனுடன் சிறிது நேரமாவது ஆற்றங்கரையில் ஆனந்தமாக உலாவ வேண்டும் என்று ஆசை.

தாம்பத்திய உறவு என்றால் அதற்கு மன ஒற்றுமை தேவை. அதனால்தான் ஆன்றோர்கள் திருமண காலத்தில் மனமொத்து வாழ்வீர்களாக என்று தம்பதிகளை ஆசீர்வதிக்கிறார்கள். ஆனால் இந்த உலகத்தில் எத்தனை தம்பதிகள் அப்படி மனமொத்து வாழ்கிறார்கள் என்பதுதான் கேள்வி. விஜயலக்ஷ்மியின் இல்லற வாழ்வு இன்பம் தோய்ந்ததாகத் தோன்றவில்லை. கணவன் - மனைவிக்கிடையே பாலுக்கும் மதுவுக்கும் உள்ள வேறுபாடு தென்பட்டால் இன்பம் எங்கிருந்து வரும்? அதனால் சாரமின்றிச் சப்பிட்டுப் போன தன் வாழ்க்கையை எண்ணி அவள் மனம் குமைந்தாள். போதாக் குறைக்குக் கோகிலாவும் ஜகதீஷும் நடத்தும் இன்பகரமான இல்வாழ்க்கையைக் காண நேர்ந்த பொழுது, தன் வாழ்க்கையையும் கோகிலாவின் வாழ்க்கையையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்ட பொழுது, அவளுக்குத் தன் வாழ்க்கையினிடத்தில் பயங்கரமான அதிருப்தி தோன்றியது. 'நம் வாழ்க்கை என்ன வாழ்க்கை? என்ன வாழ்வு நமக்கு வேண்டிக் கிடக்கிறது?' என்றெல்லாம் அலுத்துச் சலித்துக் கொண்டாள்.

கோகிலாவுக்குக் கிடைத்த கணவனுக்கோ வாழ்க்கையில் எந்தக் கோணங்களிலிருந்து பார்த்தாலும் வெற்றி கிட்டவில்லை. அப்படி இருந்தும் அவள் அவனிடம் உயிரையே வைத்திருந்தாள். ஆனால் விஜயலக்ஷ்மியின் கணவரோ?—எடுத்த காரியம் யாவினும் வெற்றி கண்டு வந்தார். தோல்வி என்பதையே அவர் காணவில்லை. அவர் தொட்டது துலங்கி வந்தது. அத்தனையிருந்தும் அவளுக்கு அவரைப் பிடிக்கவில்லை. அவரைக் கண்டு விட்டாலே அவளிடம் இருக்கும் கொஞ்ச நஞ்ச உற்சாகமும் இருந்த இடம் தெரியாமல் ஓடி ஒளிந்து வந்தது.


எனக்கு ஏன் அத்தகைய கணவர் வாய்க்கவில்லை? நான் என்ன, காதலுக்காக உயிரை விடும் காதலியாக இருக்க மாட்டேனா?—இத்தகைய பல கேள்விகள் கோகிலா - ஜகதீஷ் ஜோடியைக் காணும் பொழுது விஜயலக்ஷ்மியின் உள்ளத்தில் உதிக்கும். அவர்களுடைய தாம்பத்திய வாழ்க்கை அவளுக்கு அணை கோல முடியாத ஆனந்தத்தையும் அளிக்கும்; அடக்க முடியாத அங்கலாய்ப்பையும் உண்டாக்கும். எனவே, பொறுமை தானாமல் அவள் மனம் பொருமுவாள். ஆனால் பாரதியப் பண்பில் ஊறிய அவளது உள்ளம், 'கணவனைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் அன்னிய ஆடவர்கள். அவர்களை மனத்தினால் ஸ்மரிப்பதுகூட மகா பாவம். சமூகம் அதை மன்னிக்க முடியாத குற்றமாகவே தான் கருதும்!' என்று அறிவுறுத்தியது; எச்சரித்தது. ஆயினும் என்ன பயன்? அவற்றுள் எல்லாவற்றுக்கும் மேலாகத் தலை தூக்கி நின்ற இன்பம் காண வேண்டும் என்ற இன உணர்ச்சி அவளுக்குத் தீராத தொல்லையையும் தவிர்க்க முடியாத மன வேதனையையும்தான் அளித்தது. அதனால் 'இப் பண்பைப் பின்பற்றுவதனால் நான் என்ன சுகத்தைக் கண்டு விட்டேன்? அல்லது எந்தத் திருப்தியைத்தான் கண்டு விட்டேன்? எனக்கு வாழ்க்கையில் அதிருப்தி ஏற்படுமானால் அந்தப் பாவம் யாரைச் சாரும்?' என்றெல்லாம் எதிர்க் கேள்விகள் கேட்டு அவள் தன் மனத்தைத் தானே வருத்திக் கொள்வாள்; வாட்டிக் கொள்வாள்.

ஆயினும் அவளுடைய உள்ளத்தில் ஊறியிருந்த பண்புக்குத்தான் வெகு நாட்கள் வரை வெற்றி கிட்டி வந்தது. லால்ஜியைச் சகலவிதமான ரூபலாவண்யங்களுக்கு இருப்பிடமாகவும் உலகத்தில் உள்ள எல்லா நற்குணங்களுக்கும் உறைவிடமாகவும் கருதி விஜயலக்ஷ்மி தன் உள்ளத்தில் குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருந்த இன்ப உணர்ச்சியை அடக்கித் திருப்திப் படுத்த முயன்று கொண்டிருந்தாள். அதற்காக

ஜகதீஷைப் பார்ப்பதையும் ஜகதீஷைப் பற்றிச் சிந்திப்பதையும் கூட அவள் விட்டு ஒழித்தாள். அதுவும் எப்பொழுது? ஜகதீஷ் நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையான மறுநாள் முதற்கொண்டு! அவள் அவன் வீட்டுக் குத்துச் செங்கல் ஏறுவதையே நிறுத்திக் கொண்டாள். ஆனால் பண்போடு பழகத் தெரிந்த பக்கத்து வீட்டுக்காரி என்ற முறையில் அடிக்கடி அவனது உடல் நலத்தைப் பற்றிக் கேட்டறிய மட்டும் தவறவில்லை. சில சமயம் ஆள் அனுப்பி விசாரித்து வரச் சொல்லுவாள்; சில சமயம் கோகிலாவையே நேரில் கண்டு கேட்டு அறிவாள்.

அவள் ஜகதீஷை மறக்க முயன்றது என்னவோ உண்மைதான். ஆனால் மறக்கத் தான் முடியவில்லை. கோகிலாவும் ஜகதீஷும் அன்று அந்தரங்கமாக அமர்ந்திருந்த பொழுது கண்ட காட்சி அவள் மனத்தில் அழியாச் சித்திரமாகப் பதிந்து விட்டது. அடிக்கடி அந்த நினைவு வரவே, அவள் உள்ளம் அலை பாய்ந்தது; இன்ப வேதனையினால் ஏங்கித் தவித்தது. நற்குணங்கள் நிறைந்த குடித்தனப் பெண் தன் உள்ளத்தைச் சலிய விடலாமா? எனவே, உந்தித் தள்ளிய உணர்ச்சிகளையும் மன வெழுச்சிகளையும் தன்னால் இயன்றவரை சமனப்படுத்தி வெற்றி காணத்தான் முயன்றாள். அந்நேரத்துக்கு அவளுக்கு வெற்றியும் கிடைத்தது.

ஆனால் சிறிது காலத்துக்குள்ளேயே நிலை பெற்று நின்றிருந்த அவளுடைய மனத்தின் அஸ்திவாரம் மறுபடியும் முன்போலவே ஆட்டம் கொடுக்கத் தொடங்கி விட்டது.







பொதுவாகக் கிளர்ச்சிக்கே வேகம் அதிகம். அதுவும் தாழ்ந்தோர் சமூகம் ஒரு கிளர்ச்சியில் இறங்கினால் கேட்கவும் வேண்டுமா? ஆனால் அவர்களுடைய அந்தக் கிளர்ச்சிகளெல்லாம் கூட இன்ப உணர்ச்சி காரணமாக மூளும் கிளர்ச்சிக்கு எதிரே மூச்சுப் பிடித்து நிற்க முடியாது. இன்ப உணர்ச்சியின் கிளர்ச்சிக்கு வேகம் அத்தனை அதிகம். உலகத்தை எரித்தே தீருவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு உள்ளூறக் குமுறிக் கொந்தளித்துக் கனிந்து கொண்டிருக்கும் எரிமலையின் வாயை மூடி போட்டு மூடி, அதனால் ஏற்படும் பேராபத்தினின்று தப்புவதற்கான முயற்சி இந்த உலகத்தில் இதுகாறும் நடந்ததில்லை. அப்படியே நடந்திருந்தாலும் அது இன்றுவரை வெற்றி கண்டதில்லை. எரிமலைக்குள் குமைந்து கொண்டிருக்கும் தீக்குழம்பிடமிருந்து தப்ப வேண்டுமானால், அதற்கான காவு கொடுத்த பின்தான் முடியும். அதேபோல் இன்ப உணர்ச்சி காரணமாக எழும் மனவெழுச்சியிடமிருந்து விடுதலை பெறவேண்டுமானால், அவ்வுணர்ச்சிக்குத் தீனி போட்டுத் திருப்திப்படுத்தினால்தான் முடியும். இதைத் தவிர அதனிடமிருந்து தப்புவதற்கு வேறு வழி கிடையாது. இன்ப உணர்ச்சியை அதற்கு உகந்த முறையில் திருப்திப்படுத்தவில்லையென்றால், அது பண்புகளைப் பொசுக்கி விடும்; கலாசாரங்களைக் கொளுத்தி விடும்; வாழ்வின் நெறிமுறைகளை நாசமாக்கிவிடும். இல்லாவிட்டால் வாழ்க்கையையே அதற்குப் பலி கொடுத்துத் தகிக்கும் தியாகவோ அல்லது கனிந்து தணிந்த சாம்பராகவோ செய்து விட்டுத்தான் மறு காரியம் பார்க்கும். இதனால் என்ன தெரிகிறது? இன்ப உணர்ச்சியை எதிர்ப்பது புண்ணியமாகாது என்பதுதானே? இன்ப உணர்ச்சிக்கு எங்கே பரிபூரண திருப்தி ஏற்படுகிறதோ, அங்கேதான் மகா புண்ணியம் தோன்றுகிறது. அந்த இன்ப உணர்ச்சியை அடக்க எங்கே முயற்சிக்கிறார்களோ, அங்கே நூற்றுக் கணக்கான பாவங்கள் துயரம் தரக் காத்திருக்கின்றன. இது அநுபவ பூர்வமான உண்மை என்பதை யாரும் மறுக்க முடியாது.

லால்ஜியை மகிழ்விக்க விஜயலக்ஷ்மி எத்தனைக்கெத்தனை முயன்றாளோ, அத்தனைக்கத்தனை அவளுக்கு அவரிடம் இன்பம் காண வேண்டும் என்ற துடிப்பு பெருகியது; இன்ப வேதனை மலையாக வளர்ந்தது. கணவன் மனைவி யென்றால், அவர்களிடையே வயது ஒற்றுமை வேண்டும். வயது ஒற்றுமை மட்டும் இருந்தால் போதாது. குண ஒற்றுமையும் வேண்டும். அதோடு மனப்போக்கும் ஒருவருக்கொருவர் ஒத்ததாக அமைய வேண்டும். அப்பொழுதுதான் இன்ப உணர்ச்சியும் எடை போட்டாற் போல் அமையும். இவற்றில் ஏதாவது வேறுபட்டால் அதற்கேற்றவாறு இன்ப உணர்ச்சியும் வேறுபாடு அடையும். அதனால்

தான் மணத்துக்கு முன் மனப் பொருத்தம் பார்க்க வேண்டும் என்கிறார்கள்.

வேறுபட்ட உணர்ச்சிகள் ஒன்றாகக் கூடி வாழ முயலலாம். ஆனால் அவற்றுக்கு வெற்றி கிடைக்குமா என்பதுதான் சந்தேகம். ஒன்று படும் முயற்சியில் அவ்வுணர்ச்சிகள் ஒன்றையொன்று கட்டிப் புரண்டு கொண்டு கடைசியில் அலுத்துச் சலித்து ஆய்ந்து ஓய்ந்து போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

காதற் பசி கொண்ட விஜயலக்ஷ்மிக்கு இடையறாத காதல் இன்பத்தை அளித்து மகிழ்விக்கும் ஆற்றல் லால்ஜி ஸேட்டிடம் இல்லை. அல்லது அவன் அளிக்கும் காதல் இன்பத்தைப் பருகி மகிழும் மனப் போக்கும் அவருக்கு இல்லை. அதன் பலனாக அவள் எத்தனைக் கெத்தனை ஜகதீஷை மறக்க முயன்றாளோ, அத்தனைக்கத்தனை அதிகமாக அவன் அவளுடைய நினைவுத் திரையில் இடம் பெறலானான். நாளடைவில் அவள் லால்ஜியிடம் கொண்டிருந்த அன்பும் ஆதரவும் குறைந்தன. அவளைப் பொருத்த வரை அவர் அந்நிய ஆடவராகவே ஆகி விட்டார். அவர் ஸ்தானத்தை ஜகதீஷ் அபகரித்துக் கொண்டான். அதன்பலனாக அவள் மனம் அவனிடம் சொந்தம் பாராட்டத் தொடங்கியது. அவள் லால்ஜி ஸேட்டை அடியோடு மறந்தாள். அவள் மனக் கண்ணெதிரே ஜகதீஷின் சுந்தர வடிவமே சதா சர்வ காலமும் நின்றது.

இத்தகைய இன்ப வேதனையில் ஆழ்ந்து விட்ட விஜயலக்ஷ்மி தன் மனத் துயரை மாற்ற எண்ணி இரண்டு மூன்று நாட்களாக மாலை வேளைகளில் வெளியே உலாவப் போய் வரத் தொடங்கியிருந்தாள். லால்ஜி ஸேட்டுக்கோ அரசாங்க சபை அலுவல்களில் அதிக நாட்டம் விழுந்து விட்டது. எனவே, எப்பொழுது பார்த்தாலும் அவர் அதே நினைவாக இருக்கலானார். ஏற்கெனவேயே அவருக்கு விஜயலக்ஷ்மியைப் பற்றிய நினைவு எழுவது அதிகம். இந்த வேலை வந்து விட்ட பின் கேட்க வேறு வேண்டுமா?

ஒரு காரியத்தில் ஈடுபாடு அதிகமாகக் காண்பிக்கத் தொடங்கி விட்டால் அப்புறம் அதிலேயே மனம் நாட்டம்கொள்வது வழக்கமாகி விடுகிறது. அரசாங்க சபைத் தேர்தல் சம்பந்தமாகப் பிறரைப் போய்ப் பார்த்துப் பார்த்துப் பழகிவிட்ட அவருக்கு அப்பழக்கம் பிடித்துக் [illegible]




பத்து நிமிஷங்களுக்குமுன் சாதாரணத் தூற்றலாக ஆரம்பித்தது, அவ்வளவு சீக்கிரம் பலத்த மழையாக மாறிவிடும் என்று நாங்கள் ஒருவருமே நினைக்கவில்லை. பஸ்ஸில் டிரைவர், கண்டக்டர் தவிர, இரண்டு மூன்று பிரயாணிகள்தான் மூலைக்கொருவராக உட்கார்ந்திருந்தோம். கண்டக்டர் தன் ஆசனத்தை விட்டு எழுந்து வந்து மழைச் சாரல் அடிக்காமல் இடது பக்கமுள்ள படுதாக்களை அவிழ்த்து விட்டான். விநாடிக்கு விநாடி காரின்மேல் விழும் மழைத் துளிகளின் ஒலி பெரிதாகிக் கொண்டு வந்தது. மின்னலும் இடியும் வேறு சேர்ந்து கொண்டிருந்தன.

கைக் கடிகாரத்தைப் பார்த்தேன். மணி ஒன்பது முப்பத்தைந்தாகி யிருந்தது. ஒன்பதே கால் மணிக்கு நாங்குநேரியை விட்டுப் புறப்பட்ட போது நிர்மலமாக இருந்த வானம் இப்போது இருள் கவ்வி இருந்தது.

"நாகர்கோவிலுக்குப் போய்ச் சேர மணி பன்னிரண்டு அடித்து விடும் போலிருக்கிறதே!" என்றார் ஒரு கிராமாந்திரப் பிரயாணி. டிரைவரோ கண்டக்டரோ அந்த வார்த்தைகளைக் காதில் போட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை!

டர் டர் என்ற சப்தம் காரின் முன் இயந்திரப் பகுதியிலிருந்து எழுந்தது. டிரைவர் கொஞ்சம் வேகத்தைக் குறைத்து ஓட்ட ஆரம்பித்தான். மீண்டும் சப்தம் எழுந்தது. இப்போது வேகம் தானாகவே குறைந்து போயிருந்தது. கடைசியில் ஒரு பெரிய 'டப்' சத்தத்துடன் பஸ் நின்று விட்டது. ஆனால் அந்த பஸ்ஸையோ, அதனுள்ளிருக்கும் பிரயாணிகளைப் பற்றியோ கொஞ்சம் கூடக் கவலைப் படாமல் வருண பகவான் மழையைப் பொழிந்து கொண்டிருந்தார்.

"இந்த எழவு ஓட்டை வண்டியிடமிருந்து நமக்கு என்றைக்குத்தான் விடுதலை கிடைக்கப் போகுதோ!" என்று முணுமுணுத்துக்கொண்டே டிரைவர் தலையில் ஒரு துண்டைப் போட்டுக் கொண்டு கார் ஓரமாகவே இறங்கிப் போய் ரேடியேட்டரைத் திறந்து 'டார்ச்' விளக்கினால் உள்ளே எதையோ பார்த்தான். அப்போது வீசிய மின்னல் ஒளியில் அவன் உதட்டைப் பிதுக்கியது நன்றாகத் தெரிந்தது.

'கார் ஓடும் நிலையில் இல்லை. இரவுப் பொழுதை பஸ்ஸிலேயே நடுக் காட்டில் கழித்தாக வேண்டும்' என்பதை அவன் சொல்லாமலே சொல்லி விட்டான். நான் திருவனந்தபுரத்துக்கு ஒரு முக்கிய விஷயமாகச் சென்னையிலிருந்து திருநெல்வேலி வழியாகச் சென்று கொண்டிருந்தேன். வியாபார விஷயம் என்றால் கையில் பணம் இருக்குமல்லவா! ஆகவே, எனக்கு அந்த இரவைப் பஸ்ஸிலேயே கழிக்கப் பயமாக இருந்தது.

"கண்டக்டர்! இந்த இடத்துக்குப் பக்கத்திலே ஏதாவது ஊர் இருக்கிறதா, வயிற்றுக்கு ஏதாவது வழி செய்து கொண்டு இரவுப் பொழுதைக் கழிக்க!" என்று கேட்டேன்.

"இதோ! இடது பக்கமாக நாலு பர்லாங்கு பனங்காட்டுக்குள் நுழைந்து போவீர்களானால் பெருமழுஞ்சி என்னும் கிராமம் இருக்கிறது. ஆனால் இந்த மழையிலே அங்கே போகிறதை விட......" என்று கண்டக்டர் ஆரம்பித்தான். எனக்கு அவன் பதிலைக் கேட்டு அச்சம் உண்டாகவில்லை; அமானுஷ்யமான தைரியமே பிறந்தது.

"பரவாயில்லை! கையில் குடையும் டார்ச் விளக்கும் இருக்கின்றன. ஆகையால் நான் அங்கேயே போய் விடுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே என் சிறிய பெட்டியைக் கையில் இடுக்கிக் கொண்டு பஸ்ஸை விட்டு இறங்கினேன். மின்னல்கள் அந்த ஒற்றையடிப் பாதையை எனக்குத் தெளிவாகக் காண்பித்து உதவின.

ஊர் எல்லையில் ஒரு சிறு கோவில். அதற்கு எதிர்த்தாற் போல் இரட்டை வரிசையான சிறு தெரு. கோவிலை நெருங்கிய போது மணி பத்தரையாகி இருந்தது. மழையும் அநேகமாக விட்டிருந்தது. கோபுர வாசலுக்கு வெகு சமீபத்திலேயே ஒரு வீட்டு வாசலில் மணப்பந்தல் போட்டிருந்தது. அணையும் கட்டத்தில் இரண்டு பெட்ரோமாக்ஸ் விளக்குகள் தொங்கிக் கொண்டிருந்தன. ஆனால் தெருவிலோ மணப் பந்தலிலோ அக்கம் பக்கத்திலோ ஜன நடமாட்டமே இல்லாதது ஆச்சரியத்தை அளித்தது. சின்னஞ் சிறு கிராமம். அந்தப் பெட்ரோமாக்ஸ் விளக்குகளும் இல்லாவிட்டால் அந்தகாரத்தில் எனக்கு ஒன்றுமே புலப்பட்டிருக்காது. ஒரு வேளை, ஊர்வலம், சாப்பாடு எல்லாம் சீக்கிரமே முடிவடைந்து அவரவர்கள் படுக்கைக்குச் சென்று விட்டார்களோ என்று மனத்தைச் சமாதானப்படுத்திக் கொண்டு மணப்பந்தல் போட்டிருந்த வீட்டுக்கு எதிர்த்தாற்போலுள்ள வரிசையில் இரண்டு வீடு தள்ளி ஒரு வீட்டுத் திண்ணையில் போய் அமர்ந்தேன். என் செருப்புச் சத்தமும் குடையை மடக்கின சத்தமும் அந்த வீட்டுக்குள்ளிருப்பவர்களுக்கு விழுந்திருக்க வேண்டும். "யாரது!" என்று சற்று அதட்டலான குரலிலே கேட்டுக் கொண்டே ஆஜானபாகுவான ஒருவர் கையில் விளக்குடன் கதவைத் திறந்தார்.

"நான் அயலூர்" என்று ஆரம்பித்து வெகு சுருக்கமாக நான் அங்கு வந்து சேர்ந்த விதத்தைச் சொன்னேன். சொல்லிக் கொண்டே என் பெட்டியிலிருந்து உலர்ந்த துண்டு ஒன்றை எடுத்துத் தலையைத் துவட்டிக் கொண்டேன். அந்த மனிதர் மிகவும் நல்ல சுபாவமுடையவர் போலிருக்கிறது. என்னை ஆடை மாற்றச் செய்து, பசிக்கு வீட்டிலிருந்த பக்ஷணங்களை ஒரு தட்டில் கொண்டு வந்து வைத்தார். மணிபர்சைப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டி அதை உள்ளே வைத்து விட்டு நிம்மதியாகத் திண்ணையில் உட்கார்ந்தேன். அந்த மனிதரும் அமர்ந்தார். மணப் பந்தல் பக்கமாக என்னுடைய பார்வை சென்றது.

ஒரு பெரிய முறுக்குத் துண்டை வாயில் போட்டுக் கொண்டே, "கிராமத்தில் இன்று கல்யாணம் போலிருக்கிறது" என்று பேச்சைத் துவக்கினேன்.

அசுவாரசியமாகச் சூள் கொட்டினார் அந்த மனிதர். "ஆமாம்! இன்றைக்குச் சாயங்காலம் ஏழு மணி வரை அது நடக்கிற கல்யாணமாகத் தானிருந்தது. அப்புறம் அது திடீரென்று நடக்காத கல்யாணமாகி விட்டது" என்றார். கல்யாணத்துக்கு முன் ஏதோ தகராறு ஏற்பட்டு விட்டது போலிருக்கிறது என்று எண்ணினேன். உடனே எனக்கு அதைப் பற்றிய முழு விஷயங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற அடக்க முடியாத அவா எழுந்தது. ஆனால் அதை அப்பட்டமாக வெளிக் காட்டிக் கொள்ளவும் இஷ்டமில்லை. "ரூபாய், நகை, அல்லது பிற விஷயங்களில் ஏதாவது குறுக்கிட்டு விட்டதோ!" என்றேன் நான், பட்டும் படாததுமாக.

அந்த மனிதர் ஆவேசம் வந்தவர்போல் ஆரம்பித்தார். "அந்தக் குழந்தை அப்ஸரஸ் என்றால் அப்ஸரஸ், ஸார்! மேலும் கிருஷ்ணசாமி ரூபாயை ஒரு பொருட்டாகக் கருதாதவன். இருபதாயிரம் கேட்டாலும் விட்டெறிந்து விடுவான். ஆனால் அக்கிரமக்காரப் பிள்ளையாண்டான் அடாப் பழியல்லவா சொல்லத் துணிந்து விட்டான்! அயோக்கியன்!" என்றார். உடனே என்னவோ நினைத்துக் கொண்டவர் போல் உள்ளே போய்க் கூடத்தில் மாட்டியிருந்த ஒரு புகைப் படத்தையும் விளக்கையும் கொண்டு வந்து என் முன் வைத்தார்.

ஓர்வித ஆவலால் உந்தப்பட்ட நான், என் கண்ணாடியைத் துடைத்து மாட்டிக்கொண்டு படத்தை விளக்கின் அருகில் கொண்டு போனேன். நல்ல வெளிச்சம் படத்தில் விழுந்தது. நான் திடுக்கிட்டேன். கண்ணாடியை மீண்டும் துடைத்துப் போட்டுக் கொண்டேன்! என் திகைப்பு இன்னும் அதிகமாகியது. "என்ன சார்! அப்படிப் பார்க்கிறீர்கள்!" என்று அந்த மனிதர் கேட்டார்.

"ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை!" என்று சொல்லிச் சிறிது சமாளித்துக் கொண்டேன். பிறகு, "ஏன் சார்! பிள்ளையாண்டான் பெண்ணைப் பார்த்தபோது திருப்திகரமாக இருக்கிறது என்று தானே சொன்னான்! அப்புறம் தகராறு செய்யக் காரணமென்ன!" என்றேன் நான். என் மனத்திலும் சில சிக்கல்கள் தோன்ற ஆரம்பித்தன.

"அது ஒரு கதை, சார்! பையன் பெண்ணை நேரடியாகப் பார்க்கவில்லை. புகைப் படத்தைப் பார்த்துச் சம்மதத்தைத் தெரிவித்தான். அவனுக்கும் சென்னைதான். இன்று மாலை மாப்பிள்ளை அழைப்பு ஆனபின்தான் இந்தப் புயலும் சூறாவளியும் ஆரம்பமாயின. பெண்ணைப் பார்த்தவுடன் 'இவளைச் சென்னைக் கடற்கரையில் வேறு வாலிபனுடன் அடிக்கடி பார்த்திருக்கிறேன். வேறு ஒருவனின் காதலியாகிய இவளை எப்படி நான் மணக்கச் சம்மதிப்பேன்!' என்று குதித்தான். பரிமளா மயக்கமே போட்டு விழுந்து விட்டாள். தன் தந்தையிடம் இது அபாண்டமென்று கதறினாள். கிருஷ்ணசாமி தங்கள் குடும்பத்தின் கௌரவத்தைப் பற்றிச் சொல்லிக் கெஞ்சினான். சம்பந்திகளும் பிள்ளையாண்டானுடன் சேர்ந்து குதித்தார்கள். வேறு வழியில்லை. கல்யாணம் நின்று போய் விட்டது. சம்பந்திகளெல்லாம் காலை முதல் காரில், அதாவது முகூர்த்தம் நடக்க வேண்டிய வேளையில், சென்னைக்குக் கிளம்பப் போகிறார்கள். பரிமளாவின் கண்ணீர் அருவியாகக் கொட்டுகிறது! கிருஷ்ணசாமி மனமுடைந்து உட்கார்ந்து விட்டான். செலவுக்காக அவன் அஞ்சவில்லை! அபவாதத்துக்காக அஞ்சுகிறான்!" என்றார் அந்த மனிதர், ஒரு நீண்ட பெருமூச்சுடன். அவர் பெண்ணுக்கு நெருங்கிய உறவினராக இருக்க வேண்டும் என்று தோன்றியது.

## தமிழ் இசை மணிமாலை

நாத வடிவாக விளங்கும் ஈசுவரனைக் கீத வடிவில் இசைபாடித் துதித்தல் மிகவும் பொருத்தமானதாகும். அதுவும் தமிழிசையாக இருந்து விட்டால், தமிழர்களின் மகிழ்ச்சிக்குக் கேட்பானேன்! இந்நூலில் ஐம்பத்து நாலு கீர்த்தனைகள் ராக, தாளக் குறிப்புடனும் ஸ்வரத்துடனும் அடங்கி யிருக்கின்றன. கணபதி, சிவபெருமான், முருகன், கண்ணன், கலைமகள் முதலிய எல்லாக் கடவுளர்கள்மீதும் தமிழ்க் கீர்த்தனைகள் இயற்றப் பட்டிருக்கின்றன.

இயற்றியவர்: தமிழ் வித்துவான் தா. மாணிக்க வாசகம் பிள்ளை. இசையமைத்துச் சுரப்படுத்தியவர்: சங்கீத வித்துவான் ரா. ராகவ சர்மா. கிடைக்குமிடம்: தா. மாணிக்கவாசகம் பிள்ளை, தமிழ் வித்துவான், பறக்கை P. O. தென் திருவிதாங்கூர். இலவச வெளியீடு.

"சார்! விதியில் உங்களுக்கு நம்பிக்கை உண்டா!" என்று கேட்டேன், அவரை நோக்கி.

"ஆஹா! தாராளமாக! அதுதான் இன்று மாலை ஊர்ஜிதமாகி விட்டதே! பரிமளாவின் தலைவிதி இப்படி எதிர்பாராத விதமாகப் பரிதாபகரமாக ஆகப்போகிறது என்று கனவிலும் நினைத்தோமா!" என்றார் அவர் விரக்தியுடன்.

"சார்! பாதகமான சூழ்நிலையைப் பற்றி நான் சொல்ல வரவில்லை! சாதகமான சூழ்நிலைகளைப் பற்றி சொல்லுகிறேன். இந்த வேளையில் பஸ் ரிப்பேராகி, வழியை விட்டு நாலு பர்லாங் இருட்டில் நடந்து இங்கு வந்து நான் உட்கார்ந்திருப்பது நிச்சயமாக விதியின் செயல்!" என்றேன். என் வார்த்தைகள் அழுத்தமாய் விழுந்திருக்க வேண்டும். அவர் திடுக்கிட்டார்.

"நீங்கள் என்னிடம் புகைப் படத்தைக் காண்பித்தீர்களே! இதுவும் ஒரு எதிர்பாராத விஷயம்! இத்தனை சிக்கலான முடிச்சுகளையும் அவிழ்க்கும் சாதனம், சார்! இந்தக் கல்யாணம் குறித்த முகூர்த்தத்தில் நிச்சயமாய் நடக்கப் போகிறது. அதற்கு நான் உத்தரவாதம். மணி பன்னிரண்டாகிறது. உடனே கிருஷ்ணசாமியையும், அந்தச் சம்பந்தி ஆசாமியையும், மாப்பிள்ளைப் பிள்ளையாண்டானையும் நான் சந்திக்க ஏற்பாடு பண்ணுங்கள்!" என்றேன்.

அந்த மனிதர் என்னைப் பார்த்த பார்வையிலிருந்து, அவர் என்னை ஒரு பைத்தியம் என்று சந்தேகிக்கிறார் என்று தெரிந்து கொண்டேன்.

"சார்! இந்தப் படத்தை ஏன் அவ்வளவு உற்றுப் பார்க்கிறேனென்று கேட்டீர்களே! காரணம் தெரியுமா! இது என் பெண்ணின் படம்! உங்கள் பரிமளாவுக்கும் என் பெண்ணுக்கும் உள்ள ஒற்றுமையைக் கண்டுதான் வியந்தேன்! போன மாதம் திருவல்லிக்கேணி போட்டோ ஸ்டுடியோக்காரன், புகைப் படங்களை மாற்றிக் கொண்டு வந்த போதே நான் கண்டு பிடித்தேன். அவன் கொண்டு வந்த படங்களில் நெற்றி ஓரத்தில் மச்சமில்லை. என் பெண்ணுக்கு ஒரு சிறு மச்சமுண்டு. அப்போதுதான் அவனும் அடையாளம் தெரியாமல் எங்கள் வீட்டுப் படத்தை வேறு ஒருவருக்குக் கொடுத்ததை ஒப்புக் கொண்டான். பிறகு அவனிடமிருந்த 'நெகட்டிவி'லிருந்து எங்கள் பானுவின் படங்களைத் தயாரித்துக் கொடுத்தான்!....ஆகவே உங்கள் கையில் இருப்பது பானுவின் படம். மச்சம் தெரிகிறதா! நீங்கள் கவனிக்கவில்லை. புகைப் படத்தில் ஏதோ புள்ளி விழுந்து விட்டதென்று நினைத்திருப்பீர்கள். இல்லையா!" என்றேன். படத்தைக் கவனித்த அவர் முகத்தில் வியப்புக் குறிகள் தோன்றின!

"அப்படியானால் உங்கள் பெண்ணுக்கு இன்னும்......" என்று நீட்டினார் அவர்.

"என் பெண்ணுக்குக் கல்யாணமாகி ஆறு மாதமாகி விட்டது! என் மாப்பிள்ளைக்குச் சென்னையிலேதான் வேலை! பானுவும் அவள் கணவனும் அடாது மழை பெய்தாலும் விடாது கடற்கரைக்குப் போய் வருவார்கள்! அவர்கள் இருவரையும் பார்த்து விட்டுத்தான் பையன் மனத்தைக் குழப்பிக் கொண்டிருக்கிறான்!" என்றேன்.

அவர் ஆவேசம் வந்தவர் போல் என்னைக் கட்டிக்கொண்டார்! "சமயசஞ்சீவி ஐயா!" என்று சொல்லிக் கொண்டே என்னைக் கரகர வென்று பிடித்திழுத்துக் கொண்டு கிருஷ்ணசாமியின் வீட்டுக்குப் போனார்.

அரை மணி நேரத்தில் கசமுச வென்று எல்லோரும் எழுந்து வந்து விட்டார்கள். என்னைக் கூட்டிக் கொண்டு போன மூத்தண்ணா கிருஷ்ணசாமியிடம் விஷயத்தைச் சாங்கோபாங்கமாகச் சொன்னார். கிருஷ்ணசாமி என்னைக் கையெடுத்துக் கும்பிட்டார். தம் பெண்ணின் புகைப் படமும் சென்னையில் எடுத்ததுதான் என்பதையும் சொன்னார். திருவல்லிக்கேணி போட்டோ ஸ்டுடியோக்காரன்தான் அதையும் எடுத்திருந்தான். நாங்கள் எல்லோருமாகச் சம்பந்திகள் இறங்கி இருந்த வீட்டுக்குப் போனோம். மூட்டைகளைக் கட்டுவதில் மும்முரமாக இருந்த சம்பந்தி வெறுப்புடன் வெளியே வந்தார். கிருஷ்ணசாமி விஷயத்தை எடுத்துச் சொன்னார்.

"இது என்ன புது நாடகம்! எங்களை ஏமாற்ற இது ஒரு சூழ்ச்சியா! இவரை எங்கு பிடித்தீர்கள்! இன்னும் மூன்று மணி நேரப் பொழுதுதான்! நாங்கள் மானமாக ஊர் திரும்புகிறோம்! அப்புறம் உங்கள் நாடகத்தைத் தொடரலாம்" என்றார் சம்பந்தி. அதே சமயத்தில் அவர் பையனும் வந்து சேர்ந்தான்.

"சார்! இது நாடகமுமில்லை! நாட்டியமுமில்லை! உங்கள் சந்தேகத்தைப் போக்கத்தான் எதிர்பாராத விதமாக நான் வந்து சேர்ந்தேன்! இரண்டு நிமிஷங்கள் போதும்! இது சூழ்ச்சியில்லை என்று நிரூபிக்கிறேன்!......மூத்தண்ணா சார்! என் பெட்டியைத் தயவுசெய்து கொண்டு வருகிறீர்களா!" என்றேன்.

இரண்டாவது நிமிஷத்தில் என் பெட்டி வந்து சேர்ந்தது. அதிலிருந்த மணி பர்சை எடுத்தேன். மணி பர்சுக்குள்ளிருந்த ஒரு சிறு புகைப் படத்தைக் கையில் எடுத்துக் கொண்டேன். அதில் ஒரு பகுதியை மறைத்துக் கொண்டு! "இந்தாங்கோ! இந்த ஆண்பிள்ளைதானா பரிமளாவுடன் சென்னைக் கடற்கரையில் சுற்றியது! நன்றாகப் பாருங்கள்!" என்றேன். மாப்பிள்ளை பரமேசுவரன் அருகில் வந்தான். மூத்தண்ணா விளக்கைத் தூக்கிப் பிடித்தார்! பரமேசுவரன் உற்றுப் பார்த்து விட்டு "ஆமாம்! அவனேதான்!" என்றான். நான் மறைத்திருந்த பக்கத்தைத் திறந்தேன்!


"இதோ என் பெண் பானுவும் அவள் கணவனும்! பானுவின் நெற்றியைப் பார்! இப்போது புரிகிறதா!" என்று கேட்டேன். பரமேசுவரன் தன் தவறுதலை உணர்ந்து கொண்டான். கிருஷ்ணசாமியின் கைகளைப் பிடித்துக் கொண்டு "என்னை மன்னித்து விடுங்கள். என் தவறுதலுக்கு, இந்த அசாதாரண ஒற்றுமையும் ஓர் வகையில் பொறுப்புத்தான்!" என்றான்.

அதை ஆமோதிப்பவர் போல் சம்பந்தி தலையை ஆட்டினார். சிலர் போய் அணைந்திருந்த பெட்ரோமாக்ஸ் விளக்குகளை ஏற்றினார்கள்! மேளக்காரனைக் கூப்பிடச் சிலர் போனார்கள். "விரதத்துக்கு ஏற்பாடு நடக்கட்டும்" என்றார் ஒரு வயோதிகர். கால் மணி நேரத்தில் கல்யாணக் களை மீண்டும் பரவியது. கிருஷ்ணசாமி எனக்கு நன்றி தெரிவிக்க வார்த்தைகள் அகப்படாமல் தவித்தார். நான் அந்த ஓட்டை பஸ்ஸுக்கு நன்றி தெரிவிக்க வார்த்தைகள் அகப்படாமல் திணறினேன். அது சரியான சமயத்தில் ரிப்பேராகாமல் போனால், நான் இந்தக் கிராமம் தேடி வந்திருப்பேனா!

என்னை ஆமோதிப்பது போல் எதிர்வீட்டுத் திண்ணையிலிருந்து 'டும், டும்' என்று தவுல் சப்தம் எழுந்தது. அதைத் தொடர்ந்து பூபாள ஒலி நாதஸ்வரத்திலிருந்து கிளம்பியது. நடக்க முடியாது என்று கைவிடப்பட்ட கல்யாணமும் நடக்கும் கல்யாணமாக மாறியது!


மற்ற எல்லா தேயிலைகளையும் விட அதிகமாக
விற்பனையாகும் தேயிலை !
ப்ருக் பாண்டின் விற்பனை வெற்றிக்கு காரணம் என்னவெனில் அது எவ்வளவு புத்தம்புதியதாக இருக்கிறது. கலப்பற்று சுத்தமானதாகவும் இருக்கிறது. தோட்டத்திலிருந்து கடைகளுக்கு அதிவேகமாக அனுப்பப்படுவதாலேயே ப்ருக் பாண்ட் தேயிலை எப்பொழுதும் புத்தம்புதியதாக இருக்கிறது. காற்றுப் புகாமல் கன்ருக பாக் செய்யப்பட்டிருப்பதால் ப்ருக் பாண்ட் தேயிலை மாசு மருவற்று, கலப்பற்று சுத்தமாக இருக்கிறது.
யோசித்து வாங்குங்கள்!
செலவைக் குறையுங்கள்!
ஒவ்வொரு ப்ருக் பாண்ட் பாக்கெட்டிலும் அளவில் அதிகமாகவும் ருசியில் மிகுந்ததுமான தேநீர் கிடைக்கிறது.
FINEST TEA
Brooke Bond Tea
KORA BRAND
Tea Dust
மற்றெந்த தேயிலையையும் விட
ப்ருக் பாண்ட்
தேயிலையை
அதிகப்படியான ஜனங்கள்
வாங்குகிருர்கள்

# பிரஷால் தேய்ப்பதால்
# கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் ஈறுகளைப் பலப்படுத்துகிறது




## இதோ! குளோரோபில்* டூத் பேஸ்டின் பூரண நன்மைகள் அடங்கிய புதிய, விசேஷ கால்கேட் சூத்திரம்!

குளோரோபிலின் நன்மைகளை பத்திரமான, ரஞ்சிதமான உருவில் தருகிறது கால்கேட் சூத்திரம்....கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் துரிதமாக, திருத்தமாகச் செயலாற்றுகிறது....அது தரும் சுத்தம் மணிக்கணக்காக நீடிக்கும்!


...பலமான ஈறுகள் புதிய, இனிய சுவாசம் பெற...சாப்பிட்டவுடன் கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை உபயோகிக்கவும். சிறந்த பற்பசைகளைத் தயாரிக்கும் உலகிலேயே மிகப் பெரிய ஸ்தாபனத்தின் உன்னத குளோரோபில் டூத் பேஸ்ட்.

**பாக்டீரியாவை ஒழிக்கிறது!**

எனுமலை அறிக்கும் தீய அமிலங்களையும் ... அவற்றைத் தோற்றுவிக்கும் பாக்டீரியாவையும் குறைக்கிறது.

**ஈறுகளைப் பலப்படுத்துகிறது!**

குளோரோபிலின் நன்மைகளைப் பயன்படுத்தி, ஈறுகளைப் பலப்படுத்த கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் உதவுகிறது.




* நீரில் கரையும் குளோரோபிலின்ஸ் சேர்ந்தது

CTPA/6/5

## புதிய பச்சை டூத்பேஸ்ட் பரீட்சித்து உத்தரவாதம் அளிப்பது கால்கேட்

# பள்ளிச் சிறுவர்களுக்கு அவதி!

எங்கள் ஊர் அடச்சாணி கிராமம். திருநெல்வேலி ஜில்லா, அம்பா சமுத்திரம் தாலூக்காவில், நாலா புறமும் குன்றுகளால் சூழப்பட்டுள்ளது. இது சுமார் ஐந்து சதுர மைல் பரப்புடையது. ஊரின் ஜனத்தொகை கிட்டத் தட்ட 3000 ஆகும். இங்கு பஞ்சாயத்து முறை வெகு காலமாகவே இயங்கி வருகிறது. இருந்த போதிலும் அடச்சாணியில் பஞ்சாயத்துச் சபை கடந்த இரண்டு மூன்று வருட காலமாகத்தான் பிராபல்யமடைந்து வருகிறது.

எங்கள் ஊர்ப் பஞ்சாயத்துக்குக் கடந்த, 1953 பிப்ரவரியில் கடும் போட்டிக் கிடையே தலைவர் தேர்தல் பொதுஜன வாக்கெடுப்பு முறையில் நடைபெற்றது. இப்பஞ்சாயத்து ஆறு அங்கத்தினர்களை யுடையது. இதில் வெவ்வேறு வகை மக்களின் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கின்றனர். இதில் ஒருவர் ஹரிஜனராவார். ஒவ்வொரு கூட்டத்துக்கும் அங்கத்தினர்கள் தவறாது வந்து தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றுகிறார்கள். மாதம் மூன்று முறை தலைவரும் அங்கத்தினர்களும் கூடிக் கிராம முன்னேற்றத்துக் கானவைகளை முடிவு செய்கின்றனர். இதேபோல் தலைவரும் அங்கத்தினர்களும் ஒற்றுமையுடன் கிராம முன்னேற்ற ஆக்க வேலைகளில் ஈடுபடுவார்கள் என்று நம்புகிறோம்.

அடச்சாணியில் பஞ்சாயத்துச் சபையினரால் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

ஊரில் மின்சார விளக்கு வசதிகள் ஏற்படுவதற்கு அவர்களின் கூட்டு முயற்சியே காரணமாகும். இதில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய அம்சம் இருபது தெரு விளக்குகள். இதில் ஊருக்கு நடுநாயகமான இடத்தில், பஞ்சாயத்துச் சபைக்கு முன் ஒரு "மெர்க்குரி தீபம்" கம்பீரமாகப் பிரகாசிக்கின்றது.

முன்னால் கட்டப்பட்டிருந்த வாய்க்கால்கள் புதிப்பிக்கப்பட்டுள்ளன. பஞ்சாயத்து அலுவலகத்தின் முன்பாக ரேடியோவும், ஒலி பெருக்கியும் அமைக்கப்பட்டுள்ளன.

முன்னேற்றம் என்று சொல்ல வேண்டுமானால் இவைகளைத்தான் திருப்பித் திருப்பிக் கூற வேண்டி யிருக்கிறது.

வீட்டு வரி, தொழில் வரி, வாகன வரி, லைசென்ஸ் வரி முதலிய புது வரிகளைப் பஞ்சாயத்தார் விதித்திருக்கிறார்கள். இதில் வீட்டு வரி நியாயமற்றதா யுள்ளது. ஏனெனில், வீட்டின் மதிப்பீட்டுக்குத் தக்கவாறு வரி விதிக்க வில்லை. ரூ. 500 பெறுமான வீட்டுக்கு ரூ. 1500 என்று மதித்து அதற்குண்டான வரியை ஏற்படுத்தி யுள்ளனர். இதனால் பெரும்பாலான ஏழை எளியவர்கள் சொல்லொணாத் துயரத்துக்கு ஆளாகி யுள்ளனர். இருந்தாலும் வசூல் முறை இன்னும் செவ்வனே நடைபெற வேண்டும். வசூலிக்கப் பட்ட பணம் பொதுஜன நன்மைக்காகச் சீரிய வழியில் செலவழிக்கப்படுகிறது. வசூலிக்கப்படும் பணம் பொதுநல சேவைக்குப் பற்றாக் குறையாக யிருப்பதால் ஸ்தல ஸ்தாபனத்திலிருந்தோ அல்லது வேறு வகை அரசாங்க உதவியினாலோ அடச்சாணி பஞ்சாயத்துக்குப் பொருளுதவி வேண்டிய மட்டும் அளித்தல் அத்தியாவசியம்.

பஞ்சாயத்தார் செய்யத் திட்டமிடும் பொது நன்மைக்குகந்த காரியங்களுக்குச் சர்க்கார் அதிகாரிகள் எவ்வளவு தடங்கல் செய்யக் கூடுமோ அத்தனை தடைகளையும், வேண்டிய அளவு கால தாமதங்களையும் குறையாது பரிபூரணமாகச் செய்து வருகிறார்கள்.

ஆளும் வர்க்கத்தினரிடம் கொஞ்சம் நஞ்சமிருந்த நம்பிக்கையும் இப்பொழுது அடியோடு மறைந்து போயிற்று. கிராம முன்னேற்றம், சீர்திருத்தம் என்று பேசுகிறார்களே, அது எங்கள் அடச்சாணி கிராமத்துக்கு இல்லையா அல்லது கூடாதா என்று கேட்கிறோம். இனியாவது பஞ்சாயத்து ஆபீஸர்கள் விழிப்படையட்டும். அடச்சாணி என்றொரு கிராமம் இருப்பதாக உணரட்டும். விழிப்படைந்து எங்கள் கிராமம் முன்னேற்றத்துக்கு ஆவன செய்வார்கள் என நம்புகிறோம்.

ஐந்நூறும் அதற்கு மேலும் ஜனத்தொகை யுள்ளகிராமங்களில் ஓராசிரியர் பள்ளி ஏற்படுத்தப் போவதாகச் சர்க்கார் கூறி வருகின்றனர். அதன்படி இன்று சேலம் போன்ற ஜில்லாக்களில் பல பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் எங்கள் கிராம மக்கள் எவ்வளவோ மனுக்கள் எழுதிப் போட்டும், பலர் நேரில் வற்புறுத்திக் கூறியும்கூட சிறப்பான திருநெல்வேலி ஜில்லா போர்டு அதிகாரிகள் அசையாத கருங்கல்லாக இருந்து, வாய் மூத்துச் சிதறி விடாதபடி மௌன சுவாமிகளாகக் காட்சி யளிக்கின்றனர்.

தற்சமயம் கடனை நதியில் ஒரு பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. பாலம் ஏற்பட்டு விட்டதால் ஊருக்குக் கிழக்குச் சாயலில் உள்ள நொண்டிப் பாலத்தைப் பெரிதாக வண்டி, பஸ் போக்குவரத்துக்குத் தகுதியான முறையில் கட்டித்தர வேண்டுமென அரசாங்கத்தினரைக் கேட்டுள்ளோம். இதில் 25%யைப் பஞ்சாயத்தார் ஏற்க முன் வந்துள்ளனர். இன்னும் 25%யை உழைப்பின் மூலம் சம்மதித்திருக்கிறோம். ஆகையால் மேலிடத்தார் இதை அலட்சியப் படுத்தாமல் வேண்டிய வசதிகள் செய்து தருவார்கள் என்று நம்புகிறோம்.

அடச்சாணி
3—8—54

ஏ. எஸ். அர்ஜுனன்

# திட்டம் நிறைவேற வழி!

நமது சென்னை மாகாணத்தில் 283 முதல் வகுப்புப் பஞ்சாயத்துக்களும், 4313 இரண்டாம் வகுப்புப் பஞ்சாயத்துக்களும் தற்சமயம் இயங்கிக் கொண்டு வருகின்றன. சட்டப்படி கொடுக்கப் பட்டுள்ள அதிகாரங்களையும் செயல் முறையில் கொண்டு வரும்போது, அரசாங்கத்தால் இயற்றப்பட்ட விதிகள் ஒவ்வொரு கட்டத்திலும் உடனடியாக ஒன்றும் செய்ய முடியாதபடி தடுக்கிறது. ஸ்தல ஸ்தாபன இன்ஸ்பெக்டர், அவர் இலாக்கா இவைகளின் ஆதிக்கத்துக்குக் கட்டுப் பட்டே பஞ்சாயத்துக்கள் நடக்க வேண்டியதா யிருக்கிறது. இன்ஸ்பெக்டரால் நியமனம்பெறும் நிர்வாக உத்தியோகஸ்தர்கள் இலாக்காவுக்குத்தான் பணிந்து நடப்பார்களே யொழியப் பஞ்சாயத்துக்குக் கட்டுப்பட்டு நடப்பது கிடையாதென்பது அனுபவ பூர்வமாய் அறிந்தவை.

பஞ்சாயத்துச் சிப்பந்திகள் கூடத் தலைவரையும் பஞ்சாயத்து அங்கத்தினர்களையும் லட்சியம் செய்து நடக்க வேண்டியதில்லை. நிர்வாக உத்தியோகஸ்தர் தயவிருந்தால் மற்றவர்களால் ஒன்




''டாக்டர் ஸார், அவளுடைய முன்பல்லையும் சேர்த்து எடுத்து விட்டீர்களானல், உங்களுக்குப் 'பீஸ்' அதிகமாகவே தருகிறேன்.''

றும் செய்ய முடியாது. அந்தச் சிப்பந்தி வேலை செய்தாலும் செய்யாவிட்டாலும் அக்கறையில்லை. ரூ. 10 பெறக்கூடியவைக்கு ரூ. 100 செலவான தாகச் சட்டப்படி ஒப்புக்கொள்ளக் கூடிய வகையில் ரிகார்டுகள் இருந்தால் போதுமானது. அம்மாதிரி கணக்கற்ற அதிகாரம் நிர்வாக உத்தியோகஸ்தருக்கு இருப்பதால்தான் பஞ்சாயத்துப் பணம் பஞ்சாயத்து மக்களின் நலனுக்குச் செலவழிக்கப் படாமல் பல துறைகளில் பாழ்படுத்தப்படுகின்றன.

எங்களூர் விருத்தாசலம் பஞ்சாயத்து பழைமையானது. முதல் வகுப்புப் பஞ்சாயத்து. இப்போது மொத்தம் பதின்மூன்று அங்கத்தினர்கள் இருக்கிறார்கள், இந்தப் பஞ்சாயத்தில். வருஷத்துக்கு வருஷம் மக்களுக்கு வரி ஏறிக்கொண்டே வருகிறதே யொழிய மக்கள் அடையும் பிரயோசனம் ஒன்றுமில்லை. 47-49க்கு முந்தி எந்த நிலைமையில் பஞ்சாயத்து இருந்ததோ அந்த நிலைமையில்தான் இன்றும் இருந்து கொண்டு இருக்கிறது. பஞ்சாயத்து வேலைகளில் சொந்த நலன்கள் வந்து குறுக்கிடுவதால் பஞ்சாயத்து வேலைகள் ஒழுங்காக நடைபெறுவதில்லை.

மக்களின் சுகாதாரத்துக்குச் சாக்கடைத் திட்டம் ரொம்ப அவசியமானது. ஏக காலத்தில் அதிக தொகை செலவழித்து ஊர் முழுமைக்கும் சாக்கடை கட்டுவதென்பது பஞ்சாயத்துக்களின் நிதி வசதிக்கு ஒத்து வராதது. கொஞ்சங் கொஞ்சமாகக் கட்டிக் கொண்டால் திட்டம் பூர்த்தியாகும். ஆனல் கொஞ்சங் கொஞ்சமாகச் சாக்கடை கட்டுவது சுகாதார இஞ்சினியரால் தடுக்கப்படுகிறது. தண்ணீர்த் திட்டமில்லாமல் சாக்கடைத் திட்டம் எடுத்துக் கொள்ளக் கூடாதென்று வற்புறுத்தப் படுகிறது. இவ்வூரில் தண்ணீர்த் திட்டம் அவ்வளவு அவசியம் இல்லாததென்றாலும், சாக்கடைத் திட்டம் வரவேணு மென்பதற்காகக் குடி தண்ணீர்த் திட்டத்துக்கு ஆவன செய்யும்படி கேட்டுக் கொண்டு 'பிளான்' முதலியவை அனுப்பப்பட்டு ஒரு நிலையில் இருக்கிறது. இது சுமார் மூன்று நாலு ஆண்டுகளாக முயற்சி செய்யப்பட்டு வரும் திட்டம். இவ்வூரில் மராமத்து இலாகாவுக்குப் பாத்தியமான இடங்களில் சாலை யோரங்களில் அவர்கள் சாக்கடையைக் கட்டிவிட்டால் பஞ்சாயத்து தன் எல்லையில் சாக்கடையைக் கட்டி விட்டு அத்துடன் இணைக்கும். இம்மாதிரி செய்யும்படி மராமத்து இலாகாவைக் கேட்டுச் சுமார் மூன்று நான்கு வருஷங்களாகியும் அவர்கள் ஒன்றும் செய்யவில்லை.

சாதாரணமாக, முதல் வகுப்புப் பஞ்சாயத்துக்களுக்கு நிர்வாக உத்தியோகஸ்தர்தான் நிர்வாக அதிகாரி. இத்தகைய பஞ்சாயத்துக்களில் பஞ்சாயத்துச் சுய ஆட்சி என்பது கொஞ்சங்கூடக் கிடையாது. நிர்வாக உத்தியோகஸ்தரின் ஆட்சியாகவே அமையப் பெற்று அவருடைய செய்கையைப் பஞ்சாயத்து அனுமதிக்கும்படி வற்புறுத்தப்படுகின்றது. அங்கத்தினர்களின் இஷ்டப்படியோ தலைவரின் இஷ்டப்படியோ ஒரு விஷயமும் சபைக் கூட்டத்துக்குக் கொண்டு வரப்படுவதில்லை. பஞ்சாயத்தின் அனுமதியைப் பெறுவதற்காகவே மாதமொரு முறையோ அவசியமான போதோ கூட்டம் கூட்டப்படுகிறது. அக் கூட்டங்களில் பூர்த்தி செய்யப்படாத 'வவுச்சர்'களும் நூற்றுக் கணக்காக வைக்கப்பட்டு அங்கத்தினர்கள் அனைவரும் பார்த்துப் பரிசீலிக்கப் போதிய அவகாசம் அளிக்காமல் தலைவருடைய அனுசரணையினல் 'பாஸ்' செய்யப்பட்டதாக எழுதப்படுகிறது. அப்படி 'பாஸ்' செய்யப்பட்டபிறகுதான் மேற்படி செலவினங்களின் பொறுப்பு அங்கத்தினர்களைச் சேருகிறது. அதற்கு முந்தி அது நிர்வாக உத்தியோகஸ்தரைச் சேர்ந்தது. ஆகவே மிகவும் பொறுப்பு வாய்ந்த இந்த விஷயம் சந்தர்ப்ப சௌகர்யத்தால் சாதகமான வகையில் பைசல் செய்து கொள்ளப் படுகின்றன.

பஞ்சாயத்தின் குறைகளைப் பற்றி எவ்வளவு வேண்டுமானலும் தக்க புள்ளி விவர ஆதாரங்களுடன் கொடுக்க முடியும். அடிப்படைக் கோளாறுன சட்ட சம்பந்தமான தகவல்களில் பலவித பொத்தல்கள் இருப்பதாலும் தலைவருக்கோ அங்கத்தினர்களுக்கோ எவ்வித அதிகாரமும் கொடுக்காமல் கூட்டுப் பொறுப்புணர்ச்சி மாத்திரம் அளிக்கப்படுவதால், சர்க்கார் உத்தியோகஸ்தரான நிர்வாக அதிகாரியின் எதேச்சாதிகாரச் செய்கையை மறைக்கப் பஞ்சாயத்தின் அனுமதியுடன் செய்யப்பட்டதாகப் பிறர் நினைக்கும் வகைக்குப் பஞ்சாயத்துத் தீர்மானம் பெறப்படுகிறதே யொழிய வேறல்ல. மனிதர்கள் எல்லோரும் நல்லவர்கள்தான். ஆனல் சூழ்நிலை காரணமாகத்தான் மாறுதல்கள் ஏற்படுகின்றன.

பஞ்சாயத்துத் தலைவரும் அங்கத்தினர்களும் கடமை யுணர்ச்சி அற்றவர்கள் என்று சொல்ல முடியாது. கிராம நலனுக்குப் பாதகமான காரியங்களில் அங்கத்தினர்களோ தலைவர்களோ எக்காலத்திலும் ஈடுபடமாட்டார்கள். கிராம முன்னேற்றத்தின் அபிவிருத்தியில்தான் சிற்சில சமயங்களில் வழுக்கி விழ நேருமே யொழிய மற்றப்படி அல்ல. ஆகவே அங்கத்தினர்கள் பொறுப்புக்குத் தக்கவாறு அதிகாரமளித்துச் செயலில் ஈடுபடச் செய்தால் ஒவ்வொரு கிராமமும் அபரிமிதமாக முன்னேற்ற மடையும்.

பொதுப்படையாக, பஞ்சாயத்தால் எங்கள் ஊர் முன்னேற்றம் அடைந்துள்ளது. நிர்வாகம் அபிவிருத்தியடைந்து நல்ல முறையில் நடத்த முடியும்.

பொது நன்மைக்குத் திட்டமிடும் பஞ்சாயத்தாரின் காரியங்களுக்குச் சர்க்கார் அதிகாரிகள்

# உங்கள் வதனத்தை மென்மையாக, புதுமை எழிலோங்க வைத்திருப்பது மிகச் சுலபமே!



## உங்கள் சருமத்திற்கு பாண்ட்ஸ் சௌந்தரிய பராமரிப்பு அளித்து வந்தால் போதும்

பிரசித்தி பெற்ற பாண்ட்ஸ் க்ரீம்கள் உங்கள் சருமத்திற்கு மிகச் சிறந்தவை; சீதோஷ்ணச் சூழ்நிலையின் கெட்ட விளைவுகளைத் தடுத்து சருமத்தைப் பாதுகாக்கும். உலக முழுவதிலுமுள்ள அழகு நங்கையரைப் பின்பற்றி நீங்களும் உங்கள் வதனத்திற்கு இந்த க்ரீம்களின் சௌமியமான பராமரிப்பு அளித்து, அதை மிருதுவாகவும் புதுமலர் சோபையுடனும் வைத்திருக்கக்கூடும்.



வரண்ட சீதோஷ்ண நிலை உங்கள் முகப் பொலிவைப் பாழ்படுத்தினால் நீங்கள் உபயோகிக்கவேண்டியது பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம். அதிலுள்ள செழிப்பான எண்ணெய்கள் சருமத்திற்கு சமனூட்டி, கடுமையான வெயில் மற்றும் வரண்ட காற்றினால் அது வாடி வதங்காமல் காப்பாற்றுகின்றன.



உங்கள் சருமம் இயற்கையாகவே எண்ணெய்ப் பசையுடையதானால் அல்லது உஷ்ணமும் கசகசப்பும் மிகுந்த சூழ்நிலையில் பிசுக்கடையும் பட்சத்தில், பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உபயோகிக்கவும். இக்குளுமையான மெல்லிய க்ரீம் சருமத் துவாரங்களில் படியும் பிசுக்கையும் செத்த ஜீவாணுக்களையும் அகற்றி உங்கள் முகத்திற்கு சௌமிய பாதுகாப்பளிக்கிறது.

## உலகில் எழிலரசிகள் உபயோகிக்கும் க்ரீம்கள்

பாண்ட்ஸ் க்ரீம்களை பிரதி தினமும் உபயோகித்து சருமத்தில் ஏற்படும் வித்தியாசத்தை கவனியுங்கள். சொற்ப நாட்களில் உங்கள் வதனம் அதிக தெளிவுடனும் மென்மையுடனும் விளங்குவதைக் காண்பீர்கள்—உணரவும் செய்வீர்கள்!

# பாண்ட்ஸ்

கோல்ட் க்ரீம்

வானிஷிங் க்ரீம்



அனுகூலமாக இருப்பதென்பது வெகு அபூர்வம். வெகுவாக வீண் தாமதம் செய்தும் அனாவசியமான ஆட்சேபணைகளைக் கிளப்பியும் முட்டுக்கட்டை போட்டு வருகிறார்கள். உதாரணமாக, குடி தண்ணீர், சாக்கடைத் திட்டத்துக்குப் பல வருஷங்கள் தாமதப் படுத்தப்படுகின்றன. சாதாரண சிற்சில் சில்லறை அங்கீகாரங்களுக்குப் பல மாதங்கள் தாமதமாகின்றன. பொதுவாகவே மேலதிகாரிகளுடைய குறுக்கீட்டினாலும் மதமதப்பினாலும் நிர்வாக அதிகாரியின் சர்வாதிகாரச் செயலினாலும் அலட்சிய புத்தியினாலும் பஞ்சாயத்தின் திட்டம் வெற்றி யடைவதில்லை.

இப்போது நடப்பதைவிட மிகவும் நல்ல முறையில் தீவிரமாகக் கிராம நலத்துக்குத் தகுந்த காரியங்களைச் செய்ய முடியும். எப்படி என்றால் பஞ்சாயத்துத் தலைவருக்கும் பூரண அதிகாரம் கொடுத்துக் கிராம நலனுக்கான வேலைகளை நிதி நிலைமைக்குத் தக்கவாறு உடனடியாகச் செய்து கொள்ளப் பூரண அதிகாரம் வழங்கி, நிர்வாக அதிகாரியையும் பஞ்சாயத்துத் தலைவருக்குக் கட்டுப்பட்டு நடப்பவராக ஆக்கினால் அரசியல் சட்டத்தில் கூறி யிருக்கிறபடி பூரண சுயேச்சையாக இயங்கக்கூடிய வகைக்குப் பஞ்சாயத்துக்கள் ஆகும். ஸ்தல மக்களுக்குப் பயந்து அங்கத்தினர்களும் தலைவர்களும் உண்மையாய் உழைப்பார்கள்.

விருத்தாசலம் பி. கே. தண்டபாணி
14-8-54 (அங்கத்தினர், பஞ்சாயத்துச் சபை)

# மத்தளத்துக்கு இருபுறமும் அடி!

**ப**ஞ்சாயத்துச் சபைத் தலைவரும் அங்கத்தினர்களும் கௌரவத்துக்காகப் பாடுபடுபவர்களே தவிர ஊழியத்துக்காக உழைக்கவில்லை. நிற்க, அவர்களுடைய சொந்த அலுவல்களால் பஞ்சாயத்து வேலைகள் தடைப்படக் கூடாதெனக் கருதியும், சட்டத்தின் நுட்பங்களை அனுசரித்துப் பஞ்சாயத்து வேலைகளை நிர்வாகம் செய்யவும் ஒவ்வொரு மேஜர் அதாவது முதல் வகுப்புப் பஞ்சாயத்துக்களுக்கும் முழு நேர 'நிர்வாக அதிகாரி' என்ற உத்தியோகஸ்தர் ஒருவரைச் சென்ற 1945 ஆண்டு முதல் சர்க்கார் நியமித்து வருகிறார்கள்.

இந்த உத்தியோகஸ்தர்களுக்குப் பஞ்சாயத்துப் போர்டின் தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டு வருவதும், பஞ்சாயத்தின் அன்றாட அலுவல்களைச் சட்டதிட்டங்களுக் குட்பட்டுக் கவனிப்பதும்தான் அலுவல்கள். ஆனால் 'உரலுக்கு ஒருபுறம் இடி, மத்தளத்துக்கு இருபுறமும் இடி' என்பது போல் ஒரு பக்கம் சர்க்காரின் மிரட்டல்கள், மறு பக்கம் பஞ்சாயத்துப் போர்டின் குற்றச்சாட்டுகள்; இவற்றை இவர்கள் சுமந்து கொண்டு நிற்க வேண்டியிருக்கிறது. நிர்வாக அதிகாரிகள் தங்களை மிரட்டச் சர்க்காரால் ஏவப்பட்ட நபர்கள் என்ற சந்தேகம் பல பஞ்சாயத்துச் சபைகளில் ஏற்பட்டிருப்பதால் அடிக்கடி 'நிர்வாக அதிகாரிகள் ஒழிக' என்ற கோஷம் ஒலிப்பப் படுகிறது. உண்மையில் பல பஞ்சாயத்துக்களில் நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பட்ட பிறகு பல வழிகளில் நல் முன்னேற்றம் அடைந்திருப்பது கண்கூடாய்ப் பார்க்கலாம்.


ஒரு அங்கத்தினர் நிர்வாக அதிகாரியிடம் வருவார்; பஞ்சாயத்துச் சாமான்களில் எதையாவது சுயநலத்துக்காக யாசிப்பார்; அவருக்கு அது கிடைத்து விட்டால் ஒன்றுமில்லை. நிர்வாக அதிகாரி அதைக் கொடுக்கா விட்டால் குற்றச்சாட்டுகள். இதேமாதிரி சுயநலம் மிகுந்துள்ள பஞ்சாயத்துக்களில்தான் நிர்வாக அதிகாரிகள் மீது சம்பந்தமின்றிக் குறை கூறப்படுகிறது. வீண் பழிகள் சுமத்தப்படுகின்றன.

ஒரு அங்கத்தினருக்கோ அல்லது தலைவருக்கோ வேண்டிய அல்லது அவர்களுக்குச் சொந்தமான நபர்களை அலுவலகத்தில் சிப்பந்தியாக நியமிக்க வாதாடுவார். அப்படிச் செய்யாவிட்டால் பொல்லாப்பு. அவர்மீது புகார் மனுக்கள் ஜோடிக்கப்படும்.

அங்கத்தினர்களும், தலைவரும் பஞ்சாயத்தில் 'காண்டிராக்ட்' வேலைகள் செய்யக் கூடாது என்று ஒரு விதி உண்டு. இதை மீற அவர்கள் முற்பட்டு, அதை நிர்வாக அதிகாரி தடுத்தால் நிர்வாக அதிகாரிமீது நம்பிக்கை யில்லாத் தீர்மானம்!

பஞ்சாயத்துச் சபையில் நிர்வாக அதிகாரிகள் மத்தளம்போலத் தவிக்க வேண்டி யிருக்கிறது. மற்றவர்களுக்கு ஒருபுறத்தில்தான் அடி. நிர்வாக அதிகாரிக்கோ இருபுறத்திலும் அடி விழுகிறது!

டெங்கணிக்கோட்டை கே. ராமமூர்த்தி
1—7—54



இலங்கைத் தமிழ்ப் பெரியாரும் தபால் தந்திப் போக்குவரத்து இலாகா மந்திரியுமான ஸ்ரீ எஸ். நடேசன் இவ்வாரம் கொழும்பு அர்ச் பெனிடிக்ட்ஸ் காலேஜ் தமிழ் இலக்கியச் சங்கத்தின் ஒன்பதாவது ஆண்டு விழாவுக்குத் தலைமை வகித்தார். கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, சங்கீதப் போட்டி, நாடகப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மந்திரி பரிசுகள் வழங்கினார். கீழ்ப் பிரிவு மாணவர் கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற மாணவன் கே.வி.எஸ். மோகன் வாஸுக்கு மந்திரி பரிசு வழங்குவதைப் படத்தில் காணலாம்.



இப்பொழுது நினைத்துக் கொண்டாலும், அன்று நான் செய்த அந்த அசட்டுக் காரியம் என் கண் முன்னே வந்து நிற்கிறது. ஏதோ ஒரு இனம் தெரியாத வேதனையும் என் உள்ளத்தைக் கசக்கிப் பிழிகிறது போலத் தோன்றுகிறது.

நிதானமில்லாமல் அவசரப்பட்டுச் செய்த காரியம் தான்.

நான் பட்ட அவஸ்தைகள், என் குடும்பம் இருந்த நிலை, எல்லாமே சேர்ந்து என்னை அப்படிச் செய்யத் தூண்டி விட்டன.

நான் பெண்ணில்லை. பேயினிடம் கூட அந்த இரக்க மிருக்கும். தாய்மைக் குணம் நிரம்பி யிருந்த நானா அப்படிச் செய்வேன்?

என் கணவர் கைப்பிடித்து ஏழு வருஷங்கள்தான் ஆயிற்று. அதற்குள் நான் நான்கு குழந்தைகளுக்குத் தாயாக வேண்டி யிருந்ததே!

முதலில் ஒரு பெண் குழந்தை. ஒன்று மில்லாததற்குப் பெண்ணாவது

# நல்ல வழி!

## தில்லைவாசி

பிறந்ததே. எனக்குத் தலைகால் தெரியாத மகிழ்ச்சியாக யிருந்தது. பக்கத்து வீட்டுப் பத்மா நான்கு வருஷங்களாக, குழந்தைக்காக ஒற்றைக் காலில் நின்று தவம் செய்து கொண் டிருந்தாள். "பத்மாவைவிட நான் பாக்கியசாலிதான். பெண்ணா யிருந்தாலும், குழந்தைதானே. குறை நீக்க வந்த செல்வக் களஞ்சியம்" என்று எண்ணி மகிழ்ந்தேன்.

"லலிதா! நீ அதிர்ஷ்டசாலி! முதல் குழந்தை பெண்ணாகத்தான் பிறக்கவேணும். விருத்தி உண்டு. அதிர்ஷ்டம் ஏற்படும்...என் வயிறுதானடியம்மா திறக்க மாட்டேன் என்கிறது. என்ன செய்வது? நான் வந்த வழி அப்படி" என்று கூறி, தன் குறையையும் சொல்லி, என்னை வாழ்த்தினாள் பத்மா.

"அக்கா! உங்களுக்கு அப்படி யொன்றும் வயதாகிவிடவில்லை. உங்களுக்குக் குழந்தை பிறக்காமல் போகாது. கவலைப் படாதீர்கள்" என்று பத்மாவுக்கு நான் பெருமிதத்தோடு ஆறுதல் சொன்னேன்.

பத்மா சொல்லியபடி எனக்குப் பிறந்த முதல் பெண் குழந்தையினால். வீட்டில் செல்வம் வந்து குவியவில்லை. அப்படி யொன்றும் அதிர்ஷ்டம் பெருகி விடவில்லை. அதற்குப் பதில், என் கணவர் வேலை பார்த்து வந்த கம்பெனி திவாலாகி, அவருடைய வேலைதான் போயிற்று.

'ஐயோ. இதென்ன கஷ்டகாலம்? இனிக் குடும்பத்தை எப்படிச் சமாளிக்கப் போகிறோம்? எல்லாம் இந்தத் தரித்திரம் பிறந்த வேளை, இருந்த வேலையும் போயிற்று" என்று என் கணவர் எதிரிலேயே குழந்தையை நிந்தித்தேன்.

"ச்சீ, அசடு! என்ன வார்த்தை பேசுகிறாய்? பெண் புத்தியைக் காண்பிக்கிறாயே! குழந்தை என்ன செய்யும்? நீதான் என்ன செய்வாய்? வேலை வருவதும், போவதும் யாருடைய அதிர்ஷ்டமும் இல்லை. எனக்குப் பெரிய வேலையாகவே கிடைக்கப் போகிறது. நீ பார்க்கத்தான் போகிறாய்!" என்றார் சாந்த சொரூபியான என் ஆருயிர்க் கணவர்.

"நீங்கள் என்னமோ சொல்லி விடுகிறீர்கள். எனக்குத்தான் தைரியம் ஏற்படவில்லை" என்று நான் என் கவலையை அவரிடம் தெரிவித்துக் கொண்டேன்.

பெண் குழந்தை பிறந்ததுமே, அவருக்கு உத்தியோகத்தில் உயர்வு ஏற்பட்டு, குடும்பத்தில் செல்வம் செழித்து, பெண்ணின் கல்யாணத்தைப் பற்றிய கவலையில்லாமலிருக்கும் ஒரு நிலை திடீரென்று வரவேண்டும் என்று என் உள்ளத்தில் ஆசை வித்து ஊன்றியிருந்தது. அதற்கு மாறாக, அவருடைய வேலையே போய் விடுவதென்றால், எனக்கு எப்படியிருக்கும்?

அவர் எங்கெங்கோ வேலைக்கென்று அலைந்தார். போய்ப் பார்க்காத மனிதர்கள் பாக்கியில்லை. ஏறி இறங்காத காரியாலயங்களும் இல்லை. வேலை கிடைக்கவில்லை. என்னைப் போல அவர் நம்பிக்கையை இழக்கவில்லை. "இன்றில்லா விட்டால், நாளைக்காகிறது" என்ற தைரியத்தில் அவர் இருந்தார்.

வேலையில்லாமல் அவர் வீட்டில் அமர்ந்து ஒரு மாதங்கூடப் போய் விட்டது.

அப்பொழுதுதான் அவர் ஒரு நாள் சுரம் என்று படுத்தார். சாதாரண சுரம் போலத்தான் இருந்தது; அவரும் தைரியமாகயிருந்தார். என் மனம் மட்டும் உளைந்து கொண்டிருந்தது. சுர வேகம் குறைந்ததாய்த் தெரியவில்லை. அவர் ஏதேதோ பிதற்றத் தொடங்கி விட்டார். பயந்து போனேன். டாக்டருக்குச் சொல்லி யனுப்பினேன்.



டாக்டரும் வந்தார். 'டைபாய்டு' என்று சுரத்துக்கு நாமகரணம் சூட்டினார். "வீட்டில் இருக்க வேண்டாம், என்னுடைய மருத்துவச்சாலையில் கொண்டு வந்து விடுங்கள். நான் பார்த்துக்கொள்ளுகிறேன்" என்று சொல்லி, டாக்டர் மருந்து கொடுத்து விட்டுப் போனார்.

என் கணவரை மருத்துவச் சாலையில் கொண்டு போய் விடுவதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை.

அவர் உடம்பு தேறி, வீட்டுக்கு வர ஒரு மாதமாகி விட்டது. என் கழுத்தில் கிடந்த மூன்று பவுன் சங்கிலியையும் சுரம் விழுங்கி ஏப்பமிட்டது. "அவர் பிழைத்து எழுந்தாரே, அதுவே போதும்" என்ற திருப்திதான் என்னிடம் மிஞ்சி நின்றது.

என் கணவரின் உடம்பில், பலஹீனம் நீங்கி, அவர் நல்லபடியாக நடமாட மேலும் ஒரு மாதமாகி விட்டது.

வேலையும் போய் நோயும் ஏற்பட்டு, இந்த இரண்டு மாத காலத்தில் குடும்பம் நடத்த ஒரே திண்டாட்டமாகி விட்டது. என்னுடைய இந்தக் கஷ்டத்தை நினைக்க நினைக்க, "பெண் பிறந்த வேளை நல்ல வேளையில்லை" என்று எனக்குக் குழந்தையின் பேரில்தான் கோபம் வந்தது.

சீக்கிரத்திலேயே, காரிருளில் மின்னல் தோன்றுவது போல, என் கஷ்டத்துக்கும் விடிவு காலம் பிறந்தது. என் கணவருக்கு வேறு ஒரு கம்பெனியில் வேலை கிடைத்தது. முந்தியதை விடப் பத்து ரூபாய் அதிகப் படியான சம்பளம். என் வயிற்றிலும் பால் வார்த்தது போலிருந்தது.

"லலிதா! அசட்டுப் பிசட்டு என்று உளறிக் கொட்டினாயே? இப்பொழுது பார்த்துக் கொண்டாயா குழந்தையின் அதிர்ஷ்டத்தை?" என்றார் என் கணவர், எப்பொழுதும் போலச் சிரித்துக் கொண்டே.

"உங்கள் அருமைப் பெண்ணின் அதிர்ஷ்டமாகத்தானிருக்கட்டுமே! எப்படியாவது கஷ்டம் நீங்கினால் சரிதான்" என்றேன் நான். எனக்கும் உள்ளம் நிரம்பிய திருப்தி ஏற்பட்டது. பெருமை பிடிபட வில்லை.

அடுத்தபடியாக மற்றொரு குழந்தை. அதுவும் பெண். உள்ளம் சப்பிட்டு விட்டது.

"குறைந்த சம்பளத்தில் இந்த இரண்டு பெண்களை வைத்துக் கொண்டு எப்படிச் சமாளிக்கப் போகிறோம்? கல்யாணம் என்று வந்தால் குறைந்த பட்சம் பத்தாயிரம் ரூபாயாவது வேண்டுமே! பகவானே! இதென்ன சோதனை காலம்?" என்று இரண்டாவது குழந்தை பிறந்ததும், சந்தோஷத்துக்குப் பதில் கவலைதான் என் மனத்தை அரிக்கிறது.

பத்மா அப்படியேதானிருந்தாள். அவள் குறை நீங்கவில்லை. அவளுக்கு இன்னும் குழந்தை பிறக்கவில்லை.

"அக்கா, உங்கள் பாடு யோகம்தான்! என்னைப் பார்த்தீர்களா? இந்தக் கஷ்டத்தையெல்லாம் நான் சகித்துக் கொள்ள வேண்டுமா? இரண்டும் பெண்ணாய்ப் பிறந்து விட்டதே!" என்று நான் அங்கலாய்த்துக் கொண்டேன்.

"என்ன லலிதா, நீ சொல்கிறது? பெண்ணென்றால் குடி முழுகியா போய் விடும்? உனக்குக் கஷ்டமாயிருந்தால் என்னிடம் ஒன்றைக் கொடுத்து விடேன். என்னவோ மாய்ந்து போகிறாயே!" என்று பத்மா என்னை விளையாட்டாகவே கடிந்து கொண்டாள்.

பெண் உள்ளத்தைப் பெண் அறிவாளே! நான் பத்து மாதம் சுமந்து பெற்ற குழந்தையைக் கொடுத்துவிட மனம் ஒப்புவேனா?

"அப்படியே எடுத்துக் கொள்ளுங்கள், அக்கா! ஒன்று என்ன, இரண்டையுமே எடுத்துக் கொள்ளுங்கள்" என்று நானும் சிரித்துக் கொண்டே சொன்னேன்.

"நீ கொடுத்தாலும் கொடுக்கா விட்டாலும், உன் பெண்கள், என் பெண்கள்தான். நான் எங்கு போய் விடுகிறேன்? பக்கத்து வீட்டுக்காரிதானே! அங்கிருந்தால் என்ன, இங்கிருந்தால் என்ன?" என்று பத்மாவும் சிரித்துக் கொண்டே சொல்லி விட்டுப் போய் விட்டாள்.

பத்மாவுக்கு ஒரு குழந்தை பிறந்து, கண்ணால் பார்க்க வேண்டும் என்ற ஆவல் எனக்குத்தான் நிறைய இருந்தது.

பத்மா தினமும் ஒழிந்த வேளையில் வந்தாள். என் குழந்தைகளை எடுத்து வைத்துக் கொஞ்சினாள். தன் அன்பையெல்லாம் அவர்கள்மீது சொரிந்தாள். நான் வேண்டாம் என்று மறுத்தும், ஏதேதோ விளையாட்டுச் சாமான்களைக் குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுத்தாள். இந்தக் குழந்தைகளினால், எனக்கும் அவளுக்குமுள்ள கட்டும், அன்னியோன்னியமும் மேலும் அதிகரித்தன.

இதற்கும் நான் கொடுத்து வைக்கவில்லை.

பத்மாவின் கணவரை வேறு ஊருக்கு மாற்றி விட்டார்கள். கண்களில் கண்ணீரோடு, குழந்தைகளை எடுத்து வைத்துக் கொஞ்சி முத்தமிட்டு, பிரிய மனமில்லாமல் பிரிந்து போனாள் அவள்.

இரு வருஷத்துக்குப் பிறகு, பத்மா எழுதியிருந்த கடிதத்தில், நம்பிக்கையைத் தெரிவித்திருந்தாள்.

"லலிதா! என் ஆசை நிறைவேறும்படி என்னுள்ளே மாறுதல்களைக் காண்கிறேன். ஆறு ஏழு மாதம் போனால், 'குழந்தையில்லாக் குறை என்னைவிட்டு நீங்கிவிடும்" என்று எழுதியிருந்தாள் அவள். என் மனத்தினுள்ளும் மகிழ்ச்சி நிரம்பி வழிந்தது.

நாட்கள் பறந்தோடிக் கொண்டிருந்தன.

என்னிடத்திலும் மாறுதல் கண்டேன்; கவலை கொண்டேன். "குழந்தை போதும் இன்னமும் வேண்டாம். இரண்டு பெண்கள்; இதற்கே தலைதூக்க முடியாது. மூன்றாவதும் பெண்ணாக இருந்து விட்டால்? ஆணாக இருந்தாலும் வேண்டாமே" என்று எண்ணினேன். வேதனைதான் அதிகரித்தது.

என் கணவரிடம் "இதோ பாருங்கள் குழந்தை வேண்டாம். ஏதேதோ மருந்து விற்கிறார்களாமே வாங்கிக் கொடுத்து விடுங்கள். போதும் எனக்கு" என்று சொல்லி விடலாமா என்று பல நாட்கள் எண்ணினேன். தனிமையில் கண்ணீர் வடித்தேன். ஆனால் இதை அவரிடம் அப்படிச் சொல்லத் தான் தைரியம் வரவில்லை.

"அவரிடம் தான் ஏன் சொல்ல வேண்டும்? அவருக்குத் தெரியாமல், வாங்கிக் குடித்து விட்டால் என்ன!" என்று கூடத் தோன்றியது. அதற்கும் தைரியம் வரவில்லை. ஊமை கண்ட கனவுபோல், என் நினைவை என்னுள்ளேயே புதைத்து, மடிய விட்டு, கவலைப் பட்டுக் கொண்டிருந்தேன்.

அப்பொழுதுதான் பத்மா தனக்கு ஆண் குழந்தை பிறந்திருப்பதாகத் தெரிவித்துக் கடிதம் எழுதியிருந்தாள். அவளுடைய பேற்றைக் கண்டு மகிழ்ந்தேன். என் கவலையையும் மறந்தேன். "பல வருஷங்களுக்குப் பிறகு பத்மாவுக்கு இப்பொழுதாவது ஆண் குழந்தையாகப் பிறந்ததே" என்று என் மகிழ்ச்சி இரட்டிப்பாயிற்று.

"அவளைப் போலவே எனக்கும் ஆண் குழந்தையே பிறக்கும்" என்ற தைரியமும் நம்பிக்கையும் உண்டாயிற்று.

மூன்றாவதும் பிறந்தது. எதிர்பார்த்தபடி ஆண் குழந்தையாகவே பிறந்தது. நிம்மதி ஏற்பட்டது. மகிழ்ச்சியில் மிதந்தேன்.

ஆனால் என் கணவரின் மனம் என்னைப் போல இல்லாததுதான் எனக்குப் புரியாத புதிராக இருந்தது.

முதலில் பெண்ணுக்கு அவர் மகிழ்ச்சியைக் காண்பிக்கவில்லை: வெறுப்பையும் வெளிக் காட்டிக் கொள்ளவில்லை.

இரண்டாவதற்கும் அப்படியே.

மூன்றாவது. இரண்டு பெண்களுக்குப் பிறகு, அபூர்வமாக ஆணாகப் பிறந்திருக்கிறதே பெருமைப் பட்டுக் கொள்ளுவார் என்று எதிர்பார்த்தேன்; ஏமாந்தேன்.



**பொள்ளாச்சி "கல்கி" ஏஜண்டு ஸ்ரீ எம். வெள்ளியங்கிரிக்கும், சேலம் செவ்வாய்ப் பேட்டை திரு எஸ். ரங்கசாமி செட்டியார் குமாரத்தி செல்வி மீனாட்சிக்கும் செவ்வாய்ப் பேட்டை மணமகள் இல்லத்தில் அக்டோபர் 31-ந் தேதி சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. திருமணத்தின் போதும் நவம்பர் 2ந்தேதி பொள்ளாச்சியில் நடந்த வரவேற்பின் போதும் ஏராளமான நண்பர்களும் உறவினர்களும் விஜயம் செய்து மணமக்களை ஆசீர்வதித்தனர். வாழ்க, மணமக்கள்!**

அவர் விருப்பு, வெறுப்பற்ற ஒரு வேதாந்தி போல இருந்தது எனக்குப் பிடிக்கவில்லை.

"என் கஷ்டம் உங்களுக்குத் தெரியவில்லை. ஒப்புக்கு ஒரு வார்த்தை. ஆண் குழந்தை பிறந்திருக்கிறதே என்று பெருமையோடு சொல்லிக் கொண்டீரா? கஷ்ட நஷ்டத்துக்கெல்லாம் இந்தப் பெண்கள்தான் ஆளாகணும், ஆண்கள் மட்டும் கல்மனம் கொண்டவர்களாக இருக்க வேண்டும்" என்று குறைப்பட்டு என் கணவரைக் கடிந்து கொண்டேன்.

"ஏன், லலிதா உனக்குப் புத்தி இப்படிப் போகிறது? எது பிறந்தால் என்ன? யார் வேண்டாம் என்கிறது? யார் அதிர்ஷ்டத்தை யார் எடுத்துக் கொள்ளப் போகிறார்கள்? ஆண், பெண் என்ற பேதமே என்னிடம் கிடையாது. இரட்டைப் பிள்ளைகளாக எல்லாமே பெண்ணாக நீ பெற்றுக் கொடுத்தாலும் எனக்குச் சம்மதந்தான்! பெண்ணாய்ப் பிறந்த நீ, பெண்ணென்றால் ஏன் இப்படிக் கரித்துக் கொட்டுகிறாய்?" என்று அவர் சாந்தமாகச் சொன்னார்.

நானும் வாயைப் பொத்திக் கொண்டு சும்மா இருந்து விட்டேன். மனத்துக்குள் மட்டும் "ஈஸ்வரா! எனக்குக் குழந்தை போதும். ஆண்களாகவே பிறப்பதானாலும் வேண்டாம். என்னை நிம்மதியாக வாழவிடு" என்று அடிக்கடி பிரார்த்தனை செய்து கொண்டிருந்தேன்.

என் கணவருக்கும் உத்தியோகத்தில் பதவி உயர்வு கிடைத்தது. கம்பெனி மானேஜர் பதவியில் அமர்ந்தார். 'ஏதோ கொஞ்சம் அதிர்ஷ்ட மிருக்கிறது' என்று திருப்திப் பட்டு மகிழ்ச்சி யடைந்தேன். ஆனால் வாழ்வு தாழ்வு, நல்லது கெட்டது. எல்லாவற்றையும் ஒன்றாகப் பாவித்த அவரிடம் எந்த மாறுதலையும் நான் காணவில்லை. என் வியப்புதான் அதிகரித்தது.

அடுத்தபடியாக இன்னொன்றா? என் வயிற்றில் புளியைக் கரைத்து ஊற்றியதுபோலிருந்தது. சீர்கெட்டுக் கிடந்த என் உடம்பு இதை யெல்லாம் தாங்குமா? அதுவும் பெண்ணாகவே பிறந்து விட்டால்?......

என் மனம் வெந்து சாம்பராகியது. செய்வது இன்னதென்றே புரியவில்லை.

ஏழு மாதங்கள் போனால், நான்கு குழந்தைகளுக்கு நான் தாயா?

அப்பொழுதுதான் அவர் ஒரு நாள் வெளியூர்ப் பிரயாணத்துக்குக் கிளம்பினார். திரும்பி வர ஒரு மாதம் ஆகும் என்று சொல்லி விட்டுப் போனார்.

தனிமையிலிருந்த என் குரங்கு மனத்தில் எத்தனையோ யோசனைகள். மூன்று நாட்களாக ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை. கண்கள் பத்திரிகையில் கண்ட விளம்பரத்தில் பதிந்து போயிருந்தன. உள்ளத்தில் ஓரே போராட்டம்; கண்களிலும் நீரோட்டம். உடல் நடுங்கியது.

கடைசியில் துணிவு பிறந்தது. என் கணவருக்குத் தெரியாமல், ஏன் உலகத்துக்கே தெரியாமல் என்னுடைய கொடிய செயலை முடித்துக் கொள்ள வேண்டியது என்று தீர்மானித்து விட்டேன்.

கை நடுங்கிற்று. மருந்து வேண்டிக் கடிதம் எழுதிப் போட்டு விட்டேன்.

என் கணவர் திரும்பி வருவதற்குள், நினைத்த காரியத்தில் வெற்றி யடைந்து விட வேண்டும் என்ற ஓரே கவலைதான்.

ஒரு வாரம் போயிற்று.

"அம்மா, அம்மா!" என்று வெளியில் நின்று தபால்காரர் கூப்பிட்டார்.

"மருந்து வந்து விட்டது. இனி பயமில்லை, அவரும் இப்போதைக்குத் திரும்பி வரப் போவதில்லை" என்ற எண்ணந்தான் என்னுள்ளே எழுந்தது. இருந்தாலும் உள்ளத்தின் அச்சம் அறவே நீங்கிவிட வில்லை.

நான் வெளி வாயிலுக்கு வந்தபோது என் தலை சுற்றிற்று. திகைப் பூண்டை மிதித்தவள் போல் ஆனேன். என்னைத் தாங்கி நின்ற பூமி அப்படியே பிளந்து, என்னை அடியில் கொண்டுபோய், மறைத்திருக்கக் கூடாதா என்று எண்ணினேன்.


ஐயோ, நான் என்ன செய்வேன்? இதிலிருந்து எப்படித் தப்புவேன்?

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. கால் ஓடவில்லை. கை ஓடவில்லை.

"அம்மா, உங்களுக்கு ஒரு வி. பி. பார்சல் வந்திருக்கிறது. ஐந்து ரூபாய் கட்ட வேணும்" என்று தபால்காரர் சொல்வதற்கும், என் கணவர் வீட்டு வாயிற்படி ஏறி வருவதற்கும் சரியாக இருந்தது.

துரோகியாகிய என் மனம் பட்ட பாட்டை என்னவென்று சொல்லுவேன்?

"என்னப்பா! என்ன கொண்டு வந்திருக்கிறாய்?" என்றார் என் கணவர் வாசலில்



பொன்னமராவதி வலம்புரி வடுகநாதன் உயர்நிலைப் பள்ளி, அலர்மேலு ஆரம்பப்பள்ளி ஆகியவற்றின் புதிய கட்டிடங்களின் திறப்பு விழா அக்டோபர் 31-ல் வெகு சிறப்பாக நடைபெற்றது. முதன் மந்திரி ஸ்ரீ காமராஜ் நாடார் கட்டிடங்களைத் திறந்து வைத்தார். ராஜா ஸர் முத்தையா செட்டியார் விழாவுக்குத் தலைமை தாங்கினார். ஆயிரக்கணக்கான ரூபாய்களை அள்ளிக் கொடுத்துக் கல்வித் தொண்டாற்றிவரும் வலம்புரி வடுகநாதன் குடும்பத்தாரை "வாழ்க! வாழ்க!" என்று வாழ்த்திப் பல்லாண்டு கூறுகிறோம்.

நின்று கொண்டிருந்த தபால் காரரைப் பார்த்து.

தபால்காரர் வி. பி. பார்சலை எடுத்து வைத்தார். நடுங்கும் கரத்தால், நான் கையெழுத்துப் போட்டேன். என் கணவர் பணத்தைக் கொடுத்து, பார்சலைப் பெற்றுக் கொண்டார்.

என் இருதயம் படபடவென்று அடித்துத் துடித்துக் கொண்டிருந்தது. "என்ன தான் சொல்லப் போகிறாரோ?" என்று நான் பயந்தேன். என் முகம் தொங்கிப் போய் விட்டது. அவரை நிமிர்ந்து பார்க்கத் தைரியம் ஏற்படவில்லை. பேசாமல் உள்ளே வந்தேன். அவர் தொடர்ந்து வந்தார்.

"என்ன லலிதா! என்ன காரியம் செய்திருக்கிறாய்? எப்பொழுதிலிருந்து உனக்கு இந்தப் பைத்தியம் பிடித்திருக்கிறது? யாரைக் கேட்டுக் கொண்டு இப்படிச் செய்திருக்கிறாய்?" என்று சாந்தமாகவேதான் அவர் கேட்டார்.

"யாரை நான் கேட்க வேணும்? கஷ்டப் படுகிறது யாராம்? உங்களுக்கு என்ன, சொல்லி விடுகிறீர்கள். படுகிறவள் நான் தானே! எனக்குக் குழந்தையே வேண்டாம். இருக்கிறது போதும்" என்று படபடப்பாகச் சொல்லி விட்டேன்.

மறு கணமே என் கணவர் ருத்ர மூர்த்தியாக மாறி விட்டார். ஆறு வருஷங்களாக அவருடன் வாழ்ந்து விட்டேன். இதுவரைக்கும் என்னிடம் ஒரு நாள்கூட அவர் இப்படி நடந்து கொண்டதில்லை. கடிந்து ஒரு வார்த்தை கூறியதில்லை. அப்படிப் பட்டவர் என்னென்னவோ சொல்லி விட்டார். அவர் மனம் அவ்வளவு தூரம் புண்பட்டுப் போயிருக்க வேண்டும். அப்பொழுதுதான் எனக்கு நான் செய்ய இருந்த பெருத்த தவறு நன்கு புலப்பட்டது. மிகப் பெரிய பாதகத்தில் இருந்து தப்பியதை உணர்ந்தேன்.

சிறு பிள்ளைபோல், தேம்பித் தேம்பி அழுதுகொண்டே போய், சமையலறையில் புகுந்து கொண்டேன். அவர் விடுபவராய் இல்லை. பின்னாலேயே வந்தார்.

வேடன் கையில் சிக்கிய புறாவாக என் உடல் பூராவும் நடுநடுங்கிக்கொண்டிருந்தது.

"நடக்கிறது நடக்கட்டும்" என்று அவரை முகம் கொடுத்துப் பார்த்தேன். அவர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. அவர் உதடுகள் படபடவென்று துடித்தன. கண்கள் கனல் கக்கின.

"கொலைகாரி! உனக்கு இது இடமில்லை. உன் முகத்தில் விழித்தாலும் பாவம்" என்று என் கணவர் வீடே அதிரும் படி இரைந்தார்.

என் கணவரின் கால்களைக் கெட்டியாகப் போய்ப் பிடித்துக் கொண்டேன். விம்மி விம்மி, உடல் குலுங்க வாய் விட்டு அழுதேன்.

"என்னைப் பாருங்கள். தெரியாமல் செய்து விட்டேன். என் உடம்பு இருந்த கேடும்,



உலக இலக்கியங்களுடன் ஒப்பிடும்போது தமிழ் இலக்கியம் அவைகளுக்கெல்லாம் ஒரு படி மேல் என்று பன்மொழிப் புலவர்கள் பலரும் ஒப்புக்கொள்கிறார்கள். "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்கிறார் பாரதியார். இவ்வாறெல்லாம் தமிழ் நாட்டிலேயே சொல்லிக் கொண்டிருந்தால் போதுமா? மேல் நாடுகளில் நமது இலக்கியத்தின் சிறப்பை எடுத்துக் கூற வேண்டாமா? இந்தியச் சாலை போக்குவரத்துக் காரியதரிசி ஸ்ரீ டி. வி. ராமானுஜம் எம்.ஏ. மத்தியக் கிழக்கு ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணம் செய்ய நவம்பர் பத்தாம் தேதியன்று பம்பாயிலிருந்து புறப்பட்டிருக்கிறார். மத்தியக் கிழக்கு ஐரோப்பா தேசச் சுற்றுப் பிரயாணத்தில் பாரத நாட்டின் கலாசாரத்தைப் பறைசாற்ற, தமிழ் இலக்கியக் கொடியைத் தூக்கிப் பறக்கவிடத் திட்டமிட்டிருக்கும் ஸ்ரீ ராமானுஜத்தைப் பாராட்டி வாழ்த்துகிறோம்!

பெண் குழந்தையே வேண்டாம் என்ற நினைப்பும் என்னை இப்படிச் செய்யத் தூண்டி விட்டன. என்னை மன்னித்து விடுங்கள். இனிமேல் இப்படியெல்லாம் செய்ய மாட்டேன்" என்று 'கோ' வென்று கதறினேன். என் இருதயம் வெடித்து விழுந்து விடும் போலிருந்தது.

என் கணவரின் மனம் இளகியிருக்க வேண்டும். அவர் முகத்தில் கோபம் தணிந்தது; சாந்தம் குடி கொண்டது.

அவர் மெதுவாகச் சிரித்தார்.

அதுகூட என் மனத்தை வேதனைசெய்தது.

"அசடே! உனக்கு ஏன் இப்படிப் புத்தி போயிற்று?" என்றார்.

எனக்கு நிம்மதி பிறந்தது. என் மடமையை நினைத்து நான் நொந்து கொண்டேன். என் அழுகை மட்டும் நிற்கவில்லை.

"அசட்டுப் பெண்ணே! ஏன் வீணாக அழுகிறாய்? பிறக்கப் போவதுதான் கடைசி குழந்தை. காந்திமகான் காட்டிய வழியைக் கடைப் பிடிக்கப் போகிறேன். மனித குலத்துக்கு ஏற்ற **நல்ல வழி** அதுதான். உன் கஷ்டம் நீங்கி விடும். எழுந்திரு. போய் வேலையைப் பார்" என்று கூறிக் கொண்டே அவர் கிளம்பினார்.

மறு நாள் பத்மாவிடமிருந்து, அவளுக்கு அடுத்தது பெண் குழந்தை பிறந்திருப்பதாகக் கடிதம் வந்தது.

"ஆமாம்! பத்மாதான் பொறுமைசாலி. பெண் என்றால் அவள்தான் பெண். நானும் இருக்கிறேனே பைத்தியக்காரி!" என்று எண்ணி எண்ணிக் கடிந்து கொண்டேன்.

நான் செய்யநினைத்த அசட்டுக் காரியத்தை என் கணவர் அறவே மறந்து விட்டார்,

அடுத்து எனக்குப் பிறந்த ஆண் குழந்தை, என்னை எல்லாவற்றையும் மறக்கச் செய்து, என் மனத்தில் அமைதியை நிலைநாட்டியது.

அது மட்டுமல்ல.

இன்னும் எத்தனை குழந்தைகள், ஆணாயிருந்தாலும், பெண்ணாயிருந்தாலும் சரி, பிறந்தாலும் அலுக்காமல், சமாளிக்கும் மன வலிமையையும் அளித்து விட்டது.

என்னை வாழ்விக்க வந்த ஒரு தெய்வமாகவே என் கணவர் காட்சி யளிக்கிறார்.

# பையைத் திறந்தான்!

குபேரா பாங்கியின் கம்பீரமான கட்டிடத்தின் வாசலில் நவ நாகரிகமான பெண்மணி ஒருத்தி நின்று கொண்டிருந்தாள். அவள் கையில் கனமான ஒரு பை வைத்திருந்தாள். அந்தப் பையை ஒருமுறை திறந்து கூர்ந்து பார்த்தாள். சாலையின் இருபுறமும் திரும்பித் திரும்பிப் பார்த்தாள். அவள் பார்வையில் ஒரு பீதியும் திகிலும் கலந்து காணப்பட்டன.

பிறகு மெதுவாகக் கீழே இறங்கிக் கையில் இருந்த பையை ஜாக்கிரதையாகப் பிடித்துக் கொண்டு கடற்கரையை நோக்கி நடந்தாள். நடக்கும்போதே அப்படியும் இப்படியும் பார்த்துக் கொண்டு நடந்தாள்.

ஜன நெருக்கடி நிறைந்த நகரத்தில் எந்த நேரத்தில் என்ன நடக்கும் என்று யார் எதிர் பார்க்க முடியும்?

அதிலும் ஒரு பெண்மணி தன்னந் தனியே பாங்கியில் இருந்து கையில் கனமான பையுடன் வெளியே வந்தால் எது வேண்டுமானாலும் நிகழலாம் அல்லவா?

அந்தப் பெண்மணி 'வீல்' என்று அலறினாள்; திகைத்துப் போய் நின்றாள்.

அவள் எதிரில் வேகமாக வந்த கார் ஒன்று நின்றது. அந்தக் காரின் கதவைத் திறந்து கொண்டு ஒரு வாலிபன் 'பொத்'தென்று கீழே குதித்தான். இரண்டு பக்கமும் தன் பார்வையைச் செலுத்தினான். மின்னல் வேகத்தில் அந்தப் பெண்மணியின் கையில் இருந்த பையை 'லபக்'கென்று பறித்துக் கொண்டான். மீண்டும் காரில் ஏறிக் கொண்டான். உடனே கார் மேக மண்டலம் போல் கரும் புகையைக் கக்கிக் கொண்டு கன வேகத்தில் மறைந்தது.

காரில் இருந்து கிளம்பிய புகையினால் கார் எந்தப் பக்கம் சென்றது என்பதைப் பெண்மணியால் தெரிந்துகொள்ள முடியவில்லை. புகையினால் அவள் அழகிய நீண்ட கண்கள் கண்ணீரில் மிதந்தன.

கண்களை ஒருதரம் கைக்குட்டையினால் துடைத்துக் கொண்டு ஒரு முறை குபேரா பாங்கின் கம்பீரமான கட்டிடத்தைப் பார்த்தாள். மௌனமாக நடந்தாள்.

** ** **

மனித நடமாட்டம் இல்லாத ஒரு இடத்தில் 'கர்ர்ர்' என்ற சத்தத்துடன் கார் நின்றது.

அந்த வாலிபன் மலர்ந்த முகத்துடன் காரிலிருந்து இறங்கினான். குபேரா பாங்கியில் இருந்து வந்த பெண்மணியிடம் பறித்த பையைத் திறந்து பார்த்தான். மிகுந்த ஆவலுடன் பையினுள் கையை விட்டான்.


அடுத்த கணம் அவன் முகம் பேயறைந்தாற்போல் காட்சி அளித்தது.

பையில் இருந்ததை எடுத்துப் பரிதாபமாகப் பார்த்தான். அது பெண்மணி பாங்கியில் மாற்றிய பணம் அல்ல. இறந்துபோன மூன்று பூனைக்குட்டிகள் தான்!

அந்தப் பூனைக் குட்டிகளை யாரும் அறியாமல் கடலில் எறிந்து விட்டு வருவதற்காகத்தான் அந்தப் பெண்மணி கடற்கரையை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள்.—காக்கா.


Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press,
No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras-10.

# 'பெர்க்கின்ஸ்' டீஸல் இன்ஜின்களையே பொருத்துங்கள்




பஸ்களுக்கும்
லாரிகளுக்கும்

ஏனெனில்



★ எவ்வித ரஸ்தாவுக்கும் பளுவுக்கும் ஏற்ற அதிக சக்தி
★ பராமரிப்புக்கிடையே கூடுதலான மைல்கள் ஓட்டம்
★ பெட்ரோல் இயந்திரத்தை விட மைலுக்கு மூன்றலு செலவில் சேமிப்பு
★ புகை ஏற்படாததோடு எண்ணை சேதாரமும் இல்லை
★ குறைந்த சிப்பேர் செலவுடன் சுலபமான பராமரிப்பு
★ எவ்வித சிரமமுமின்றி எளிதில் இயங்குவது
★ ஓட்டுபவர்களுக்கு மிகவும் சௌகரியம்

உங்களுக்கு அதிக செலவின்றி லாபமளிக்கிறது

## ஸிம்ஸன் & கோ., லிமிடெட்

மதராஸ்-2

பிராஞ்சுகள்: பெங்களூர்-உதகமண்டலம்-திருச்சிராப்பள்ளி-செகந்திராபாத்(Dn.)

இந்தியா முழுவதும் விற்பனையும் ஸர்விஸும் உண்டு

அருகாமையிலுள்ள உங்கள் 'பெர்க்கின்ஸ்' வியாபாரியை விசாரிக்கவும்


**REGISTERED No. M. 4392**
*Registered as a newspaper in Ceylon*



## க்ஷணத்தில் நுரையும் ஸன்லைட் அடித்துத்துவைக்காமலே
## வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்யும்



"ஸன்லைட் சோப் உபயோகித்து சலவை செய்யும் பொழுது அழுக்கு துணிகளிலிருந்து எவ்வளவு சுலபமாக திரண்டு வெளிவருகிறதென்று பாருங்கள். கைக்குட்டை முதல் படுக்கை விரிப்பு வரை எல்லா வெள்ளைத் துணிகளும் சில நிமிடங்களில் புதிது போல் வெண்மையாவதைப் பாருங்கள். அன்றியும் ஸன்லைட் அவைகளை நீடித்திருக்கச் செய்கிறது.



"கலர் துணிகளை பிரகாசமாகவும், கவர்ச்சியாகவும் சலவை செய்ய ஸன்லைட் சோப்பைப்போல் வேறெதுவுமில்லை என்பதை பசுமரத்து ஆணிபோல் மனதில் பதியவைத்துக் கொள்ளுங்கள். க்ஷணத்தில் பொங்கி வரும் நுரை அடித்துத் துவைக்காமலே அழுக்கை அகற்றி, வர்ணத் துணிகளை ஜ்வலிக்கச் செய்கிறது.




# ஸன்லைட் சோப்

துணிகளைக்காப்பாற்றுகிறது, சிரமத்தைக்குறைக்கிறது, பணத்தை மிச்சப்படுத்துகிறது

S. 222-50 TM

இந்தியாவில் தயாரித்தது